# சோதிடவாசகம்

## முதலாம் புத்தகம்



அளவெட்டி

**மு.சின்னப்பு**

**த.கணபதிப்பிள்ளை**

**2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சோதிட வாசகம்

## முதலாம் புத்தகம்

பதிப்பாசிரியர்:

பொ. சந்திரசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சோதிடவாசகம் : முதலாம் புத்தகம் |
| விடயம் | : | சோதிடக்கல்வி மாணவருக்குரியது |
| நூலாசிரியர்கள் | : | த. கணபதிப்பிள்ளை, மு. சின்னப்பு |
| பதிப்பு | : | 1ஆம் பதிப்பு 1959, 2ஆம் பதிப்பு 1971 3ஆம் பதிப்பு 2011 |
| பதிப்பாசிரியர் | : | பொ. சந்திரசேகரம் |
| பதிப்பு | : | கலா ஆரணி வெளியீட்டகம் 56/12, பொற்பதி வீதி, கொக்குவில். |
| பதிப்புரிமை | : | © வெளியீட்டகத்தாருக்கு |
| பக்கங்கள் | : | |
| அச்சுப்பதிப்பு | : | பாரதி பதிப்பகம்<br>430, காங்கேசன்துறை வீதி,<br>யாழ்ப்பாணம். |

| | | |
|---|---|---|
| **Title** | : | *Jothida Vachakam. First Book* |
| **Author's** | : | *T. Kanapathipillai. M. Sinnappu* |
| **Edilion** | : | *1st Edition 1959*<br>*2nd Edition 1971*<br>*3rd Edition 2011*<br>*A Publication of Kala Arani Publishers.*<br>*59/12. Potpathi Road.*<br>*Kokuvil.* |
| **Printed by** | : | *Bharathi Pathippakam.*<br>*430. K. K. S. Road.*<br>*Jaffna.* |
| **Phone:** | | *021 222 3081* |
| **I. S. B. N. No** | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம் எமது தந்தையாரின் குரு



மு. சின்னப்பு
அவர்களின் பாத கமலங்களுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | – | I |
| பதிப்பாசிரியர் ஆய்வுரை | – | II |
| ஆசிச் செய்தி | – | VII |
| 1. பாயிரம் | – | 1 |
| 2. நவக்கிரகங்கள் | – | 9 |
| 3. நட்சத்திரங்களும் இராசிகளும் | – | 12 |
| 4. கிரகங்களின் சஞ்சாரம் | – | 19 |
| 5. கிரகப்புடம் | – | 24 |
| 6. இலக்கினப்புடம் – உத்தேசப்புடம் | – | 28 |
| 7. மத்திமபுடம் | – | 31 |
| 8. சென்ம நட்சத்திரம், சந்திரலக்கினம், இராசிநிலை | – | 40 |
| 9. நவாம்ச நிலை | – | 45 |
| 10. மகாதசாபுத்தி | – | 53 |
| 11. நேரம் | – | 58 |
| 12. நட்சத்திர நேரமும், சுத்த இலக்கினப்புடமும் | – | 68 |
| 13. உதாரண விளக்கம் | – | 72 |
| 14. அனுபந்தம் | – | 89 |
| 15. உசாத்துணைநூல்கள் | – | 102 |
| 16. மாணவருக்கு ஏற்ற கட்டுரைகள் | – | 103 |
| 17. அளவெட்டித் தனிமுறைக் கோட்பாடுகள் | – | 104 |
| 18. இராசிமானம் | – | 107 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. கந்தையா நினைவு மலர் வரிசை - 2



# சமர்ப்பணம்

எமது தந்தையாரின் பாத கமலங்களுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இடம் பெயாந்து அல்லலுற்ற இரு தசாப்தங்களிலும் எமக்கு இறுதிவரை நன்னெறி காட்டி ஒரு தந்தையின் கடமையை முற்றாகச் செய்துமுடித்து, போரின் மத்தியில் தம் உடையார்கட்டு இல்லத்தில், சுற்றம் சூழ இருந்து தம் உலக வாழ்வை அமைதியுடன் முடித்து, அநாயாச மரணம் என்ற அதிட்டப் பேற்றை அடைந்தவர் எம் தந்தை இ. கந்தையா அவர்கள். நெடுந்தீவிற் பிறந்து, கரம்பனில் பல தசாப்தங்கள் வாழ்ந்து, 1990ல் இடம் பெயர்ந்தும், அசையாத மன உறுதி யுடன் புது வாழ்வை ஆரம்பித்து, காடு கெடுத்து நாடாக்கி, சோலை நிலத்தில் மகிழ்ச்சியுடன் 'ங'ப்போல் வளைந்து இடம் பெயர்ந்த சுற்றத்தார் அனைவரையும் அணைத்து, விருந்து அருந்தித் தம் இறுதி நாட்களைக் கழித்தார். இறுதிப் போருக் குச் சில மாசங்களுக்கு முன் தமது இறுதி மூச்சை விட்டார். அன்னாரின் நினைவுமலர் பெருமளவு ஆயத்தமாகியும், அச்சு வாகனம் ஏறத் தாமதமாகியது. தமிழாசிரியராகிய அவர் பெய ரில் ஆண்டுக்கு ஒரு நூலையேனும் உலக உபகாரமாக வெளி யிட வேண்டும் என்ற ஆசை எம் உள்ளத்தில் உதித்தது. அவர் உயிரினும் மேலாக நேசித்த சோதிடக் கல்வியை வள ரும் இளைஞர் மத்தியில் பரப்ப ஒரு சந்தர்ப்பம் வந்ததால், இந்நூலைத் தக்க இளம் கல்விமான் மூலம் வெளி யிட முன் வந்தோம். திரு. பொ. சந்திரசேகரம் இப்பொறுப்பை ஏற்றார். அவருக்கு எமது நன்றிகள்.

எம் வேண்டுகோளை ஏற்று, இந்நூலை வெளியிட, மனமு வந்து அனுமதிதந்த சின்னப்பு ஆசிரியரின் பெறாமகள் மங்கயர்க்கரசி கெங்காதரன் அவர்களுக்கும், அவர் மைந்தன் Dr. க. இந்திரமோகன் அவர்களுக்கும் எமது மனநிறைந்த நன்றிகள்.

பாரதி பதிப்பகம் ஐ. சங்கர் மிகக் குறுகிய காலத்தில் அழகுற அச்சடித்து தந்தார். அவருக்கும் எம்பாராட்டுகள்.

**கலா ஆரணி வெளியீட்டகம்**
**பொற்பதி வீதி,**
**கொக்குவில்.**

*- க. முகுந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர் ஆய்வுரை

**'ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி' (அப்பர் பெருமான்)**

வேத அங்கங்களாகிய வியாகரணம், சோதிடம், நிருக்தம், சந்தஸ், சிட்சை, கல்பம் என்ற ஆறும் வேதத்தை உணரு வதற்கு அவசியமான கருவி நூல்கள். இவைகள் வெறும் நூல்கள் மட்டுமல்ல. வேதம் போலவே அகக்காட்சியால் காணவேண்டிய மெய்யறிவு நூல்கள். இவை தோன்றும் புத்தி விருத்தித் தானங்கள் ஞானம், அமிர்தம், மோட்சம், காமம், அர்த்தம், தர்மம் என அளவெட்டியூர் மௌனதவ முனிவர் பொ. கைலாசபதியவர்கள் காட்டியுள்ளார். தர்மார்த்த காம மோட்சங் களுக்கு மேலே புத்தியில் உயர்ந்து அமிர்த தளத்தைக் (மரணமில்லாப் பெருவாழ்வு நிலை) காணக்கூடிய ஒருவருக்கு மட்டுமே சோதிடம் அறியும் வாய்ப்பு சித்திக்கும்.

இவ்வளவு உயர் பெருமை வாய்ந்த சாத்திரம் அநுபூதி நெறியாளர் எவரும் பாராட்டிப் பயிலும் சிறப்பு மிக்கது. வேத காலம் என இன்றைய வரலாற்றறிஞர் வகுக்கும் தொன்மைக் காலத்தில் மட்டுமன்றி, இந்து மதம் என்று அழைக்கப்படும் - சநாதன தர்மத்தின் பொற்காலம் என்று பாராட்டப்படும் குப்தர் காலத்திலும் ஆட்சியாளரின் பூரண ஆதரவு பெற்ற சாஸ்திர மாகச் சோதிடம் விளங்கியது. வராஹமிஹிரர் அரச அவை யின் ஆஸ்தான சோதிடராய், சோதிட நிபுணர் குழாத்தின் தலைவராய்த் திகழ்ந்தார். சுதேச சோதிட - வானியல் மரபு களுடன் மேற்கிலிருந்து வந்த (அலெக்சாந்திரியா நகரத்தில் தொலமிகளால் செய்யப்பட்ட) பௌலீச சித்தாந்தமும் ஒப்பீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் ஆராயப்பட்டது. 'போல்' (Paul) என்ற வானியல் நிபுணரின் கணித முறை அது. சூரிய சித்தாந்தம் போன்றவை இந்தியாவின் சொந்த வானியற் கணித முறையாம். லீலாவதி கணிதம் என்ற வானியல் உயர் கணக்கு முறையை வகுத்தவர் ஒரு பெண் என்பர்.

மறுமலர்ச்சிக்கால ஐரோப்பிய வானியல் நிபுணர் கெப்ளர், 17 ஆண்டுகள் வானத்தை அவதானித்து, கிரகங்கள் நீள் வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றுகின்றன எனக் கண்டறிந்த விஞ்ஞானியாவார். அவருடைய பதவி தூய உரோமப் பேரரசன் 5ஆம் சாள்சின் அவைக்களச் சோதிடர் என்பதாகும். இன்றும் ஐரோப்பாவில் சோதிடம் கணிப்பதும், நூற்றுக் கணக்கான ஆய்வுநூல்கள் வெளிவருவதும் சாதாரணமாக நிகழ்வதை நாம் அறியோம். எமது பின்புலத்தில் சோதிடம் கற்றவர்கள், மேனாட்டுச் சோதிடக் கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டம் பெற்றுத் திரும்பிவந்து, மேனாட்டாரின் கணித நுட்பத்தை (accuracy) பாராட்டுவதோடு, பலன் சொல்வதில் (prediction) நம் சாஸ்திர நூல்கள் மிகச் சிறந்து விளங்குகின்றன என விளக்குகின்றனர். இந்திய ஆய்வு நிறுவனங்களிலும் வானியல் சார்ந்த சோதிடம் பெரிதும் வளர்ந்துள்ளது. சாதகம் எழுதும் கலையும் கணினி மயப் படுத்தப் பட்டுள்ளது. முன்பு ஆறுமாதம் எடுக்கும் தசாபுத்தி, அந்தரம் கணிக்கும் வேலை இப்போது கணினியில் ஒரு நிமிடத்தில் காணக்கூடிய அளவு நவீன விஞ்ஞானம் சோதிடக் கலைக்கு உதவியுள்ளது. புதிதாக வளரும் விஞ்ஞானப் போதையில் (Scientism) மூழ்கியவர்கள் மட்டுமே சோதிடத்தை மூடரின் பொழுதுபோக்கு என்பர். "சோதிடந்தனை இகழ்" என்ற பாரதியின் ஆத்திசூடியை வேதவாக்காக எடுத்துள்ளனர்.

கல்வித்துறையில் கால் பதித்த எனக்கு, இவ்வாண்டு க.பொ.த. உயர்தர இந்து நாகரிகத்தின் புதிய பாட விதானத்தில் "சோதிடமும் வானியலும்" என்ற விடயம் புதிதாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுத்தப்பட்டதால், அவ்வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழிகாட்டற் கருத்தரங்குகள் வைக்கும் பணி தரப்பட்டது. இதனை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு, அத்துறையில் கவனம் செலுத்தினேன். பொ.கைலாசபதியவர்களின் சிந்தனைகளில் சோதிடம் பற்றிய குறிப்புகள் அதன் பெருமையை உணர வைத்தன. ஆ. சபாரத்தினம் அவர்கள் மேலும் அது பற்றிய சில நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார். பொ. கைலலாசபதி மனத்தில் கண்டவற்றை ஒரு குறிப்பு. கணிப்பு, கடதாசி இல்லாமல் சோதிடம் பற்றிக் கூறுவாராம். அவரது ஞானகுரு பன்னாலை இரத்தினசபாபதி உபாத்தியாயர், சோதிடத்தை ஆறங்கத்துள் ஒன்று என உச்சிமேல் வைத்துப் போற்றினாராம். தாமே அதில் திறமை பெற்றிருந்தாராம். அந்த மகானை, பதினேழு (17) ஆண்டுகள் அளவெட்டிக் கிராமத்தில் குடியமர்த்தி, கலட்டிப்பகுதியில் தனிமையான குடிசை யமைத்து, உணவு சமைத்துச் சேவைசெய்தவர் அளவெட்டி மு. சின்னப்பு ஆசிரியர். அவரிடம் சித்தியார் முதலிய சித்தாந்த சாத்திரங்களைக் கேட்டார் எனினும், ஞானப் பாதையில் தாம் செல்ல மேலும் தகுதி வேண்டும் என்ற கருத்தில் அவரது சோதிடக் கலையை ஊன்றிக் கற்றார். அவருக்குச் சமைத்து வைத்துவிட்டு, கோப்பாய்க்குச் சென்று படிப்பிப்பது மிகக் கஷ்டமாயிருந்ததால் ஓய்வு பெற்றார், 45 ரூபா சம்பளத்தில். உபாத்தியார் தேகவியோகம் எய்திய பின் (1945), முழுக்க முழுக்க சோதிடத்துக்கே தம்மை அர்ப்பணம் செய்தார். ஊரவர்கள் அவரது ஆற்றலை அறிந்து, அடிக்கடி சோதிட விடயங்களுக்கு அவரிடம் வந்தனர். தனியே எழுத முடியாத படியால் ஒரு இலிகிதரை வைத்தார். அச்சுச் செலவுகள் அதிகமாயின. நண்பர்கள் சொற்படி சிறுதொகை (5 ரூபா) ஒரு சாதகத்துக்கு வாங்கினார். அப்படி சோதிடக் கலையைப் புனிதமாக நோக்கி உலோகோபகாரமாகச் செய்ததால் கலையில் பூரண தேர்ச்சி எய்தினார். திருக்கணித முறையைப் பின்பற்றினார். கல்கத்தா ephemeris என்னும் வானியல் கலண்டர் புத்தகத்தையும் லாஹிரி பஞ்சாங்கத்தையும் ஆண்டு தோறும் வருவித்துப் பயன் படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பெருமைகளை அறிந்து பழகிய ஆ. சபாரத்தினம் அவருக்குக் கரம்பன் வாசரான ஆசிரியர் கந்தையாவை அறிமுகம் செய்தார். கந்தையா அவரிடம் பக்தி விசுவாசமாகச் சோதிடக் கலையைக் கற்றார். மாணவனின் ஆற்றலைக் கவனித்த சின்னப்பு ஆசிரியர் அவருக்குத் தாம் புதிதாக ஆக்கிய கணிப்புகள் (tables) போன்ற உபகாரக் கையேடுகளை அளித்தார். பின்னர் அவரைத் தனியே சோதிட ஆலோசனை நிலையம் ஆரம்பிக்க அனுமதியளித்து, தனது முத்திரை போன்றவற்றையும் அச்சடித்த சாதகக் குறிப்பு எழுதும் கொப்பிகளையும் கையளித்தார். கந்தையா குரு சோதிடநூல் எழுதும்போது உடனிருந்து உபகரித்ததுடன் நூல் வெளிவந்தபோது, ஆர்வலர் பலருக்கு அதை வழங்கியும் அதன் பரவுதலுக்கு வழிசெய்தார். இந்நூலை ஆசிரியர் எழுதியதன் நோக்கம், சோதிடம் என்ற உத்தம உயர் சாத்திரம் தகுதியில்லாதார் கைப்பட்டு, வர்த்தகப் பொருளாகி விட்டதே என்ற கவலையே ; கல்வியறிவுடையோர் அதனைப் படித்து, தாமே சாதகக்குறிப்பு எழுதும் திறமைபெற்றால், ஏமாற்றுச் சோதிடாகளின் வஞ்சகவித்தைகள் மறைந்துவிடும் என்பதாகும்.

இந்நூல்பற்றிக் கேள்விப்பட்டதும், அதனைப் படித்து இயலுமானால் மாணவர் படிக்கப் பயன்படுத்த வேண்டும் என்ற வேணவா மனத்தில் எழுந்தது. கந்தையா ஆசிரியரின் பிள்ளைகள் தந்தை பெயரால் நூல்கள் பதிப்பித்து, அவரது பெயர் விளங்கச்செய்யும் விருப்பு உடையர் என அறிந்தேன். நூலைப்பெற்றுப் படித்தேன். இக்கால உயர் வகுப்பு மாணவர் கூர்மதியும், விடயங்களை நோக்கும் திறனும் உடையவர்கள். அவர்கள் இதனைக் கற்று தம்வாழ்வில் கோணல்கள், ஏமாற்றுகளுக்கு இடம் கொடாமல் வாழ வழிபிறக்கும். சமயத்தை, சைவ வாழ்வியலை நன்னெறியில் செலுத்த முடியும் என நம்புகிறேன். இந்த நன்நோக்கத்தால் இதனைப் பதிப்பிக்க முன்வந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் கந்தையாவின் புதல்வாகளான **முகுந்தன்,** (B.Sc), **இளங்கோவன், கலாவல்லி பாலசுப்பிரமணியம்** (Diploma in Library Science) ஆகியவர்கள்,

**'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை**
**என்நோற்றான் கொல் எனும் சொல்'**

என்றபடி, தம் பிதிர்க் கடனை கல்வி வளர்ச்சிக்குப் பயன் படுத்தி, தம் தந்தையின் பெயர் கல்லில் பதிக்கப்படுவதைக் கண்டு மகிழ்கிறார்கள். அதன் மூலம் வருங்கால சைவத்தமிழ் இளந் தலைமுறையினரையும் சீரிய வாழ்வு வாழச் செய் கிறார்கள். அவர்கள் தென்புலத்தார் கடனை இறுத்து, முன னேழு, பின்னேழு சந்ததிகளும் ஆசீர்வதிக்கப்பட வழி செய் கின்றனர்.

**அவர்தம் பணி வாழ்க.**

*பொ. சந்திரசேகரம்*
**விரிவுரையாளர்**
**இந்து நாகரிகத் துறை,**
**யாழ். பல்கலைக் கழகம்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில்
திருக்கணித நிலையம்
வேதாகமம் சோதிட பூஷணம்
சி. சிதம்பரநாதக் குருக்களின் ஆசிச் செய்தி

# இலட்சிய வாத்தியாராகவும் சிறந்த சோதிடராகவும் விளங்கியவர்



கரம்பொனைச் சேர்ந்த சோதிடர் திரு. இராமலிங்கம் கந்தையா அவர்கள் ஆசிரியராகவும், அதிபராகவும், சோதிடராகவும் விளங்கியவர்.

அமரர் அவர்கள் பலாலி ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியர். நல்ல அதிபராகவும் விளங்கினார். ஆசிரியப்பணி செய்து வந்த காலத்தில் சோதிடக்கலையில் நாட்டம் பிறக்கவே அளவெட்டியைச் சேர்ந்த சோதிடர் மு. சின்னப்பு அவர்களிடம் சோதிடம் பயின்றார். திருக்கணிதத்தின் மேன்மையை உணர்ந்து திருக்கணித பஞ்சாங்கத்தைப் பாவிப்பதன் மூலம் எம்முடன் தொடர்பு கொண்டார்.

1978 ஆம் ஆண்டு முதல் நாம் “சோதிடமலர்” என்ற சோதிட மாத சஞ்சிகையை வெளியிட்டு வந்தோம். 1980 ஆம் ஆண்டளவில் நல்லை ஆதீனத்தில் “சோதிட ஆய்வு மன்றம்” ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அமரர் அவர்களும் யானும் அங்கத்தவர்களாக இருந்தோம். அதனால் அமரரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. சோதிட சம்பந்தமான பல கேள்விகளுக்கும் தயங்காமல் பதிலளிப்பார். “புயல்” என்ற புனை பெயரில் சோதிட மலருக்கு பல ஆக்கங்களை எழுதியுள்ளார். இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் அத்தியந்த நண்பரானார். திருக்கணிதமே தனது இலட்சியமாகக் கொண்டார். தேடி வந்த வாதங்களுக்கு பதிலளிக்காமல் விடவேமாட்டார்.

அவருடைய அழைப்பின் பேரில் கரம்பொன் சென்ற சமயம் என்னை வரவேற்று உபசரித்து அயலிலே வசித்த குருக்களையா வீட்டில் உணவு கொள்ள வைத்து வழியனுப்பி வைத்தது இன்றும் என் மனக் கண்ணில் தெரிகிறது.

எனது வேண்டுகோள் பிரகாரம் சோதிடமலரில் நட்சத் திர ரீதியாக வருடபலன் எழுதி வந்தார். அதைப் பலரும் பாராட்டினார்கள்.

1995 ஆம் ஆண்டு வலிகாமம் மக்களுடைய இடப் பெயர்வின் போது அவரும் இருப்பிடத்தை விட்டு வெளி யேறி அடியேனைச் சந்தித்து அளவளாவி விட்டு மகனு டன் வன்னி செல்வதாகப் புறப்பட்டார். அதன் மேல் அவரைச் நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டவில்லை.

04-10-2008 இல் அவர் இறைவன் பாதங்களை அடைந்தார். அவரது பிள்ளைகள் அவர் நேசித்த சோதி டக்கலையை வளர்க்கும் பொருட்டும் அவரது சோதிட ஆசிரியரக்கு நன்றிக்கடன் செய்யும் பொருட்டும் சோதிட வாசகம் முதலாம் புத்தகத்தை வெளியிடுகின்றார்கள். அவர்களது சேவை தொடர ஆசீர்வதிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# சோதிட வாசகம்

## பாயிரம்

**உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

*- சேக்கிழார்*

"உலகெலாம்" என்றது, நாமிருக்கும் இந்தப் பூமியையும், எமது கண்ணுக்குத் தெரியும் சூரியன் முதலான கிரகங்களையும், அசுவினி முதலான நட்சத்திரங்களையும், கண்ணுக்கு எட்டாதிருக்கும் வேறு கிரகங்களையும் தெரிந்தும் தெரியாமலு மிருக்கின்ற பல்லாயிரக் கணக்கான பிற நட்சத்திரங்களையுங் கொண்ட இந்த உலகத்தையும் அதனின் வேறாய பல்வேறு உலகங்களையும் குறிக்கும். மணிவாசகப் பெருமான்,

**'அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்கம்**
**அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி**
**ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன.'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறியது நாமிருக்கும் பூமியை அடக்கியிருக்கும் இந்த அண்டத்தை விட எம்மாலறியப்படாத கோடிக் கணக்கான வேறு அண்டங்களுமுள வென்பதை வற்புறுத்தும்.

இவ்வாறு கணக்கிட்டறியப்படாத அண்டங்களின் ஆக்கம் அளவு இறுதியாகிய இரகசியங்களை நாம் அறிதல் அரிது. இவற்றை யெடுத்துக் கூறும் வேதாகம புராணேதிகாசங்களை முற்றவுணர்ந்தவரை இக்காலத் திற் காண்டலும் அரிது. ஆதலால், எம்மறிவுக் கெட்டக் கூடிய இந்தப் பூமி, பூமியைச் சூழவிருக்குங் கிர கங்கள், நட்சத்திரங்கள் ஆகியவற்றின் தன்மைகளை யாவது நாம் ஓரளவிற்கு அறிந்திருத்தல் நன்று.

பூமியின் பல்வேறு பாகுபாடுகளையும் அதன் வளங்கள் பலவற்றையும் பூமிசாத்திர நூல்கள் எடுத் தியம்புகின்றன. வானத்திலுள்ள கிரகங்கள் நட்சத் திரங்களைப் பற்றி வானநூல்கள் கூறுகின்றன.

இப் பூமியிலுள்ள சீவகோடிகள் தோற்றும் அக் காலத்தில் கோள்களும் நட்சத்திரங்களும் நின்ற நிலையைக் கொண்டு அச் சீவகோடிகளின் தோற் றத்தைப் பற்றியும், தோற்றியபின் அவைகளாற்றும் நல்வினை தீவினைகளைப் பற்றியும் ஓரளவிற்கு நிச் சயிப்பதற்கேற்ற வழிவகைகளைச் சோதிட நூல்கள் காட்டுகின்றன.

இத்துணைப் பெருமை வாய்ந்த சோதிடத்தைப் பற்றிப் பராசரர், கார்க்கியர், வராகமிகிரர், யவனா சாரியர் முதலிய பெரியோர் அநேக நூல்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைக் காலத்தில் ஆக்கினர். அவை யாவும் வடமொழியிலேயே உள்ளன. அவற்றின் மொழி பெயர்ப்பு நூல்களோ அன்றி அவற்றை ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்ட நூல்களோ சாதாரண அறிவு படைத்த மனிதர் இலகுவில் விளங்கக்கூடியனவல்ல.

சோதிடம் குருமுகமாகக் கற்கவேண்டியதொரு சாத்திரம். முறைப்படி சோதிடத்தைக் கற்பிக்கத் தகுதி வாய்ந்த ஆசிரியரையாதல் அச்சாத்திரத்தைக் கற்க வேண்டுமென்னும் ஆர்வம் மிகுந்த மாணவரை யாதல் இக்காலத்திற் காண்பதரிது

பணமீட்ட லொன்றினையே பெரு நோக்காகக் கொண்டெழுதப்படுகின்ற சோதிடப் புத்தகங்கள் எங் கும் மலிந்து கிடக்கின்றன. இப் புத்தகங்களிற் சில, சோதிட சாத்திரத்துக்கே பெரியதோரிழுக்கை உண் டாக்கத்தக்க நிலையில் இருக்கின்றனவென்பதும், அவற்றைக் கற்றுச் சோதிடராவாரால் பொது மக்களுக் குப் பேரிடுக்கண் நேர்கின்றதென்பதும் புனைந்துரை யாகா. இக்குறைகள் தவிர்க்கப்பட வேண்டியது அவசியமேனும் அது நமது ஆற்றலுக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்ட தொன்றாகும். எனினும், இளைஞர் களுக்குச் சோதிட சாத்திரத்தில் ஆர்வம் பிறக்கச் செய்தல்கூடு மென்னும் ஆசையே சோதிட வாசகத் தின் தோற்றத்திற்குக் காலாகும்.

பாடசாலைகளிற் கைக்கொள்ளப்படுங் கல்வி முறைகளிலொன்றாய சுய கரும முறை*யை ஓரள விற்குக் கைக்கொண்டு இச்சோதிட வாசகத்தில் வரும்

* Project Method.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களை அமைப்பதே எமது நோக்கம். இந்நியாயம் பற்றி ஆசிரியராயுள்ளார்க்கும் இப்பாடங்களில் ஆர்வமுண்டாகலாம். இங்கு எடுத்துக் கொள்ளப்படும் சுயகருமம் ஒரு பிள்ளை பிறந்த நேரத்தைக் கொண்டு ஒரு சாதகக் குறிப்பு எழுதுவதே யாகும்.

விடய விளக்கத்தைக் கருத்திற் கொள்ளாது ஒரு குறிப்பெழுதும் முறையைக் கூறப்புகின் இரண்டு மூன்று பாடங்கள் போதியனவாகும். விஞ்ஞானம் முதலிய சாத்திரங்களைக் கற்பதுபோலச் சோதிட சாத்திரத்தையும் இயன்றவரை விளக்கமாய்க் கற்க வேண்டுமென்பதைக் கருத்திற் கொண்டு எழுதப் புகுந்தமையால், பாடங்கள் சிறிது விரிவாக எழுதப் படுமென்க. இந்நூலில் உள்ள பாடங்களை வரிசைக் கிரமமாகப் படிக்காது இடையிடையே சிற்சில பகுதி களை மட்டும் பார்ப்போர் விடயத்தை விளக்கமாக அறிந்துகொள்ளமாட்டார். பாடங்கள் எழுதப்படும் ஒழுங்கிற் கருத்தூன்றிக் கற்றுவருவோர் பாட முடிவில் விடய விளக்கத்தோடு சாதகக் குறிப்பெழுதத்தக்க அறிவும் பெறுவார்களென்பது துணிபு.

சோதிட சாத்திரத்தைக் கற்று அநுபவமுறையிற் பரிசீலனை செய்யாத சிலரிடையே அதனைப் பற்றிய தப்பபிப்பிராயங்களுமுள. "ஐசாக் நியூற்றன் என்னும் மேலைநாட்டு விஞ்ஞான பண்டிதர் சோதிடத்திற் குருட்டு நம்பிக்கை கொண்டுள்ளாரென வானசாத்திர ஆராய்ச்சி வல்லுநராய" கலி என்பவர் கூறியபோது நியூற்றன் விகடமாகக் கூறிய பதில் நன்கு சிந்திக்கத் தக்கது. நியூற்றன், கலியை நோக்கி, "ஐயா கலியவர்

* Sir. Isaac Newton *(1642 - 1727)* Halley *(1656 - 1742)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே, நான் சோதிடத்தைக் கற்றிருக்கிறேன். நீங்கள் அதனைக் கற்கவில்லை" (I have studied the subject Mr. Halley you have not.) என ஆணித்தரமாகக் கூறினார்.

இன்னும், " A most unfailing experience of the course of mundane events in harmony with the changes occurring in the heavens has instructed and compelled my unwilling belief" அதாவது, "வான மண்டலத்தில் நிகழும் மாற்றங்களுக்குத்தக இப் பூமண்டல நிகழ்ச்சிகளும் ஒழுங்கிற் சிறிதுந் தவறாது எதிர்பார்த்திருந்தபடி கட்டாயமாக நடப்பதைக் கண்ட எனது அநுபவம், நம்பிக்கையற்றிருந்த எனக்கு நம்பிக்கையைப் பிறப்பித்து அதனைக் கடைப் பிடிக் கும்படி வற்புறுத்தியது." என்பதும் ஐசாக் நியூற்றனின் அநுபவம் வாய்ந்த கூற்றாகும். உலகப் பிரசித்திபெற்ற விஞ்ஞான சாத்திரியாய நியூற்றன் குருட்டு நம்பிக்கை வைக்காது வான சாத்திரம், சோதிடசாத்திரம் என்னு மிரண்டையும் ஆராய்வாகக் கற்றதன்பேறாகவே இம் முடிபு கொண்டாரென்பதை அவர் கருத்து நன்கெடுத் துக் காட்டுகின்றது.

ஒருமணித்தியாலத்தில் ஒளிக்கதிர் அறுபத்தேழு கோடி "கல்" *தூரத்தைக் தாண்டிச் செல்கின்றதென விஞ்ஞானிகள் கூறுவர். எனவே, ஒரு வருடத்தில் ஒளி செல்லக்கூடிய தூரம் 67,000,000,0 x 24 x 365 "கல்" தூரமாகும். எமக்கு மிகக் கிட்டிய தூரத்தில் இருப்ப தாக அறியப்படும் ஆகாயபுரவி என்னும் நட்சத்தி

* கல் - Mile $\frac{5}{8}$ மைல் = கி. மீ (1960 க்கு முன் ஆங்கில ஏகா திபத்தியம் அடங்கிலும் வழக்கிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்திலிருந்து பூமிக்கு ஒளி வந்துசேர 4½ வருடங்கள் செல்லுமென அறிகின்றோம். இஃதிவ்வாறெனில் இப்பூமியைச் சூழவிருக்கும் நட்சத்திரங்கள் எவ்வளவு வித்தாரமான வெளியில் சஞ்சரிக்கின்றனவென்பதை நம்மாற் சிந்தித்துணர முடியுமா? இத்தகைய நட்சத்திரங்கள் இவற்றின் வேறாய கிரகங்கள் என்பனவற்றின் இயல்பை உள்ளவாறறிந்து அவை மனித வாழ்க்கையைச் செயற்படுத்துமாற்றை வரையறை செய்ய இருடிகளால் மட்டுமே முடியுமென்பது நூதன மன்று.

விஞ்ஞான பண்டிதர்கள், இன்ன இன்ன விடயம் இப்படி யிப்படி யிருப்பின் அவ்வவற்றின் முடிபு அப்படியப்படியாகுமென அநுமானித்து ஈற்றிற் பலர்க்கும் ஒப்ப முடிந்ததொரு முடிவிற்கு வருகின்றனர். ஒரு முறை சரியானதெனப் பலரும் உடன்பட்டதொரு விடயம் பின்னர் பிழையானதென மறுக்கவும்படுகின்றது. பின்னர் அவ்வுண்மை வேறொரு வகையாகவும் உருப்பெறுகின்றது.

சோதிட சாத்திர நிபுணரும் இன்ன இன்ன நிலையில் இன்ன இன்ன நட்சத்திரத்தில் இன்ன இன்ன கிரகமிருப்பின் அந்நேரத்திற் றோன்றிய ஒரு மனிதனின் அநுபவம் இப்படியிப்படியாகலாமென அநுமானித்து, அவ்வநுமான முடிபுகளைப் பல முறை களிலும் பரீட்சித்து ஒருமுகமான முடிபிற்கு வந்தன ரெனக் கொள்வது பொருத்தமானதே. இம் முடிபுகளை வெளியிட்டோர் இருடிகளாதலால் அவை பிழைபடாது நடைபெறக் காண்கின்றோம்.

"காலத்திற்குக் காலம் சோதிட விடயங்களில் நிகழும் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு அம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களுக்கேற்ப இந்நூலின் விதிகளையுஞ் சரிப்பட அமைத்துப் பலன் காண்க" என ஆணை தந்து ஒரு இருடி நூல் செய்து வைப்ப, மாற்றங் களைப் பற்றிய பிரச்சினைகளையே ஒதுக்கி வைத்து விட்டு அந்நூலின் பழைய விதிகளுக் கிணங்கச் சோதிடங் கூறுதலோடமையாது அவ்வாறு தாங்கூறு வதற்கு ஆதாரம் இருடிவாக்கென அஞ்சாது கூறு வாருமுளர். இவ்வாறான பிழைகளை இருடிகளும் சோதிட சாத்திரமுமா, தலைகொடுத்துச் சுமக்க வேண்டும்?

ஆழமும் நுட்பமும் புனிதமும் வாய்ந்த சோதிட சாத்திரத்தை ஒருசில மாதங்களிற் கற்றறிவோ மென்றிருப்பார்க்கும் பத்திரிகை மூலம் படித்துப் பாண்டித்திய மெய்துவோமெனக் கருதுவார்க்கும் யாங்கூறத் தகுந்தது யாதுமில்லை. அவ்வாறாயின் "சோதிட வாசகம்" வெளிவரக் காரணம் யாதென அன்பர்கள் கடாவக் கூடும். அவர்களுக்கு யாங் கூறுவது இது:- சோதிட நூல்கள் இரகசிய நூல் களல்ல : அவை படிக்கவேண்டிய நூல்கள் ; அறிய அறிய ஆனந்தம் பயக்கும் நூல்கள் என்றின்னோ ரன்ன கருத்துக்களை வெளிப்படுத்திச் சோதிட சாத் திரத்தில் மாணவர்களுக்கு ஆர்வம் பிறக்கச் செய் வதே "சோதிட வாசகம்" வெளியிடும் நோக்கமாகும். அன்றி இதன் வாயிலாகச் சோதிட சாத்திரத்தை முற்றாய்க் கற்பித்துவிடலா மென்பது எமது கருத் தன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிச் சிலர், "சோதிடம் ஓர் அந்தரங்க சாத்திரம் : அதைப் படித்தும் படிப்பித்தும் பகிரங்கமாக்க முயல்வது, தேவநிந்தை", எனக் கருதுவர். அவர்களுக்கு விரிவாக விடைகூற இக்கட்டுரை இடந் தராதேனும் சில வார்த்தைகள் கூறுவாம். சோதிடம் வேதாங் கங்கள் ஆறினுள் ஒன்றாகுமாயின் அஃது அந்தரங்க மானதாகுமா? அஃது அவசியங் கற்க வேண்டிய கலை யாகுமன்றோ? அதைக் கற்றவர்களுக்கு அநுபவ வாயிலாகச் சிலபல உண்மைகள் தெரிந்தால் அவை அவர்களிடமுள்ள தெய்வபக்தியை அதிகரிக்கச் செய்து மானிட யாக்கை பெற்றதன் பயனை நினைந் துய்ய உறுதுணை பயக்குமன்றோ.

இந் நியாயங்கள் பற்றிச் சோதிடத்தில் ஆர்வம் பிறக்கச் செய்யும் நோக்கமாக இந்நூல் எழுதப்படு கின்ற தென்க.

David Frawley's Vedic Astrology Correspondence Course

This course teaches the fundamentals of Vedic astrology through an explanation of the planets, signs, houses, aspects, harmonic charts, planetary periods and principles of chart interpretation. In addition, it sets forth the astrology, of healing based upon the combined use of Ayurveda and Vedic astrology, explaining remedial measures of diet, herbs, gems, colors, mantras, yantras and deities. Spiritual and karmic aspects of astrology are stressed, astrology as a means of self - knowledge and attunement to the cosmic mind.

**- American Institute of Vedic Studies**
**P. O. BOX 8357, SANTA FE, NM 87504 - 8357**
**(505) 983 - 935**
**U. S. A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சோதிட வாசகம்

## முதலாம் பாடம்

## நவக்கிரகங்கள்

(சூரியன் பூமியைச் சுற்றி ஓடுவதில்லை. பூமியே சூரியனைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கிறது, என்னும் உண்மையைப் பகிரங்கமாக எடுத்துக்கூறிய கொப் பேணிக்கஸ் (Copernicus) என்பார் தேவநிந்தை செய் தாரெனக் குற்றஞ் சுமத்தித் தண்டிக்கப்பட்டார் என்று சரித்திரத்தால் அறிகின்றோம். சூரியனைப் பூமி ஏறத் தாழ 365 நாள்களிற் சுற்றி வருகின்றது. இங்ஙனஞ் சுற் றும் பொழுது பூமி, அச்சில் சுழலும் வண்டிச் சில்லுப் போல, எப்பொழுதுஞ் சுழன்றுகொண்டேயிருக்கின்றது. அது ஒரு முறை சுழல 24 மணித்தியாலஞ் செல்லும். இன்று கல்வி பயிலும் மாணவர்களுக்கு இவை சாதாரண விடயங்களாகி விட்டன.

இங்ஙனம் சுழன்றவண்ணம் இருக்கும் பூமி அதி லிருக்கும் மனிதர் கண்ணிற்குச் சலனப்படாது நிலையா யிருப்பது போலவுந் தெரிகிறது. இதனை ஓடும் புகை வண்டியிற் பிரயாணஞ் செய்யும் மனிதர் கண்ணிற்கு அப்புகைவண்டி நிலையாயிருக்க அப் புகைவண்டி வீதியின் அருகிலுள்ள மரங்கள் ஓடுவதுபோலத் தோற்றுவதற்கு ஒப்பிடலாம். புகைவண்டி நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயராது நிற்க மரங்கள் ஓடுகின்றன என வைத்து, வேகம் ஆகியனவற்றைக் கணிப்பதற்கும், மரங்கள் நிலைபெயராது நிற்கப் புகைவண்டி ஓடுகின்றதென வைத்துக் கணிப்பதற்கும் கணிப்பளவிற் பேதமில்லை. ஆகவே சூரியன் பூமியைச் சுற்றி ஓடாதிருந்தபோதும், அதுவும், சந்திரன் முதலாய ஏனைய கிரகங்களும் பூமியைச் சுற்றி ஓடுகின்றனவென வைத்துக் கணித் தறிவதும் பலனளவிற் பிழையாகாது. சோதிட நூலார் பூமியை மத்தியாக வைத்துச் சூரியன், சந்திரன் முத லான கிரகங்கள் பூமியைச் சுற்றியோடுகின்றன வெனக் கொள்வர்.

பூமியைச் சுற்றி ஓடுவனவாகக் கூறப்படுங் கிரகங் களுட் பிரதானமானவை ஒன்பதென்பர். இத்தொகை பற்றி அவை நவக்கிரகங்கள் என வழங்கப்படும். அவையாவன சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது என்பனவாம். இவற்றுள் முதற்கண்ணுள்ள சூரியன் சந்திரன் என்னும் இரண்டும் பிரதான கிரகங்களாகக் கொள்ளப்படும். இவற்றிற்குப் பிதிர்க்கிரகங்கள் இராசக்கிரகங்கள் என்னும் பெயர்கள் வழக்காற்றிலுள்ளன. இறுதியிற் கூறப்பட்ட இராகு கேதுக்கள் இரண்டும் ஏனைய கிரகங்களைப்போற் கண்ணிற்குப் புலப்படுவனவல்ல. ஆதலாற் சாயா (நிழல்) கிரகங்களென இவை வழங் கப்படும். நடுநின்ற ஐந்தும் குசாதி பஞ்சக்கிரகங்க ளெனப் பெயர்பெறும். செவ்வாயை வடநூலார் குஜன் என்பர். இவ்வொன்பதையும் விட யூறனேஸ், நெப்ரி யூன், புளூற்றோ என்னும் மூன்றும் இக்கால மேனாட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிட நூல்களிற் சேர்க்கப்பட்டு வருகின்றன. யூறனேசை இந்திரனெனவும், நெப்ரியூனை வருணன் எனவும் இந்நாட்டில் வழங்குவர்.

நட்சத்திரங்கள் தாமே பிரகாசிக்குந் தன்மை யுள்ளனவெனவும், கிரகங்களுக்கு அத்தன்மையின் றெனவும் வானசாத்திரங் கூறும். சூரியன் வேறொன்றின் ஒளியைப் பெறாது தானாகப் பிரகாசிக்குந் தன்மை யுளதாதலால் அதனையும் நட்சத்திரமாகவே கொள் ளல் வேண்டும். இஃது இவ்வாறாகச் சூரியனை நட்சத் திரங்களுட் சேராது கிரகங்களுள் ஒன்றாகச் சோதிட நூலார் சேர்த்திருப்பதன் காரணம் ஆராய்தற்குரியது.

நட்சத்திரங்கள் நிலையாயுள்ளன வெனவும், கிரகங்கள் அசையுந் தன்மையுள்ளன வெனவும் பொதுவாகக் கூறப்படினும், நட்சத்திரங்களுக்கும் அசைவுண்டென்பது வானநூற் கொள்கையாகும். இது சோதிடத்தில் எவ்வாறு தொடர்புபட்டிருக்கின்ற தென் பது ஆராயப்படவேண்டிய தொன்றாகும்.

CONSTRUCTING THE HOROSCOPE



Fig 3.2 South Indian Chart




Fig 3.3 North Indian Chart



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் பாடம்

# நட்சத்திரங்களும் இராசிகளும்

வானத்திற் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் காணப் படுகின்றன வெனினும், சோதிடக் கணிப்பிற்கு அவற் றுள் இருபத்தேழு நட்சத்திரங்கள் பிரதானமானவை யாம். அவையாவன:

| | | |
|---|---|---|
| அச்சுவினி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்தரம் | உத்தராடம் |
| உரோகிணி | அத்தம் | திருவோணம் |
| மிருகசீரிடம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுடம் | உத்தரட்டாதி |
| ஆயிலியம் | கேட்டை | இரேவதி |

என்பனவாம்.

நட்சத்திரங்களை வரிசைக் கிரமமாக மனனம் பண்ணுவது மாத்திரமன்றி, மேற்காட்டிய அட்டவணைப் படி இடமிருந்து வலம் நோக்கி அசுவினி, மகம், மூலம், பரணி, பூரம், பூராடம் எனத் தொடரும் முறைப்படியும் மனனஞ் செய்துகொள்ளல் சோதிட கணிதத்திற்குப் பேருதவியாகும்.

பூமியின் நிரட்சரேகைப் பாகத்திற்கு நேராக ஆகாயத்தில் இவ்விருபத்தேழு நட்சத்திரங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமாகச் சூழ்ந்திருக்கின்றன. இவ் வட்டம் நட்சத்திர மண்டலமெனப் பெயர்பெறும். சூரியன் ஓடும் வீதியும் இதுவேயாதலால் இது சூரிய வீதியெனவும் பெயர் பெறும்.

மேற்காணும் நட்சத்திரங்கள் இருபத்தேழும் தனித் தனி நட்சத்திரமல்ல திருவாதிரை, சித்திரை, சுவாதி மூன்றும் தனி நட்சத்திரங்கள், முப்பது தனி நட்சத்தி ரங்கள் சேர்ந்து மீன் போலத் தோற்றுவது இரேவதி யாகும். நூறு தனி நட்சத்திரங்கள் சேர்ந்து மலர்க் கும்பல் போலத் தோற்றுவது சதயமாகும். இதுபோல ஏனைய நட்சத்திரங்களும் தொகையிலும் வடிவிலும் வெவ்வேறான இயல்பையுடையன.

### நட்சத்திரங்களின் தொகையும் வடிவமும்

| நட்சத்திரம் | தொகை | வடிவம் |
|---|---|---|
| அச்சுவினி | 6 | குதிரைமுகம் |
| பரணி | 3 | அடுப்பு |
| கார்த்திகை | 6 | சௌரக்கத்தி |
| உரோகிணி | 12 | தேர் |
| மிருகசீரிடம் | 3 | தேங்காய்க்கண் |
| திருவாதிரை | 1 | இராசமணி |
| புனர்பூசம் | 6 | ஓடம் |
| பூசம் | 4 | புடலம்பூ |
| ஆயிலியம் | 4 | அம்மி |
| மகம் | 4 | முடநுகம் |
| பூரம் | 2 | கட்டிற்கால் |
| உத்தரம் | 2 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அத்தம் | 4 | கைத்தாளம் |
| சித்திரை | 1 | புலிக்கண் |
| சுவாதி | 1 | தீபம் |
| விசாகம் | 6 | சுளகு |
| அனுஷம் | 6 | முடப்பனை |
| கேட்டை | 4 | ஈட்டி |
| மூலம் | 6 | எக்காளம் |
| பூராடம் | 2 | பூம்பந்தற்கால் |
| உத்தராடம் | 2 | |
| திருவோணம் | 3 | முழக்கோல் |
| அவிட்டம் | 6 | மத்தளம் |
| சதயம் | 100 | மலர்க்கும்பல் |
| பூரட்டாதி | 2 | கட்டிற்கால் |
| உத்தரட்டாதி | 2 | |
| இரேவதி | 30 | மீன் கூட்டம் |

மேலே கூறிய நட்சத்திர மண்டலமாகிய வட்டம் 12 இராசிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் இவ்வட்டம் இராசிமண்டலம் எனவும் பெயர்பெறும். ஒரு வட்டம் 360 பாகை கொண்டதாதலின் ஒவ்வோர் இராசியும் 30 பாகை கொண்டதாகும். பன்னிரண்டு இராசிகளுக்கும் 27 நட்சத்திரங்களையும் வகுக்க ஓர் இராசிக்கு இரண்டேகால் நட்சத்திரங்கள் அமையும் ஒரு நட்சத்திரம் நான்கு பாதங்களாகப் பிரிக்கப்படும். எனவே ஓர் இராசிக்கு ஒன்பது பாதங்கள் அமையும். அச்சுவினியின் நான்கு பாதங்களும் பரணியின் நான்கு பாதங்களும். கார்த்திகையின் முதற்பாதமும் ஆகிய ஒன்பது பாதங்களும் அமைந்த இராசி **மேடம்** எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவினி நட்சத்திரத்தையும், பரணி நட்சத்திரத்தையும், கார்த்திகையின் முதற்பாதத்தையுஞ் சேர்த்துப் பார்த்தால் ஒரு மேடத்தின் வடிவம் தெரியும். மேடம் - ஆடு. மேடம் போலத் தெரிவதால் இவ்விராசி மேடராசியென வழங்கப்படுகின்றது. உருவத்தில் மாத்திரமன்றி, இது குணத்திலும் மேடத்தை ஒத்தி ருக்கும். ஆதலின் இவ்விராசியிற் சஞ்சரிக்குங் கிரகம் இதன் குணத்தையும் அநுசரித்துப் பலனை அமைக்கும்.

கார்த்திகை நட்சத்திரத்தின் பின் மூன்றுபாதத்தையும், உரோகிணி நட்சத்திரத்தையும், மிருகசீரிடத்து முன்னரையையும் சேர்த்துப் பார்த்தால் ஓர் இடபத்தின் வடிவம் தோன்றும், ஆதலால் இஃது இடபராசி எனப் பெயர்பெறும். இவ்விராசிக்கு இடபத்தின் குணமும் அமைந்திருக்கும். இவ்வாறே எல்லா இராசிகளும் தத்தம் தோற்றத்தையுங் குணத்தையுங் கொண்டு பெயர்பெற்றுள்ளன.

## இராசிகளின் பெயர்

| | | |
|---|---|---|
| 1. மேடம் | 5. சிங்கம் | 9. தனு |
| 2. இடபம் | 6. கன்னி | 10. மகரம் |
| 3. மிதுனம் | 7. துலாம் | 11. கும்பம் |
| 4. கற்கடகம் | 8. விருச்சிகம் | 12. மீனம் |

இப் பன்னிரண்டு இராசிகளின் பெயர்களையும் மேடம், இடபம் எனக் கீழ்நோக்கி நிரைப்படுத்தியும் மேட, சிங்க, தனு வென இடமிருந்து வலம் நோக்கி நிரைப்படுத்தியும் மனனஞ் செய்துகொள்ளல் சோதிட கணிதத்திற்குப் பேருதவியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட வடிவமாகவுள்ள இராசி மண்டலத்தை வசதிபற்றிச் சதுரவடிவான சக்கரமாக அமைத்துக் கிரக நிலை குறிப்பது சோதிட நூன் மரபு. அச்சக்கரம் பின் வருமாறமையும்.

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
| கும்பம் | **இராசியமைப்பு** | | கற்கடகம் |
| மகரம் | | | சிங்கம் |
| தனு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

இவ்விராசிகள் மேடத்தில் தொடங்கி இடபம் மிதுனமென * வலஞ்சுழியாயமைக்கப்படும். மேலைத் தேசச் சோதிடர் மேடம் முதலிய இராசிகளை இடஞ் சுழியா யமைப்பர்.

மேடம் முதலாயுள்ள பன்னிரண்டு இராசிகளின் வடிவமுங் குணமுங் கீழே காண்க.

| **இராசி** | **வடிவம்** | **குணம்** |
|---|---|---|
| மேடம் | ஆடு | பிடிவாதம் |
| இடபம் | மாடு | விடாப்பிடி |
| மிதுனம் | ஆணும் பெண்ணும் சேர்ந்த உருவம் | வாழ்க்கை ஐக்கியம் |

* மணிக்கூட்டியக்கம்போல = Clockwise.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கற்கடகம் | நண்டு | சாமர்த்தியம் |
| சிங்கம் | சிங்கம் | கம்பீரம் |
| கன்னி | பெண் | வசீகரம் |
| துலாம் | தராசு பிடித்த மனிதன் | நிதானபுத்தி |
| விருச்சிகம் | தேள் | ஆராய்ச்சி |
| தனு | அரைக்குமேல் கையில் வில்லுப்பிடித்த மனிதன், அரைக்குக் கீழ் குதிரை | ஆன்மசத்தி |
| மகரம் | சுறா | சேவை |
| கும்பம் | வெறுங்குடம் வைத்தி ருக்கும் மனிதன் | வெறுமை |
| மீனம் | ஒரு மீன்வாலை இன்னொரு மீன் கவ்விய இரட்டை மீன் | ஒளிக்குந் தன்மை |

## இராசிகளும் அவைகட்குரிய நட்சத்திரங்களும்

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால் மேடம்

கார்த்திகை பின்முக்கால், உரோகிணி,
மிருகசீரிடம் முன்னரை இடபம்

மிருகசீரிடம், பின்னரை, திருவாதிரை,
புனர்பூசம் முன்முக்கால் மிதுனம்

புனர்பூசத்து நான்காங்கால், பூசம்,
ஆயிலியம்............ கர்க்கடகம்

மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.......... சிங்கம்

உத்தரத்துப் பின்முக்கால், அத்தம்,
சித்திரையின் முன்னரை....... கன்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால் | துலாம் |
| விசாகத்து நான்காங்கால், அனுடம், கேட்டை | விருச்சிகம் |
| மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால் | தனு |
| உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை | மகரம் |
| அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் | கும்பம் |
| பூரட்டாதி நான்காங்கால், உத்தரட்டாதி, இரேவதி | மீனம் |

சோதிடம் வேதத்தைப் பிரகாசிப்பிப்பது. பாரதகண்டத்தில் வைதிக வாழ்வு வாழ்ந்து நற்கதி அடைபவர்கள் வேதநெறியில் நிற்க, வழிகாட்டி ஒளிகொடுத்து, பாதையைப் பிரகாசிக்கச்செய்வது சோதிடம். புத்திவிருத்தியில் மிக உயர்ந்த தளங்களை எட்டக் கூடிய தூய உள்ளத்தினரே இதனை விளங்குவர். 15 ஆம் தளம் ஞானம். அதில் 4 துறைகள் முதல் துறையைநோக்க வல்லவர் மூடநம்பிக்கைகளின் மூலத்தை உணர்வர். பல்லி சொல்வதைக் கொண்டு, வருவதை உணர்வது. பிராணன் எங்குமாய் நிற்கிறது. மனிதன் தான் விவேகி என்ற கர்வத்தால், பிராணசக்தி வழி நின்று மூலத்தை உணரான். பல்லி, காகம் முதலிய பிராணிகள் பிராணனின் தொழிற்பாட்டைக் கொண்டு சொல்லும். பிராணசுத்தி யுள்ளவன், அவை சொல்வதன் மூலத்தை உணர்வான். சோதிடத்தோடு அதை வைத்துப் பாராட்டுவான். பிறர் வெறும் மூட நம்பிக்கை என இகழ்வர். பெரியபுராணம் கழறிற்றறிவார் இதை அறிந்தவர்.

— பொ. கைலாசபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் பாடம்

# கிரகங்களின் சஞ்சாரம்

சூரியன் காலையில் உதித்து மாலையில் அத்தமித்து மீண்டும் மறுநாட் காலையில் உதயமாகின்றார். இவ்வாறே தினந்தோறுஞ் சூரியசஞ்சாரம் நிகழ்கின்றது. ஒருநாட் சூரியனோடு கூட உதிக்கு மொரு நட்சத்திரம் மறுநாள் இவர் உதிக்க ஏறக்குறைய நான்கு மினிற்றுக்கு முன் உதயமாகும். சூரியன் நட்சத்திர வகுப்பு இலக்கணம் பொருந்தியவரென முன்னர்க் கூறினோம். அங்ஙனமிருக்க இங்கு அவை தம்முள் உதயபேதங் கூறுவது எங்ஙனம் பொருந்தும்?

பூமி தன் அச்சிற் சுழல்வதோடு மாத்திர மமையின், சூரியனும் அதனோடு கூட உதித்த நட்சத்திரமும் என்று மொருமித்து உதயமாத லமையும் இச்சுழற்சி மாத்திரமன்றித் தினந்தோறும் பூமிக்கு ஒவ்வொரு பாகை இடப்பெயர்ச்சியுமுண்டு. இவ் விடப்பெயர்ச்சியினாலும், சூரியன் நட்சத்திரங்களிலும் பார்க்கப் பூமிக்கு அண்மையிலிருப்பதனாலும் அவ்வுதய பேதங்களமைகின்றன.

சூரியனைப் பூமி சுற்றியோடுவது போலவே மற்றக் கிரகங்களும் சூரியனைச் சுற்றியோடுகின்றன. ஒரு முறை சூரியனைச் சுற்றிமுடிக்கப் புதனுக்கு *88 நாளும்,

* இங்குக் கூறிய 88 நாளில், சுத்த கணிதப்படி அற்ப வித்தியாசம் உண்டு. இவ்வாறே ஏனைய கிரகங்களுக்குச் சொன்ன கால அளவுகளுமாம். இக்கால அளவுகள் மத்திம அளவுகளென வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்கிரனுக்கு 226 நாளும், பூமிக்கு $365\frac{1}{4}$ நாளும், செவ்வாய்க்கு 1 வருடம் 320 நாளும், வியாழனுக்கு 11 வருடம் 314 நாளும், சனிக்கு 29 வருடம் 168 நாளும், இராகு கேதுக்களுக்கு 18 வருடம் 8 நாளுஞ் செல்லும். சந்திரன் பூமியோடு சேர்ந்து சூரியனைச் சுற்றிவருகை யில் 29 நாள் 13 மணிக்கொருமுறை பூமியையுஞ் சுற்றி முடிக்கின்றது. சூரியன் இராசிமண்டலத்தை ஒரு முறை சுற்றி முடிக்க ஒருநாட் செல்லுமாதலால், நான்கு மினிற்றில் 1 பாகை ஓடும். எனவே, குறித்த ஒரு நாளில் ஒரு நட்சத்திரத்துடன் ஒருமித்துதிக்குஞ் சூரியன் மறு நாள் அந்நட்சத்திரத்துக்கப்பால் ஒரு பாகை தூரத்தி லுதிக்கும்.

சூரியன் சித்திரை மாதம் முதலாந் தேதி மேடராசி முதற்பாகை ஆரம்பத்திலும், இரண்டாந்தேதி அவ் விராசி இரண்டாம் பாகை ஆரம்பத்திலுஞ் சஞ்சரிப்பர். இவ்வாறே அவ்விராசிக்குரிய முப்பது பாகையிலுஞ் சஞ்சரிப்பர். இவ்வாறே அவ்விராசிக்குரிய முப்பது பாகையிலுஞ் சஞ்சரித்து. இடபத்தின் முதலாம் பாகை யிற் பிரவேசிப்பர். இப்பிரவேச காலம் வைகாசி மாத ஆரம்பமாகக் கொள்ளப்படும். இவ்விதமே மேடம் முதற் பன்னிரண்டு இராசிகளிலுஞ் சூரியன் சஞ்சரிக் குங் காலம், சித்திரை முதற் பன்னிரண்டு மாதங்களா கும். ஆனி மாதம் சித்திரையிலிருந்து மூன்றாவது ராசி மிதுனமாதலால், சூரியன் ஆனி மாதத்தில் மிதுனத்திற் சஞ்சரிப்பர். ஆடி மாதம் சித்திரையிலிருந்து நான்கா வது மாதமாதலால், சூரியன் ஆடி மாதத்தில் கர்க்கடக இராசியிற் சஞ்சரிப்பர். இவ்வாறே ஆவணியிற் சிங்கத் திலும், புரட்டாதியிற் கன்னியிலும். ஐப்பசியில் துலாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும், கார்த்திகையில் விருச்சிகத்திலும், மார்கழியில் தனுவிலும், தையில் மகரத்திலும், மாசியிற் கும்பத் திலும், பங்குனியில் மீனத்திலுமாகச் சஞ்சரிப்பர்.

தைமாதம் ஏழாந்தேதி சூரியன் எங்கே நிற்பர்? தைமாதம் சித்திரையிலிருந்து பத்தாவது மாதமாகும். மேடத்திலிருந்து பத்தாவது இராசி மகரமாகும். ஒரு நாளுக்கு ஒரு பாகை வீதம் ஏழு நாள்களுக்கு ஏழு பாகை ஓடுவராதலால் தை மாதம் ஏழாந் தேதி மகர இராசியில் முன்பின்னாக ஏழாம் பாகையில் நிற்பர்.

ஓர் இராசியிற் சூரியன் ஒரு மாதமும், சந்திரன் $2\frac{1}{4}$ நாளும், செவ்வாய் 40 நாளும், புதன் 30 நாளும், சனி $2\frac{1}{2}$ வருடமும், இராகு $1\frac{1}{2}$ வருடமும் கேது $1\frac{1}{2}$ வருடமுஞ் சஞ்சரிப்பர். - இவை மத்திம அளவுகள்.

பூமியின் சுழற்சி 24 மணித்தியாலத்துக்கு 360 பாகையாகும். 24 மணித்தியாலம் 60 நாழிகையாதலின் ஒரு நாழிகைக்கு ஆறு பாகை வீதம் அது சுழலும். சந்திரன் பூமியைச் சுற்றி ஓடும் ஒரு கிரகம். அவர் 30 நாள்களுக் கொருமுறை பூமியைச் சுற்றி வருதலின் ஒரு நாளில் 12 பாகை ஓடுவர். அமாவாசை அந்தத்திற் சூரியனுட னுதிக்குஞ் சந்திரன் மறுநாட் சூரியனுதிக்கும் பொழுது, சூரியனிலிருந்து 12 பாகைக்கு அப்பால் நிற்பர். இப் பன்னிரண்டு பாகை தூரத்தையும் பூமி சுழன்று முடித்த பின்பே சந்திரன் உதிப்பர். பூமி 12 பாகைச் சுழற்சிக்கு 2 நாழிகை எடுக்கும். ஆதலின் அமாவாசைக்கு அடுத்தநாள் சூரியன் உதித்து 2 நாழிகைக்குப்பின் சந்திரன் உதிப்பர். இவ்வாறே நாள் தோறும் இரண்டு நாழிகை வீதம் பிந்திச் சந்திரன் உதிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் ஒரு நட்சத்திரத்தில் ஏறக்குறைய 60 நாழிகை சஞ்சரிப்பர். ஒரு குழந்தை பிறக்கும் பொழுது சந்திரன் எந்த நட்சத்திரத்திற் சஞ்சரிக்கின்றாரோ அந்த நட்சத்திரமே குழந்தையின் சென்ம நட்சத்திர மெனப்படும்.

இராசி மண்டலஞ் சரியான வட்ட வடிவினதன்று. அஃது ஒரு நீள் வட்டவடிவினதாயிருக்கும். ஓர் இராசி கிழக்கே அடிவானத்தில் உதித்த நேரந் தொடக்கம் அடுத்த இராசி உதிக்கும் வரையுமுள்ள நேரம் ஏறக் குறைய இரண்டு மணித்தியாலமாகும். இக்காலம் இராசிமான மெனப் பெயர்பெறும். இராசிமண்டலம் வட்டவடிவமாயிருப்பின் ஒவ்வொரு இராசிமானமும் இவ்விரண்டு மணித்தியாலமாயிருக்கும் அவ்வாறன்றி அது நீள வட்ட வடிவமாயிருப்பதால் இராசி மானமும் ஒவ்வோர் இராசிக்கும் ஏற்றத்தாழ்வுடைய தாயிருக்கும். அன்றியும் ஓர் இராசியே அட்சபேதத்தாலும் கால அள விற் கூடிக் குறைந்திருக்கும். உதாரணமாக, யாழ்ப் பாணத்தில் மேட இராசிமானம் 4 நாடி 34 விநாடியாக, சிங்கப்பூரில் மேட இராசிமானம் 4 நாடி 50 விநாடி யாகத் தம்முள் வித்தியாசமுடையன வாயிருக்கும்.

இராகு கேதுக்களைத் தவிர்ந்த ஏனைய கிரகங் கள் வலஞ்சுழியாக ஓடும். இராகு கேதுக்கள் எதிர்த் திசையா யோடும். கிரகங்க ளோடும்போது ஒன்றோ டொன்று சேர்வதால் மூடம், அத்தமனம், சமாகமம், குருசந்திரயோகம், சசிமங்களயோகம், கிரகயுத்தம் ஆகியன உண்டாகின்றன. இவற்றின் விவரங்களைப் பின்னால் அறிந்துகொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிகளும், அவைகளுக்குரிய மாதங்களும், நட்சத்திரங்களும்

| | | | |
|---|---|---|---|
| *மீனம்*<br>**பங்குனி**<br>பூரட்டாதி 4<br>உத்திரட்டாதி<br>ரேவதி | *மேடம்*<br>**சித்திரை**<br>அசுவினி<br>பரணி<br>கார்த்திகை 1 | *இடபம்*<br>**வைகாசி**<br>கார்த்திகை 2. 3. 4<br>ரோகிணி<br>மிருகசீரிடம் 1. 2 | *மிதுனம்*<br>**ஆனி**<br>மிருகசீரிடம் 3. 4<br>திருவாதிரை<br>புனர்பூசம் 1. 2. 3 |
| *கும்பம்*<br>**மாசி**<br>அவிட்டம் 3. 4<br>சதயம்<br>பூரட்டாதி 1. 2. 3 | | | *கர்க்கடகம்*<br>**ஆடி**<br>புனர்பூசம் 4<br>பூசம்<br>ஆயிலியம் |
| *மகரம்*<br>**தை**<br>உத்தராடம் 2. 3. 4<br>திருவோணம்<br>அவிட்டம் 1. 2 | | | *சிங்கம்*<br>**ஆவணி**<br>மகம்<br>பூரம்<br>உத்தரம் 1 |
| *தனு*<br>**மார்கழி**<br>மூலம்<br>பூராடம்<br>உத்தராடம் 1 | *விருச்சிகம்*<br>**கார்த்திகை**<br>விசாகம் 4<br>அனுஷம்<br>கேட்டை | *துலாம்*<br>**ஐப்பசி**<br>சித்திரை 3. 4<br>சுவாதி<br>விசாகம் 1. 2. 3 | *கன்னி*<br>**புரட்டாதி**<br>உத்தரம் 2. 3. 4<br>அத்தம்<br>சித்திரை 1. 2 |

"யாதும் யாவும் கழறினவும்"
சேரமான் பெருமாள் நாயனார் பிரபஞ்சத்திலுள்ள எலவை பேசு வதையும் உணரக் கூடியவர். சிவ பூசை முடிவில் நடராஜப்பெரு மானின் சிலம்பொலி கேட்கக் கூடியவர். அவர் பாடிய பொன் வண்ணத்தாதந்தி இரண்யகர்ப்பரை நேரில் கண்டு பாடியது என்பர் ஆன்றோர். அது பதினொராம் திருமுறையில் உள்ளது. சுந்தரர் கைலை சென்ற போது முன் சென்றவர். பெருமாக் கோதையார், கழறிற்றறிவார், சேரமான் பெருமான் நாயனர் என்பன அவரைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் பாடம்

# கிரகப்புடம்

ஒரு கிரகம் எந்த இராசியில் எத்தனையாவது பாகை, கலை விகலையி லிருக்கின்றதென்பதைக் காட்டுவது கிரகப்புடமாகும்.

அறுபது விகலை ஒரு கலை. அறுபது கலை ஒரு பாகை. முப்பது பாகை ஒரு இராசி. பன்னிரண்டு இராசி ஒரு சக்கரம்.

ஒரு கிரகத்தின் புடம் இராசி. 4 பாகை 10, கலை 5, விகலை 20 என வைத்துக்கொள்வோம். இதில் இராசி 4 என்பது மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய நான்கு இராசிகளுஞ் சென்றதைக் குறிக்கும். பாகை 10 என்பது ஐந்தாவது இராசியாகிய சிங்கராசியிற் பத்துப் பாகை சென்றதைக் குறிக்கும். கலை 5 என்பது அப் பத்துப் பாகைகளுஞ் சென்று பதினோராவது பாகை யில் ஐந்து கலை சென்றதைக் குறிக்கும். விகலை 20 என்பது அவ்வைந்து கலையுஞ் சென்று ஆறாவது கலையில் இருபதாவது விகலை என்பதைக் குறிக்கும். மேற்குறித்த புடம் இராசி மண்டலத்திற் கிரகம் நிற்கும் நிலையைக் காட்டும்.

நிரயன மேடாரம்பத்திலிருந்து மேடாயனம் இராசி மண்டலத்தில் இடப்பக்கமாக வருடந்தோறும் ஏறக் குறைய ஐம்பது விகலை வீதம் மேற்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்நகர்தலா லுண்டாகுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரம் அயனாம்ச மெனப்படும். சாயன மேடாரம்பத்தி லிருந்து இவ்வயனாம்சத்தைக் கழிக்க வருவது நிரயன மேடாரம்பமாகும்,

மேனாட்டுச் சோதிடர் சாயனப் புடத்திற்கமைய வும், கீழ்நாட்டுச் சோதிடர் நிரயனப்புடத்திற் கமைய வுஞ் சாதகங் கணித்துப் பலன் காண்பர். நமது ஆன்ம வளர்ச்சியைப் பற்றிய பாகங்களை அறிவதற்குச் சாயனப்புட கணித சாதகத்தைப் பயன்படுத்தலா மென்பது நம்மவர் கொள்கை.

மேடாரம்பத்தை நிச்சயிக்கும் விடயத்தில் அபிப் பிராயபேத மிருத்தலின் அயனாம்ச அளவும் யாவருக் கும் ஒப்ப முடிந்த ஓர் அளவில் இல்லை.

சாயனப்புடத்திலிருந்து அயனாம்சத்தைக் கழித்து வருவதே நிரயனப்புடமாதலால் ஒவ்வொரு பஞ்சாங் கத்திலுமுள்ள நிரயனப்புடம் அவ்வப் பஞ்சாங்ககாரர் கொள்ளும் அயனாம்சத்துக்குத் தக்கதாக மாறுபடும்.

நாம் சரியென அநுமானித்து ஆட்சிமுறையிற் கொள்ளுவது திருக்கணித பஞ்சாங்கத்திற் குறிப் பிட்டிருக்கும் அயனாம்சமாகும். சாயனப்புடம் யாவருக் கும் ஒத்ததாய் ஒன்றாயிருக்கும். நிரயனப்புடம் அவர வர் கைக்கொள்ளும் அயனாம்சத்துக்குத் தக்கதாகப் பேதப்படும். அயனாம்சத்தைப் பற்றிய முடிவு ஆரா யப்பட வேண்டியதொன்றாகும்.

திருக்கணித பஞ்சாங்கத்திற் குறிக்கப்பட்டிருக் கும் நந்தன வருடாரம்ப அயனாம்சம் 23 பாகை 11 கலையாகும். ஆனால் பங்களூர் அறிஞர் வீ. இரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன் என்பாராற் பிரசுரிக்கப்படும் மாத வெளியீட்டிற் குறிக்கப்பட்டிருக்கும் நந்தன வருடாரம்ப அயனாம்சம் 21 பாகை 44 கலையாகும். வேறு சில பஞ்சாங்கங்கள் அயனாம்சத்தை இவைகளிலும் வேறுபடக் கூறும்.

மூன்றாம் பாடத்திற் குறிக்கப்பட்டிருக்கும் மூட மாதியவற்றை நிச்சயிப்பதற்குக் கிரகப்புடம் அத்தி யாவசியமாகும்.

மூடம் என்பது சூரியனுடன் ஓர் இராசியில் ஒரே பாகையில் இன்னொரு கிரகம் நிற்றலாகும்.

சுக்கிரன் சூரியனுக்கு ஒன்பது பாகை தூரத் துள்ளிருக்குங் காலம் அத்தமன காலமாகும். ஒன்பதா வது பாகையை விட்டு வெளியேறுங் காலம் சுக்கிர உதயமாகும். இவரிலும் ஒளியிற் குறைந்த காரணத் தினால் குருவுக்குச் சூரியனிலிருந்து பதினோராவது பாகையிலேயே அத்தமனமாரம்பிக்கும். இவ்வாறே புதனுக்குப் பதின் மூன்றாவது பாகையிலும் சனிக்குப் பதினைந்தாவது பாகையிலும் செவ்வாய்க்குப் பதி னேழாவது பாகையிலும் அத்தமனம் ஆரம்பிக்கும்.

இங்கு குறிக்கப்பட்ட பாகை அளவுக்குள் சூரிய ஒளியுள் அவ்வக் கிரகங்களின் ஒளி மழுங்கி விடுதலின் இவ்வெல்லைக்குட் சஞ்சரிக்கும் காலம் அவ்வக்கிரகங் களின் அத்தமனகால மென்பர்.

குருசந்திரர் இருவரும் ஒரே பாகையிற் சேர்வது குருசந்திர யோகமாகும். குரு - வியாழன். சசியும் மங்களனும் ஒரேபாகையிற் சேர்வது சசிமங்கள யோகமாகும். சசி - சந்திரன் ; மங்களன் - செவ்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் தவிர்ந்த ஏனைய கிரகங்கள் சந்திர னோடு ஒரேபாகையில் நிற்பது சமாகமமெனவும், சந்திரனுக்கு 180 ஆவது பாகையில் நிற்பது சம சப் தமமெனவும் பெயர்பெறும். புதனது சேர்க்கை புத சந்திர சமாகம மெனவும், சுக்கிரனது சேர்க்கை சுக்கிரசந்திர சமாகமமெனவும் பெயர்பெறும். இவ்வாறே சமசப்தமங் களும் குருசந்திர சமசப்தம மென்பது போல அவ்வக்கிரகங்களின் பெயரால் அழைக்கப்படும். கிரகங்களின் சேர்க்கையின் தூரம் ஒரே நவாம் சத்துக்குட்பட விருக்கு மளவும் யோக பலன் நிகழும். இந்த யோகங்களைக் கணிப்பதற்குக் கிரகப்புடம் அத்தியாவசியகமானது. ஏனைய கணித விடயங்களுக் கும் இது அத்தியாவசியக மென்பதையறிக.

பொ. காலாசபதி கருத்துப்படி புத்தி விருத்தியில் அமிர்தம் என்ற 14ஆம் தளத்தை எட்டக் கூடியவரே சோதிடத்தை அறியவல்லவர். அது யோகசம்பந்தமான தளம். இறைவனுடன் ஒன்றித்து, தன்தூய உணர்வால் அவன் அருள் வழிகாட்ட, சோதிட சாஸ்திரத்தை ஓதி உணர்ந்தவனே பார்புகழும் சோதிடனாவான். அமிர்தம், (அ+ம்ருத்) மரணமற்ற பெருவாழ்வை உணரும் நிலை. அமிர்த நிலையை நோக்காகவேனும் எட்டக்கூடியவனே மனிதனாகப் பாரத ரிஷிகளால் மதிக்கப்படுவான். அது இல்லாமல் சோதிடம் படிப்பதும் பேசுவதும் நீருள்காணும் நிழலை மரம் என்று காட்டுவதற்குச் சரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் பாடம்

## இலக்கினம் – 1

# உத்தேசப்புடம்

ஒரு குறித்த நேரத்தில் கிழக்கே அடிவானத்தில் உதிக்கும் இராசி அந்த நேரத்திற்குரிய உதயலக்கின இராசியெனப்படும். அவ்வுதய இலக்கின இராசியில் எத்தனையாவது பாகை உதிக்கின்றதோ அப்பாகை இலக்கினப் புடமாகும். இலக்கினப் புடத்தை மத்தியாக வைத்து ஏறக்குறையப் பின் 15 பாகையும் முன் 15 பாகையுங் கூடிய 30 பாகை உதயலக்கின பாவ மாகும். ஆதலின் இலக்கின பாவமும் இலக்கின இராசியும் ஒன்றல்ல வென்பதை அறிந்து கொள்க.

மேலே குறித்த நேரத்திற் சந்திரன் எந்த இராசி யிற் சஞ்சரிக்கின்றதோ அந்த இராசி சந்திர இலக்கின இராசியெனப் பெயர்பெறும். பொதுவாக இலக்கின மெனக் கூறுவது உதய இலக்கினத்தையே.

ஒரு குழந்தை பிறந்த நேரத்தைக் கொண்டு, அக் குழந்தை எந்த இலக்கினத்திற் பிறந்திருக்கின்ற தென் பதைப் பஞ்சாங்க மூலங் கணித்தறிய முன், உத்தேச மாக அறியத் தெரிதல் வேண்டும். குழந்தை பிறந்த காலம் ஆனி மாதம் பதினைந்தாந் தேதியென வைத் துக் கொள்வோம். இத்தேதியில் மூன்றாமிராசி யாகிய மிதுனத்தில் பதினைந்தாவது பாகையிற் சூரியன் உதிப்பர். இவர் அத்தமனப்படும்போது தனுவிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்தாவது பாகை கிழக்கே அடிவானத் தில் தோன்றும். இது தனு இராசி யுதயமாகும். ஆகவே சூரிய உதயமென்பதும், இராசியுதய மென்பதும் இரு வேறு விடயங்களென்பதைக் கருத்திற் கொள்க. முன் குறிப்பிட்ட செனனம் சூரியோதய சமயமாயின் செனன இலக்கினப்புடம் மிதுனத்திற் பதினைந்து பாகை யாகும். செனன நேரங் காலை எட்டு மணியாயின் அதற்கமையும் இலக்கினப் புடமாவது:

சூரியன் 24 மணித்தியாலத்தில் 360 பாகை ஓடு பவராதலால் இரண்டு மணித்தியாலத்தில் 30 பாகை ஓடுவர். குறித்த எட்டு மணி நேரத்தில் மிதுனத்தின் பதினைந்தாம் பாகையிலிருந்து 30 பாகை தூரமாகிய கடகத் தின் பதினைந்தாம் பாகை உதிக்கும். ஆகவே மேற் குறித்த செனனத்தின் இலக்கினப்புடம் இராசி 3 பாகை 15 ஆகும். அன்று பத்து மணிக்குச் சிங்க ராசியிற் பதினைந்தாவது பாகை உதிக்கும். இந்த நேரத்திற் கமையும் இலக்கினப்புடம் இராசி 4 பாகை 15 ஆகும்.

ஐப்பசி மாதம் இருபதாந் தேதி பகல் 12 மணிக்கு அமையும் இலக்கினப்புடமாவது:

ஐப்பசி மாதம் சித்திரை மாதத்திலிருந்து ஏழாவது மாதமாகும். இம்மாதத்தில் மேடத்திலிருந்து ஏழாவது இராசியாகிய துலாத்திற் சூரியன் சஞ்சரிப்பர். ஐப்பசி மாதம் இருபதாந்தேதி சூரியன் உதிக்கும் போது துலாத்தில் இருபதாம் பாகை உதிக்கும், சூரியோதய நேரத்திலிருந்து இரண்டு மணித்தியாலம் பிந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமாய 8 மணிக்கு விருச்சிகத்தில் இருபதாம் பாகையும் 10 மணிக்குத் தனுவில் இருபதாம் பாகையும் 12 மணிக்கு மகரத்தில் இருபதாம் பாகையும் உதிக்கும். ஆகவே மேற்குறித்த தேதியில் பகல் 12 மணிக்குப் பிறந்த பிள்ளையின் இலக்கினப்புடம் மகரத்தில் 20 பாகையாகும். இப்படிக் கணிக்கப்படும் புடம் உத்தேசப் புட மாகும், ஐப்பசி மாதம் இருபதாந் தேதி சூரியோதய நேரம் 6 மணி 4 மினிற்றாகும். இங்கு நாம் உத்தேசப்புடங் கணித்தமையால் சூரியோதய நேரத்தை 6 மணியென வைத்துக் கணித்தோம்.

மத்திமப்புடமும் சுத்தப்புடமுங் கணிக்கும் முறையை அடுத்த பாடங்களிற் படிப்போம்.

பரமஹம்ச யோகாநந்தரின் குரு ஸ்ரீ யுக்தேஸ்வரர் மனித வாழ்வின் நான்கு யுகங்கள் பற்றிப் புதுக்கருத்து ஒன்றைத் தந்துள்ளார் அவர் கருத்து:

| | | | |
|---|---|---|---|
| 1. | சத்திய யுகம் | கி. மு | 11.501 – 6701 |
| | யுகசந்தி | கி. மு | 7101 – 6401 |
| 2. | திரேதாயுகம் | கி. மு | 6701 – 3101 |
| | யுகசந்தி | கி. மு | 3401 – 2901 |
| 3. | துவாபரயுகம் | கி. மு | 3101 – 701 |
| | யுகசந்தி | கி. மு | 901 – 601 |
| 4. | கலியுகம் | கி. மு | 701 – 499 கி. பி |
| 5. | மீண்டும் கலி | கி. மு | 499 – 1699 கி. பி |
| | யுகசந்தி | கி. பி | 1599 – 1899 கி. பி |
| 6. | மீண்டும் துவாபரயுகம் | கி.பி | 1699 – 4099 கி. பி |

யுக்தேசுவரர் கிரேக்க பிளேற்றோவின் 'பெரிய ஆண்டு', மனுவின் கருத்து என்பவற்றை ஒப்பிடுகிறார். இது சிந்தனைக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாம் பாடம்

# இலக்கினம் – II

# மத்திமப்புடம்

ஐந்தாம் பாடத்தில் இலக்கினத்திற்கு உத்தேசப் புடங் கணிக்கும் முறையைப் படித்துள்ளோம். இப் பாடத்தில் இலக்கினத்துக்கு மத்திமப்புடங் கணிக்கும் முறையைப் படிப்போம்.

1. சூரியோதயம்: பூமியின் அச்சு வடக்கு நோக்கி $23\frac{1}{2}$ பாகை சரிந்திருப்பதன் காரணமாகச் சூரியன் உதிக்கும் நேரம்,அட்சாம்ச பேதத்துக்குத்தக நாளுக்குநாள் மாறுபடும். இவ்வாறே சூரிய அத்த மனமும் பகல் மானமும் மாறுபடும். ஆனால் சூரிய உச்சம் எங்கும் ஒன்றாக இருக்கும். சூரியோதயத்தை ஆறுமணியாக வைத்துக் கணக் கிட்டறிவது உத்தேச இலக்கினப் புடமாகும். இலக்கின மத்திமப்புடங் காண்பதற்குக் குறித்த தினத்திற்குரிய சூரியோதய நேரத்தை முதலில் அறிதல் வேண்டும். பஞ்சாங்கத்தில் இதனைக் கண்டு கொள்க.

2. உதயாதிநேரம்: சூரிய உதயந் தொடங்கிப் பிள்ளை பிறந்த நேரம் வரையுமுள்ள காலம் உதயாதி செனனாந்தஞ் சென்ற நேரமெனப்படும். பஞ்சாங்கங்களில் நாடி, விநாடியளவையிற் காலங்கள் பிரயோகிக்கப்பட்டிருப்பதால் மேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த உதயாதிநேரம் நாடி, விநாடியிற் கணிக்கப் படல் வேண்டும்.

1 மணித்தியாலம் = $2\frac{1}{2}$ நாழிகை (நாடி)
1 மினிற்று = $2\frac{1}{2}$ விநாழிகை (விநாடி)

என்னும் வாய்பாட்டின்படி மேற்குறித்த உதயாதி நேரம் நாடி, விநாடியாக்கப்படல் வேண்டும். 6 மணி 15 மினிற்றில் சூரியன் உதிக்கும்நாளில் 8 மணிக்குப் பிள்ளை பிறக்கின், உதயாதி நேரம் $1\frac{3}{4}$ மணித்தியால மாகும். இதை நாடி, விநாடியாக்கின் 4 நாடி $22\frac{1}{2}$ விநாடி யாகும்.

3. உதயாற்பரம்: ஓர் இராசியில் 30 பாகை உண்டு. சூரியன் உதிக்கும்போது அவர் சஞ்சரிக்கும் அவ் விராசியில் எத்தனையாவது பாகை உதிக்கு மென்பது அன்றைய தேதியைக் கொண்டு அறி யப்படலாமென முன்னர்ப் படித்துள்ளோம். தை மாதம் பத்தாந்தேதி சூரியன் உதிக்கும் போது மகர இராசியில் பத்தாம்பாகை உதிக்கும். அன்று சூரியன் உதிக்குமுன் இப்பத்தாம் பாகைக்கு முன்னுள்ள 9 பாகையும் ஒன்றன்பின் னொன் றாகக் கிழக்கே தோன்றி உச்சியை நோக்கிச் செல்லச் சூரியன் உதிக்கும் அந்த நேரத்தில் பத்தாம் பாகை தோன்றும். ஆகவே, சூரியன் உதிக்கு முன் சென்ற தூரம் 9 பாகையாகவும் உதித்த பின் செல்ல வேண்டிய தூரம் 21 பாகையாகவும் அமையும். இங்கு பாகைக் கணக்கிற் காட்டிய இதனை நேரக்கணக்கிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுமிடத்துச் சூரியன் உதிக்குமுன் குறித்த அத்தேதியில் மகர இராசியில் ஒரு பாகைக்கு 4 மினிற்று வீதம் 9 பாகைக்கும் 36 மினிற்று ஓட்டம் முடிந்து, இன்னும் 21 பாகைக்கும் 84 மினிற்று ஓட்டமிருக்கின்றதெனக் கூறலாம். இந்த நேரத்தை நாடி விநாடியிற் கணக்கிட்டால், சூரியன் உதிக்குமுன் 90 விநாடி ஓட்டம் முடிந்து, உதித்த பின் 210 விநாடி ஓட்டம் இருக்கின்றதாக அமையும். இவ்வாறு ஓடி முடிந்த நேரம் உதயாற் பூர்வம் எனவும், இன்னும் ஓடவிருக்கும் நேரம் உதயாற்பரம் எனவும் பெயர் பெறும், (பூர்வம் = முன், பரம் = பின்) பஞ்சாங்கத்தில் ஒவ்வொரு தேதிக்குமுரிய உதயாற்பரங் குறிக்கப்பட்டிருக்கும். இது அந்தந்த மாத இராசிப் பெயரிற் குறிக்கப்படுவது பெரும்பாலான வழக்கு. தைமாத உதயாற்பரங்கள் "மகரலக்கினம்" என்ற தலைப் பின்கீழ்த் திருக்கணித பஞ்சாங்கத்திற் குறிக்கப் பட்டிருக்கும். வாக்கிய பஞ்சாங்கத்தில் "மகரம்" என்ற தலைப்பின் கீழ்க் குறிக்கப்பட்டிருக்கும். இதனைத் திருக்கணித பஞ்சாங்கத்தில் ஒவ் வொரு மாத விவரத்திலும் இடமிருந்து வலமாகப் பதின்மூன்றாம் பந்தியிற் காண்க.

4. இலக்கினத் துருவம்: குறித்த நாளில் குறித்த இலக்கின ஆதியந்தமறிய அன்றைய உதயாற் பரத்துடன் கூட்டவேண்டிய இராசிமானங்களின் கூட்டுத்தொகை இலக்கினத்துருவ மெனப்படும் சித்திரை மாதம் பதினாறாந் தேதி பகல் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு ஒரு பிள்ளை பிறந்ததென வைத்துக் கொள்வோம். சூரியோதய நேரத்தில் மேட ராசியிற் பதினாறாவது பாகை உதிக்கும். இவ் விராசியிற் செல்ல வேண்டிய 15 பாகையுமோட ஒரு மணித்தியாலஞ் செல்லும். இஃது அன்றைய உதயாற்பரமாகும். சூரியோதயம் 6 மணியாயின் மேற்குறித்த ஒரு மணித்தியாலத்தின் பின் இன் னும் 5 மணித்தியாலம் ஓடினாற்றான் 12 மணி யாகும் மேடராசி ஓடியபின் இடபராசி, மிதுனராசி என்னுமிரண்டும் ஓட நான்கு மணித்தியாலஞ் செல் லும். இந்த நான்கு மணித்தியால ஓட்டம் முடிந்த பின், மிதுனத்திற் கடுத்த கர்க்கடக இராசி உதிக் கும். இதுவே இலக்கின இராசியாகின்றது. இந்த நான்கு மணித்தியால நேரம் இலக்கினத் துருவமெனப்படும். திருக்கணித பஞ்சாங்கத்தில், ஒவ்வொரு மாதமும் "இராசி முடிவுக்குமேல் இலக் கினம்" என்னும் தலைப்பில், இலக்கினத் துருவம், நாடி, விநாடிக் கணக்கிற் குறிக்கப்பட்டிருப்பது காண்க.

5. உதய இலக்கினம்: (i) ஒரு பிள்ளை பிறந்து நேரத்தைக் கொண்டு உதயாதி செனனாந்தஞ் சென்ற நேரத்தைக் கணக்கிட்டுக்கொள்ள வேண் டும். சித்திரை மாதத்தில் 6 மணி 2 மினிற்றிற் சூரியன் உதிக்குமொருநாளில் 8 மணிக்கு ஒரு பிள்ளை பிறந்தால், உதயாதி செனனாந்தஞ் சென்ற நேரம் மணி 1 மினிற்று 58 ஆகும். இது நாடி 4 விநாடி 55 க்குச் சரியாகும்.அன்றைய உதயாற்பரம் நாடி 3 விநாடி 55 என வைத்துக் கொள்வோம். மாதம் சித்திரையாதலாற் சூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேட இராசியில் உதிக்கும்.முன்னரே கணக்கிட்ட நாடி 4 விநாடி 55 இல் இந்த நாடி 3 விநாடி 55 ஐக் கழிக்க எஞ்சி நிற்கும் ஒரு நாடி, இடபத்திற் சென்ற காலமாகும். ஆகவே பிள்ளையின் இலக்கின இராசி இடபமென்பதையும் அதிற் சென்ற நேரம் நாடி ஒன்றென்பதையுங் கண்டு கொள்க.

(ii) நந்தன வருடம் ஐப்பசிமாதம் பத்தொன் பதாந் தேதி பகல் 1 மணி 4 மினிற்றிற் பிறந்தபிள்ளை என்ன இலக்கினத்திற் பிறந்த தென்பதைக் கணிப்போம்.

1) சூரிய உதயம்: இத்தேதிக்குரிய சூரியோ தயம் 6 மணி 4 மினிற்றெனப் பஞ்சாங்கத் திற் குறிக்கப்பட்டிருப்பது காண்க.

2) உதயாதி செனனாந்த நாழிகை: 6 மணி 4 மினிற்றிலிருந்து பகல் 1 மணி 4 மினிற்று வரையுஞ் சென்றகாலம் 7 மணித்தியால மாகும். இந்த 7 மணித்தியாலத்தையும் நாடி விநாடியாக்க, 17 நாடி 30 விநாடியாகும். இதுவே உதயாதிசெனனாந்தஞ் சென்ற நாழிகையாகும்.

3) உதயாற்பரம்: இத்தேதிக்குரிய உதயாற்பரம் 2 நாடி எனக் கீழிருக்கும் அட்டவணையிற் காண்க. ஐப்பசி மாதத்திற் சூரியன் துலா இராசியில் உதிப்பதால், சூரியன் உதித்து 2 நாடி வரையுந் துலா இலக்கினமாகுமெனக் காட்டுவதற்கு உதயாற்பரம் "துலாலக்கினம்" என்ற தலைப்பிற் குறிக்கப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) இலக்கினத்துருவம்: உதயாதி நேரமாகிய 17 நாடி 30 விநாடியில் மேற்குறித்த உதயாற் பரம் 2 நாடியைக் கழித்து வரும் 15 நாடி 30 விநாடி துலா முடிவுக்குமேற் பிள்ளை பிறக்கும் வரையுஞ் சென்ற நேரமாகும். துலா முடிவுக்குமேல் விருச்சிக இராசியை ஓடி முடிக்கும் நேரத்தையும், இப்படியே அடுத்த இராசி ஒவ்வொன்றையும் ஓடி முடிக் கும் நேரத்தையுங் கூட்டிய நேரமாகிய இலக்கினத் துருவத்தைக் கீழிருக்கு மட்ட வணையில் "துலாமுடிவுக்கு மேல் இலக் கினம்" என்ற தலைப்பிற் காண்க. இவ்விலக் கினத் துருவ அட்டவணையில், துலா முடிவு க்கு மேல் தனு இராசி ஓடி முடிய நாடி 10 விநாடி 46 செல்லுமெனக் குறிப்பிட்டிருப்பது காண்க. மேலே கணக்கிட்ட துலா முடிவுக்கு மேலுள்ள 15 நாடி 30 விநாடியில் இங்கு கண்ட தனுராசியின் துருவமாகிய 10 நாடி 46 விநாடியைக் கழிக்கவரும் 4 நாடி 44 விநாடி, மகர இராசியிற் சென்ற காலமாகும்.

5) இலக்கினபுடம்: மேற்குறித்த நேரத்திற் பிறந்த பிள்ளையின் உதய இலக்கினம் மகரமாகும். மகரத்திற் சென்ற நேரம் 4 நாடி 44 விநாடி. மகரத்திற்குரிய இராசிமானம் 4 நாடி 50 விநாடியென்பது பஞ்சாங்கத்திற் குறிக்கப்பட்டிருக்கின்றது. 4 நாடி 50 விநாடி நேரத்தில் 30 பாகை ஓடினால் 4 நாடி 44 விநாடி நேரத்தில் ஓடுந்தூரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$$= \frac{30 \times 4 \text{ நா. } 44 \text{ வி}}{4 \text{ நா. } 50 \text{ வி}} = \frac{30 \times 284 \text{ விநாடி}}{290 \text{ விநாடி}} = 29\frac{1}{2} \text{ * பாகை}$$

ஆகவே உதய இலக்கினபுடம் மகரத்தில் $29\frac{1}{2}$ பாகையாகும். மேடத்திலிருந்து ஒன்ப தாம் இராசியாகிய தனுராசி ஓடியபின் அடுத்த இராசியாகிய மகரத்தில் $29\frac{1}{2}$ பாகை ஓடியிருக்கிற தென்பதைக் காட்ட இராசி 9, பாகை 29, கலை 30, என இந்தப் புடங் குறிக்கப்படும்.

* மத்திமப்புடக் கணிப்பாதலின் ஏறக்குறைய $29\frac{1}{2}$ பாகையெனக் கொள்ளலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பாடத்தின் விளக்கத்துக்குத் தேவையான பஞ்சாங்க விவரங்கள்

26 நந்தன வருடம் ஐப்பசி மாதம் 1952 ஆண்டு (அக் - நவம்.)

துலாசங்கிராந்தி : புரட்டாதி மாதம் 31 *உ. வியாழக்கிழமை நா. 36-7

| துலா | இங் | தமிழ் மலை | வாரம் | திதி உதயாதி | | | பொது நேரம் | | நட்சத்திரம் உதயாதி | | | பொது நேரம் | | யோகம் உதயாதி | | | கரணம் உதயாதி | | | அஹஸ் | | துலா லக். ந | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *உ | உ | உ | .... | | நா. | வி. | ம. | மி. | | நா. | வி. | ம. | மி. | | நா. | வி. | | நா. | வி. | நா. | வி. | நா. | வி |
| 27 | 17 | 1 | வெ | சசி | 53 | 37 | 3 | 29 | உத் | 8 | 37 | 9 | 26 | மா | 36 | 12 | பத் | 22 | 4 | 29 | 28 | 5 | 6 |
| 28 | 18 | 2 | சனி | ● | 55 | 39 | 4 | 18 | அத் | 13 | 3 | 11 | 15 | வை | 35 | 24 | சது | 24 | 48 | | 27 | 4 | 55 |
| ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| 12 | 1 | 16 | சனி | சசி | 1 | 12 | 6 | 33 | அசு | 43 | 36 | 11 | 30 | வஜ் | 6 | 12 | பத் | 28 | 36 | 29 | 10 | 2 | 31 |
| | | | | ○ | 56 | 14 | 4 | 34 | | | | | | சித் | 59 | 19 | | | | | | | |
| 13 | 2 | 17 | ஞா | பிர | 52 | 23 | 3 | 1 | பர | 41 | 12 | 10 | 33 | விய | 53 | 18 | பா | 24 | 8 | 29 | 9 | 2 | 20 |
| 14 | 3 | 18 | தி | துவி | 50 | 1 | 2 | 4 | கார் | 40 | 12 | 10 | 9 | வரி | 48 | 38 | தை | 21 | 0 | | 8 | 2 | 10 |
| 15 | 4 | 19 | செ | திரி | 49 | 19 | 1 | 48 | ரோ | 40 | 49 | 10 | 26 | பரி | 44 | 57 | வ | 19 | 26 | | 7 | 2 | 0 |
| 16 | 5 | 20 | புத | சது | 50 | 36 | 2 | 19 | மிரு | 43 | 18 | 11 | 24 | சிவ | 42 | 57 | பவ | 19 | 43 | | 6 | 1 | 49 |
| 17 | 6 | 21 | வியா | பஞ் | 53 | 41 | 3 | 32 | திரு | 47 | 33 | 1 | 4 | சித் | 42 | 21 | கவு | 21 | 55 | | 5 | 1 | 39 |
| ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| 26 | 15 | 30 | சனி | திர | 32 | 51 | 7 | 17 | சித் | 36 | 8 | 8 | 35 | ஆயு | 50 | 25 | கா | 2 | 19 | 28 | 55 | 0 | 6 |

* திகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (பஞ்சாங்க விவரத் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| | குரு | | |
| | உ. நா.வி. மாறல்<br>11.8.44 விரு. புத<br>25.11.40. தநு சுக்<br>27.43.39. மக. குஜ. | | கேது |
| ராகு | | | |
| குஜ | சுக் | ரவி<br>புத | சனி |

துலா முடிவுக்குமேல் இலக்கினம்

| | நா.வி | | | நா.வி | |
|---|---|---|---|---|---|
| மேடம் | 28 | 48 | துலாம் | 59 | 50 |
| இடபம் | 33 | 54 | விருச்சி | 5 | 26 |
| மிதுனம் | 39 | 22 | தனுசு | 10 | 46 |
| கடகம் | 44 | 41 | மகரம் | 15 | 36 |
| சிங்கம் | 49 | 43 | கும்பம் | 19 | 58 |
| கன்னி | 54 | 40 | மீனம் | 24 | 14 |

யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாம் பாடம்

# ஜென்மநட்சத்திரம், சந்திரலக்கினம், இராசிநிலை

ஆறாம் பாடத்தில் நந்தன வருடம் ஐப்பசி மாதம் பத்தொன்பதாம் தேதி பகல் 1 மணி 4 மினிற்றிற் பிறந்த பிள்ளையின் உதயலக்கினம் மகரமென்று கணித்தறிந்தோம். இப்பாடத்தில் அதே குழந்தையின் சந்திரலக்கினத்தையும் இராசி நிலையையுங் கணிப்ப தெங்ஙன மென்பதைப் படிப்போம்.

திருக்கணித பஞ்சாங்கத்தில் ஐப்பசி மாதத்துக் குரிய வாராதி விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் 52 ஆம் பக்கத்தில் மேற்குறித்த பத்தொன்பதாந் தேதிக் குரிய விவரங்களில் அன்று உரோகிணி நட்சத்திர அந்தம் 40 நாடி 49 விநாடியெனக் குறிப்பிடப்பட்டிருப் பதைக் காணலாம். முதல்நாள் கார்த்திகை நட்சத் திரம் 40 நாடி 12 விநாடி வரையுமென்பதும் குறிப் பிடப்பட்டிருப்பதைக் காண்க. ஒரு நாளுக்குரிய 60 நாடியில் கார்த்திகை நட்சத்திரம் 40 நாடி 12 விநாடி வரையும் நிற்றலால் எஞ்சிய 19 நாடி 48 விநாடியும், பத்தொன்பதாந் தேதியிற் காணப்படும் 40 நாடி 49 விநாடியுஞ் சேர்ந்த 60 நாடி 37 விநாடி, உரோகிணி நட்சத்திரத்தின் * பரமநாடி விநாடியாகும். பதி னெட்டாந் தேதி 40 நாடி 12 விநாடியில் உரோகிணி

* மொத்த நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிப்பதால் இந்த நேரந் தொடக்கம் பிள்ளையின் செனனகாலமாகிய பத்தொன்பதாந் தேதி 17 நாடி 30 விநாடிவரையுள்ள 37 நாடி 18 விநாடி உரோகிணியிற் சென்ற நாடி விநாடியாகும். உரோகிணி நட்சத்திரத் தின் பரம நாடியாகிய 60 நாடி 37 விநாடியையும் நான்கு பாகமாகப் பிரித்தால் ஒரு பாகத்துக்கு. 15 நாடி 9¼ விநாடி அமையும். இது உரோகிணியின் பாத நாடி விநாடியாகும்.

உரோகிணியிற் செனனகாலம் வரை சென்ற நாடி 37 விநாடி 18 இல் முதலிரு பாகங்களுக்குமுரிய நாடி 30 விநாடி $18\frac{1}{2}$ ஐக் கழித்தால், எஞ்சிய நாடி 6 விநாடி $59\frac{1}{2}$ உம் மூன்றாம் பாதத்திற் சென்ற நேர மாகும். ஆதலாற் குழந்தையின் சென்ம நட்சத்திரம் உரோகிணி என்பதும், உரோகிணி மூன்றாம் பாதத்திற் சென்ற நாடி 6 விநாடி $9\frac{1}{2}$ என்பதும் பெறப்படும்.

ஒரு பிள்ளை பிறக்கும்பொழுது சந்திரன் இராசி மண்டலத்திலுள்ள 27 நட்சத்திரங்களுள் எந்த நட்சத் திரத்திற் சஞ்சரிக்கின்றாரோ அந்த நட்சத்திரமே பிள்ளையின் சென்ம நட்சத்திரமாகும். இரண்டாம் பாடத்தில் ஒவ்வோர் இராசிக்குமுரிய நட்சத்திர பாதங்க ளெவையெவையெனப் படித்துள்ளோம். அந்த அட்ட வணையைப் பார்த்தால் கார்த்திகையின் பின் மூன்று பாதங்களும் உரோகிணியின் நான்கு பாதங்களும் மிருகசீரிடத்தின் முன்னிரண்டு பாதங்களும் இடபராசிக் குரியவை யென்பது காணலாம். ஆகவே மேற்குறித்த பிள்ளையின் சந்திரலக்கினம் இடபமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குக் கணக்கிட்டறிந்த சந்திர லக்கினமாகிய இடபத்தையும் ஆறாம் பாடத்திற் கணக்கிட்டறிந்த உதயலக்கினமாகிய மகரத்தையும் ஓர் இராசிச் சக்கரத்திலமைத்தால் அது கீழ்க் காட்டுமாறமையும்:




இனிப் பிள்ளை பிறந்த நேரத்துக்குரிய அன்றைய கிரகநிலை யென்ன வென்பதைப் பார்ப்போம்.

பஞ்சாங்கத்தில் ஐம்பத்து மூன்றாம் பக்கக் கடைசியில் ஓர் இராசிச் சக்கரத்திற் கீழ்க் காட்டி யிருப்பது போலக் கிரகநிலை குறிப்பிடப்பட்டிருப்பது காணலாம். இராசிகளுட் குறிக்கப்பட்டிருக்குங் கிரக நிலை நந்தன வருடம் ஐப்பசி மாதம் ஆரம்பிக்குஞ் சமயத்திற்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | குரு | | |
| | **உ. நா.வி. மாற்றம்**<br>11.08.44 விரு. புதன்<br>25.11.40. தனு - சுக்<br>27.43.39. மகர -குச | | கேது |
| இராகு | | | |
| குசன் | சுக்கிரன் | இரவி<br>புதன் | சனி |

(இரவி = சூரியன் ; குசன் = செவ்வாய் ;
குரு = வியாழன்)

இங்கு கிரகங்கள் தாம் நிற்கும் இராசிகளை விட்டு அடுத்த இராசிகளுக்குச் செல்லுந் தேதியும் நேரமும் மேற்காட்டிய சக்கர உள்வெளியிற் குறிக்கப்பட்டிருப்பது காண்க. புதன், சுக்கிரன், குசன் ஆகிய மூன்று கிரகங்களும் முறையே பதினோராம் இருபத்தைந் தாம், இருபத்தேழாம் தேதிகளில் அத்தேதிகளுக்கு அருகிற் காட்டியிருக்கும் நேரங்களில் சக்கரத்தில் தாமிருக்கும் இராசிகளிலிருந்து அடுத்த இராசிகளுக் குச் செல்லும். மற்றைக்கிரகங்களுக்கு மாதம் முடிவதற் குள் இராசி மாற்றமில்லை.

இராகு கேதுக்களும், வக்கிரக் கிரகங்களும் இடஞ் சுழியாக ஓடுபவையாதலின் இவற்றின் இராசி மாற் றங்கள் வலமிருந்து இடமாகக் குறிக்கப்படும். ஆனி மாதம் முப்பதாந்தேதி 3 நாடி 11 விநாடியில் இராகு கும்பத்திலிருந்து இடஞ்சுழியாக மகரத்திற் பிரவேசஞ் செய்வது காண்க. இவ்வாறே வக்கிரக் கிரகங்களு மமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எடுத்துக்கொண்ட சாதகக் குறிப்புக்குரிய நாள் பத்தொன்பதாந் தேதியாதலால் அத்தேதிக்கு முன் புதன் மாத்திரம். துலாத்திலிருந்து விருச்சிக ராசிக்கு மாறுவதை நாங்கள் கவனிக்க வேண்டும். மற்றைய இரு கிரகங்களின் மாற்றமும் பத்தொன் பதாந் தேதிக்குப்பின் ஆதலால் அக்கிரகங்களையும் ஏனைய கிரகங்களையும் இராசிச் சக்கரத்தில் உள்ள வாறே குறித்துக்கொள்க. ஆகவே குறித்த நேரத்திற் குரிய கிரகங்களின் இராசிநிலை கீழ்க் காட்டியவாறு அமையும்.

| | | | |
|---|---|---|---|
| | குரு | சந்திரன் | |
| | இராசி நிலை | | கேது |
| ல. / இராகு | | | |
| செவ்வாய் | சுக்கிரன் புதன் | இரவி | சனி |

இச் சக்கரம், கிரகங்கள் எந்தெந்த இராசிகளில் நிற்கின்றனவென்பதை மாத்திரங் காட்டுகின்றது. இது பற்றி இதை இராசி நிலையெனக் கூறுவதே பொரு த்தமாகும்.

கிரகங்களை அவற்றின் புடங்களோடு சக்கரத்தி லுள்ள இராசிகளிற் குறித்துக் காட்டுவதானால், அச்சக் கரம் கிரகநிலைச் சக்கரமென அழைக்கப்படுதல் பொருத்தமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாம் பாடம்

# நவாம்ச நிலை

கிரகங்கள் தாம் நிற்கும் இராசிகளுக்குத் தக சுபாசுப பலன்களைக் கொடுப்பர். இப் பலன்கள் நவாம்ச நிலையால் வலிமை மிக்கும், வலிமை குறைந்தும், சமனடைந்தும் நிகழ்வதால் இந் நவாம்ச நிலை, அறிய வேண்டியதோர் முக்கிய விடயமாகும்.

ஒவ்வோர் இராசியையும் ஒன்பது கூறாகக் கண்டு, அவற்றுள் எவ்வெக் கூற்றிற் கிரகங்கள் நிற் கின்றன என்பதைக் காட்டுவது நவாம்ச நிலையாகும்.

ஓர் இராசிக்குரிய நட்சத்திர பாதங்கள் ஒன்பதென முன்னரே படித்துள்ளோம். ஒவ்வோர் இராசியிலும் எந்தெந்த நட்சத்திர பாதங்களிற் கிரகங்கள் நிற்கின்றன வென்பதைக் காட்டுவது நவாம்ச நிலையாகு மெனவுங் கூறலாம். இந் நவாம்ச நிலையைச் சக்கரத்திற் குறிப்ப தெப்படி?

நந்தன வருடத் திருக்கணித பஞ்சாங்கத்தில் முப்பத்தைந்தாம் பக்கம் முதல் முப்பத்தொன்பதாம் பக்க மீறாக அவ்வருடக் கிரகபாதசாரமும் அக்கிரகங் களின் நவாம்ச ராசிகளுங் காணப்படும். பாதசாரத் துக்கு நேரே வலப்புறத்தில் இடப்பட்ட நாடி விநாடி கள் அவ்வப் பாதங்களிற் கிரகங்கள் பிரவேசிக்குங் காலமாகும்.

மேற்குறித்த முப்பத்தைந்தாம் பக்கத்திற் சூரிய பாதசாரத்தில் ஐப்பசி மாதத்திற்குரிய பாகத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| உ | நா. வி. | நட்ச. பாதம் | அம்சம் |
|---|---|---|---|
| 17<br>20 | 19. 6<br>38. 38 | சுவாதி 4<br>விசாகம் 1 | மீனம்<br>மேடம் |

என இருப்பது காணலாம்.

சூரியன் ஐப்பசி மாதம் பதினேழாந் தேதி 19 நாடி 6 விநாடிக்குச் சுவாதி நட்சத்திரம் நான்காம் பாதத்திற் பிரவேசிக்கின்றாரென்பதும், இந்நட்சத்திர பாதத்திற்குரிய நவாம்ச ராசி மீனம் என்பதும், இவ்வாறு சுவாதி நான்காம் பாதத்திற் பிரவேசித்த சூரியன் இருபதாந் தேதி 38 நாடி 38 விநாடி வரைக்கும் சுவாதி நான்காம் பாதத்திற் சஞ்சரிக்கின்றா ரென்பதும் அதன் கருத்தாகும்.

நாம் முன்னர் உதாரணமாக எடுத்துக் கொண்ட செனனகாலமாகிய ஐப்பசி மாதம் பத்தொன்பதாந் தேதி இச் சஞ்சார காலத்துள்ளமைவதால், அச் செனனக் குறிப்பிற்குரிய நவாம்ச சக்கரத்தில் சூரியன் மீனத்திற் குறிக்கப்பட வேண்டும். இவ்வாறே ஏனைய கிரகங்களின் நவாம்ச நிலையுங் குறிக்கப்படின் அந் நிலை கீழ்க்காட்டுமாறு அமையும்:

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | | | |
| கேது | நவாம்ச நிலை | | |
| சுக்கிரன் | | | இராகு |
| | செவ்வாய் | புதன்<br>குரு | சனி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:- பஞ்சாங்கத்தில் கிரக பாதசாரங் குறிக்கப் பட்ட பாகத்தில் நட்சத்திரப் பெயருக்குப் பக்கத்தில் அடைப்புக்குறிக்குள் வரும் இராசிப் பெயர்கள் கிரகராசிப் பிரவேசத்தையும் அம்சம் என்ற வரிசை யில் வரும் இராசிப் பெயர்கள் நவாம்ச ராசிப் பிரவேசத்தையுங் குறிக்கும். கிரகப் பிரவேசம் 9 பாதங்களுக் கொருமுறை குறிக்கப்பட்டிருப்பதனை யும் நவாம்சராசிப் பிரவேசம் பாதந்தோறும் குறிக்கப் பட்டிருப்பதனையும் அறிக.

## II

பாதசாரமும் நவாம்ச ராசியும் சந்திரனுக்கும் இலக்கினத்துக்கும் பஞ்சாங்கங்களிற் குறிக்கப்படும் வழக்கமில்லை. ஒரு பிள்ளையின் சென்ம நட்சத்திரம் என்னவென்பதும் அந்நட்சத்திரத்தில் எத்தனையாவது பாதத்திற் பிள்ளை பிறந்ததென்பதும் கணக்கிட்டறியும் முறை ஏழாம் பாடத்திற் படித்துள்ளோம். அங்கு கண்ட நட்சத்திர பாதத்திற்குரிய நவாம்ச ராசி என்ன வென்பது கீழ்க் காட்டுமாறறிய வேண்டும்.

அசுவினி ஆரம்பமும் மேடாரம்பமும் ஒன்றா தலால், அசுவினி முதலாம் பாதத்திற் சஞ்சரிக்குங் கிரகத்தை மேடத்திலும், இரண்டாம் பாதத்திற் சஞ்சரிப்பதை இடபத்திலுமாக இம்முறையே குறித் தால் அசுவினி, பரணி, கார்த்திகை ஆகிய மூன்று நட்சத்திரங்களின் 12 பாதங்களும் மேடாதி மீனாந்தம் 12 இராசிகளிலு மமையும். உரோகிணி, மிருக சீரிடம் திருவாதிரை மூன்றும் இரண்டாம் வட்டத்தில் மேடாதி மீனாந்தம் 12 இராசிகளிலுமமையும். ஆகவே உரோகிணி மூன்றாம் பாத நவாம்ச ராசி மிதுனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் உதாரண மாக எடுத்துக்கொண்ட செனனத்திற் சென்ம நட்சத்திரம் உரோகிணி மூன்றாம் பாதமாத லால், சந்திர நவாம்சராசி மிதுனமாகும்.

## III

உரோகிணி மூன்றாம் பாதத்தின் நவாம்ச ராசி மிதுன மென்பதைக் கீழ்க்காணுங் கணித விதிப் பிர காரமு மறியலாம்.

நட்சத்திர வரிசையில் உரோகிணி நான்காம் நட்சத்திரமாகும். உரோகிணி மூன்றாம் பாதம் பதினைந்தாம் பாதமாகும். மேடாதியாக ஓர் இராசிக்கு ஒரு பாதமாக எண்ணில் பதினைந்தாம் பாதம், ஒரு வட்டம் சென்று இரண்டாவது வட்டத்தில் மூன்றாவது இராசியில் அமையும். மேடத்திலிருந்து மூன்றாவது இராசி மிதுனமாகும். இன்னோர் உதாரணமாகப் பூராடம் இரண்டாம் பாதத்தை எடுத்துக்கொள்வோம். அசுவினி ஆதியாகப் பூராடம் இருபதாவது நட்சத்திர மாதலால் அதற்கு முன்னுள்ள 19 நட்சத்திரங்களுக்கு முள்ள எழுபத்தாறு பாதமும் இந் நட்சத்திரத்திற்குரிய 2 பாதமுமாகப் பூராடம் இரண்டாம் பாதம் எழுபத் தெட்டாவது பாதமாகும். மேடாதி மீனாந்தம் 6 வட்டத் திற்கும் 72 பாதங்கள் சென்று, ஏழாவது வட்த்தில் ஆறாவது இராசியில் எழுபத்தெட்டாவது பாதமாகிய பூராடம் இரண்டாம் பாதம் அமையும். ஆகவே பூராடம் இரண்டாம் பாத நவாம்ச ராசி கன்னியாகும்.

## IV

இலக்கின நவாம்சம் எப்படிக் குறிக்க வேண்டு மென்பதை இனிப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முன்னர் எடுத்துக்கொண்ட உதாரணத்தில் பிள்ளை பிறந்த இலக்கினம் மகரமெனவும், அதிற் சென்ற நேரம் 4 நாடி 44 விநாடியெனவுங் கண்டோம். மகரராசிமானம் 4 நாடி 50 விநாடியென் பதைப் பஞ்சாங் கத்திலுள்ள இராசிமான அட்டவணையிலிருந்து கண்டுகொள்ளலாம். இதனை 9 கூறுகளாக்கின் ஒரு கூற்றுக்கு $32\frac{2}{9}$ விநாடியமையும் ஒவ்வொரு கூற்றுக்கும் $32\frac{2}{9}$ விநாடி வீதங்கணக்கிட்டால் மகரத்திற் சென்ற தாகிய 4 நாடி 44 விநாடியும் ஒன்பதாம் பாதத்தில அமையும்,

மகரத்திற்குரிய நட்சத்திர பாதங்கள் உத்தராடம் பின் மூன்று பாதங்களும், திருவோணம் நான்கு பாதங் களும், அவிட்டம் முன்னிரண்டு பாதங்களுமாகும். ஆகவே மகரத்தில் ஒன்பதாம் பாதம் அவிட்டம் இரண்டாம் பாதமாகும்.

முன்னர்க் காட்டியவாறு நட்சத்திரங்களை மும் மூன்று கொண்ட கூட்டங்களாக்குமிடத்து, திரு வோணம், அவிட்டம், சதயம் ஆகிய மூன்றும் எட்டா வது கூட்டத்திலமையும் இந் நட்சத்திர பாதங்கள் பன்னிரண்டையும் இராசிக்கொரு பாதமாகக் குறித்தால் இக் கூட்டத்தின் ஆறாவது பாதமாகிய அவிட்டம் இரண்டாம் பாத நவாம்சராசி, மேடத்திலிருந்து ஆறாவது ராசியாகிய கன்னியாக அமையும்.

இங்கு கண்ட இலக்கின நவாம்சத்தையும் சந்திர நவாம்சத்தையும் முன்னர் குறித்த நவாம்ச சக்கரத் திற் சேர்த்தால் அது கீழ்க்காட்டுமாறு அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | | | சந்திரன் |
| கேது | | | |
| சுக்கிரன் | | | ராகு |
| | செவ்வாய் | புத<br>குரு | ல<br>சனி |

V

நவாம்ச நிலை கணிப்பதற்குரிய இன்னுமொரு விதியை ஆராய்வோம். மேடராசிக்குரிய நட்சத்திர பாதங்கள் ஒன்பதுக்குமுரிய நவாம்சராசிகள் மேடாதி தனுஈறாகவுள்ள 9 இராசிகளாகும். ஆகவே இடப ராசிக்குரிய நட்சத்திர பாதங்கள் ஒன்பதுக்குமுரிய நவாம்ச ராசிகள் மகராதி கன்னியீறாகவுள்ள 9 இராசிகளாகும். இவ்வாறாகவே மிதுன இராசியிலுள்ள ஒன்பது பாதங்களுக்கும் துலாமாதி மிதுன மீறாகவுள்ள 9 இராசிகளும் கர்க்கடக இராசியின் 9 பாதங்களுக்கும் கடகாதி மீனாந்தமுள்ள 9 இராசிகளும் நவாம்ச ராசிகளாக அமையும். மேடாதி கடக மீறாகவுள்ள நான்கு இராசிகளின் 36 பாதங்களும் இராசி வட்டம் மூன்றுட் பூர்த்தியாவதால், சிங்கம் முதலாம் பாதம் நான்காவது வட்ட ஆரம்பமாகும், தனு முதலாம் பாதம் ஏழாவது வட்ட ஆரம்பமாகும். ஆகவே மேடம், சிங்கம், தனு ஆகிய மூன்று இராசிகளுக்கும் நவாம்ச ஆரம்ப இராசி மேடமாகும். இடபம், கன்னி, மகரம் ஆகிய மூன்று இராசிகளுக்கும் நவாம்ச ஆரம்ப இராசி மகரமாகும். மிதுனம், துலாம், கும்பம் ஆகிய மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசிகளுக்கும் நவாம்ச ஆரம்ப இராசி துலாமாகும். கர்க்கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய மூன்று இராசி களுக்கும் நவாம்ச ஆரம்பராசி கர்க்கடகமாகும். இதனைப் பின்வரும் விதியிலமைக்கலாம்.

மேடக்கோணுக்கு நவாம்ச ஆரம்பராசி - மேடமாகும்
இடபக்கோணுக்கு நவாம்ச ஆரம்பராசி - மகரமாகும்
மிதுனக்கோணுக்கு நவாம்ச ஆரம்பராசி - துலாமாகும்
கடகக்கோணுக்கு நவாம்ச ஆரம்பராசி - கடகமாகும்.

மேடக்கோண்:- மேடசிங்கதனு.
இடபக்கோண்:- இடபகன்னியாமகரம்
மிதுனக்கோண்:- மிதுனதுலாகும்பம்
கடகக்கோண்:- கடகவிருச்சிகமீனம்.

நாம் மேலே உதாரணமாக எடுத்துக்கொண்ட உரோகிணி மூன்றாம் பாதத்திற்குரிய நவாம்ச ராசியை இவ்விதியாற் கணிப்போம். உரோகிணிக்குரிய இராசி இடபமாகும். உரோகிணி மூன்றாம் பாதம் இடபத்தின் ஆறாம் பாதமாகும். இடபக் கோணுக்கு நவாம்ச ஆரம்ப ராசி மகரமாகும். மகரத்திலிருந்து ஆறாவது இராசி மிதுனமாதலால் உரோகிணி மூன்றாம்பாத நவாம்சராசி மிதுனமாதல் காண்க. மேலே உதாரணமாக எடுத்துக் கொண்ட மகரலக்கின ஒன்பதாம் பாதத்திற்குரிய நவாம்ச ராசியை இவ்விதியாற் கணிப்போம். மகரராசி இடபக் கோணிலுள்ள இராசியாகும். இடபக் கோணுக்கு நவாம்ச ஆரம்பராசி மகரமாகும். ஆகவே மகர லக்கின ஒன்ப தாம் பாதத்திற்கு மகரத்திலிருந்து ஒன்ப தாம் இராசியாகிய கன்னி நவாம்ச ராசியாகும்.

நாம் மேலே எடுத்துக்கொண்ட பத்தொன்பதாந் தேதிக்குரிய சூரிய பாதசார அட்டவணையில் கிரக பாதசாரமும் நவாம்சராசியும் குறிப்பதற்கு வேண்டிய பஞ்சாங்கத்தின் பாகம் குறித்தது போல ஏனைய கிரகங்களின் பாதசாரமும், நவாம்சராசியும் குறிப் பதற்கு வேண்டிய பஞ்சாங்கத்தின் பாகம் கீழே காண்க:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குசபாதசாரம்

| ஐப்பசி | உ | நா. | வி. | நட்ச. | பாத | அம்சம் |
|---|---|---|---|---|---|---|
| " | 18 | 48 | 25 | பூராடம் | 4 | விருச்சிகம் |
| " | 23 | 16 | 51 | உத்தராடம் | 1 | தனு |

### புதன் பாதசாரம்

| ஐப்பசி | உ | நா. | வி. | நட்ச. | பாத | அம்சம் |
|---|---|---|---|---|---|---|
| " | 18 | 41 | 47 | அனுடம் | 3 | துலாம் |
| " | 21 | 26 | 22 | அனுடம் | 4 | விருச்சிகம் |

### சுக்கிரன் பாதசாரம்

| ஐப்பசி | உ | நா. | வி. | நட்ச. | பாத | அம்சம் |
|---|---|---|---|---|---|---|
| " | 16 | 58 | 36 | கேட்டை | 2 | மகரம் |
| " | 19 | 42 | 58 | கேட்டை | 3 | கும்பம் |

### குரு பாதசாரம்

| ஐப்பசி | உ | நா. | வி. | நட்ச. | பாத | அம்சம் |
|---|---|---|---|---|---|---|
| " | 18 | 15 | 34 | பரணி | 3 | துலாம் |
| மார்க, | 23 | வக்கிரத் தியாகம் | | | | |
| தை | 28 | 51 | 43 | பரணி | 3 | துலாம் |

### சனிபாதசாரம்

| ஐப்பசி | உ | நா. | வி. | நட்ச. | பாத | அம்சம் |
|---|---|---|---|---|---|---|
| " | 10 | 50 | 3 | சித்தி | 2 | கன்னி |
| " | 12 | கிழக்கே உதயம் | | | | |
| கார்த் | 10 | 24 | 40 | சித்திரை (து) | 3 | துலாம் |

### இராகு கேது பாதசாரம்

| ஆவ | உ | நா. | வி. | இராகு | அம் | கேது | அம். |
|---|---|---|---|---|---|---|---|
| " | 29 | 57 | 11 | அவிட்டம் 1 | சிங்க. | ஆயிலி 3 | கும்பம் |
| ஐப்பசி | 30 | 51 | 8 | திரு. 4 | கட | ஆயிலி 2 | மகரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் பாடம்

# மகா தசாபுத்தி

ஒருபிள்ளை பிறந்த நேரத்தைக் கொண்டு அந்த நேரத்துக்குரிய இலக்கினம், இராசிநிலை, நவாம்ச நிலை ஆகியனவற்றைக் கணிப்பதோடு, அப்பிள்ளை பிறந்த காலத்திலுள்ள மகாதசையென்ன அத் தசையில் என்ன புத்தி நிகழ்கின்றது என்பவற்றையுமறிந்தாற்றான் அப்பிள்ளைக்குரிய அரிட்டதோஷம் முதலியவற்றைப் பற்றி ஆராயமுடியும். இப்பாடத்தில் மகா தசாபுத்தி கணிக்கும் விதம் எப்படியென்பதைப் படிப்போம்.

பிறந்த பிள்ளையின் சென்ம நட்சத்திரத்தையறியும் வகையை முந்திய பாடங்களிற் படித்துள்ளோம். எந்த நட்சத்திரஞ் செனம நட்சத்திரமாயமைகின்றதோ அந்த நட்சத்திரத்துக்குக் கீழே காட்டியுள்ள அட்டவணைப் பிரகாரம் அமையும் மகா தசையே செனன காலத்தில் நிகழுந் தசையாகும் சக்கர தசை, மனோதசை முதலாக வேறு பல தசைகளுமுள, அவை யாவற்றிலும் பலனை விரிவாக அறிய வைப்பது இத் தசையாதலின் இதற்கு 'மகா" என்னும் அடைமொழியைக் கொடுத்து நட்சத்திர மகா தசையென்பர். நட்சத்திரமூலம் அமையுந் தசையாதலால், இத் தசையை "நட்சத்திரதசை" என்பது சோதிடவழக்கு. நட்சத்திரத்தின் பரியாயப் பெயர் ஒன்று "உடு" ஆதலினால் இது, "உடுமகாதசை" எனவும் வழங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நட்சத்திரம் | | மகாதசை |
|---|---|---|
| அசுவினி | - | கேது |
| பரணி | - | வெள்ளி |
| கார்த்திகை | - | சூரியன் |
| உரோகிணி | - | சந்திரன் |
| மிருகசீரிடம் | - | செவ்வாய் |
| திருவாதிரை | - | இராகு |
| புனர்பூசம் | - | வியாழன் |
| பூசம் | - | சனி |
| ஆயிலியம் | - | புதன் |

இந்த ஒன்பது நட்சத்திரங்களுக்கும் ஒன்பது தசைகளும் இங்குகாட்டிய முறைப்படி அமையும். மீண்டும் மகம் முதலாகக் கேட்டை யீறாகவுள்ள ஒன்பது நட்சத்திரங்களுக்கும், மேற்காட்டிய முறைப் படி கேது முதல் புதன் ஈறாகவுள்ள ஒன்பது தசை களும் அமையும் பின்னும் மூலம் முதல் இரேவதி யீறாகவுள்ள ஒன்பது நட்சத்திரங்களுக்கும் அவ் வொழுங்கின்படியே ஒன்பது தசைகளும் அமையும்.

நட்சத்திரங்களுக்குள்ள தசைகளையும் ஒவ் வொரு தசைக்குமுரிய தசா வருடத் தொகையையும் அட்டவணைப்படுத்தினால் அது கீழ்க்காணுமாறாகும்.

| நட்சத்திரம் | மகாதசை | வருடத்தொகை |
|---|---|---|
| அசுவினி,மகம்,மூலம் | கேது | 7 |
| பரணி,பூரம்,பூராடம் | வெள்ளி | 20 |
| கார்த்திகை, உத்தரம், உத்தராடம் | சூரியன் | 6 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| உரோகிணி, அத்தம், திருவோணம் | சந்திரன் | 10 |
| மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் | செவ்வாய் | 7 |
| திருவாதிரை, சுவாதி, சதயம் | இராகு | 18 |
| புனர்பூசம், விசாகம், பூரட்டாதி | வியாழன் | 16 |
| பூசம், அனுஷம்,உத்தரட்டாதி | சனி | 19 |
| ஆயிலியம்,கேட்டை, இரேவதி | புதன் | 17 |
| ஒன்பது கிரகங்களுக்கு முரிய தசாகால மொத்தம் | | 120 |

சென்மகால மகாதசையை அறிந்து அத்தசைக் குரிய மொத்த வருடத்திற் சென்றது போக நின்ற வருடம் எத்தனையென்பது கணக்கிட வேண்டும். சென்ம நட்சத்திராதிபனின் தசா வருடத்தில் சென்ம நட்சத்திரத்தில் நின்ற நாழிகைக்கு * திரயராசிகமாக அமையும் வருடத்தொகையே செனன கால தசை இருப்பு வருடமாகும். ஆகவே சென்ம நட்சத்திரத்தில் எஞ்சி நின்ற நாழிகையை அந் நட்சத்திர தசாவருட சங்கியையாற் பெருக்கி, அந்நட்சத்திர பரமநாழிகை யாற் பிரிக்க வருவது, குறித்த தசையிற் செல்லாது நின்ற வருடமாயமையும், சேடத்தைப் பன்னிரண்டாற் பெருக்கிப் பரம நாழிகையாற் பிரிக்க வருவது மாதமாகும். அதன் சேடத்தை முப்பதாற் பெருக்கிப் பரம நாழிகையாற் பிரிக்க வருவது நாளாகும்.

விசாக நட்சத்திரத்தின் மொத்த நாழிகை அறுபதாயின், அதில் முப்பது நாழிகை சென்ற நேரத்திற் பிள்ளை பிறந்தால், விசாகத்துக்குரிய குரு

* Proportion



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசாவருடம் பதினாறில் திரயராசிகமாக எட்டு வருடஞ் சென்று இன்னும் எட்டுவருடமிருக்கிறதாக அமையும்.

ஒவ்வொரு தசைக்கும் அத்தசாதிபருடைய புத்தியே முதற் புத்தியாக மேற்சொல்லிய தசாதி பருடைய வரிசைக் கிரமப்படி புத்திகள் அமையும்.

மகாதசைக்குரிய புத்திகளின் காலங்களைக் கணிக்கும் வகை பின்வருமாறு: எத்தசைக்குப் புத்தி காணவேண்டுமோ, அத்தசைக்குரிய மொத்த வருடத்தை வேண்டிய புத்திநாதனின் தசைக்குரிய மொத்த வருடத்தாற் பெருக்கி, ஒன்பது கிரகங்களுக்கு முரிய மொத்த வருடமாகிய 120 ஆற் பிரிக்கவரும் வருடம், மாதம், நாள் அக் குறிப்பிட்ட தசையில் நாம் எடுத்துக்கொண்ட கிரகத்தின் புத்திக்குரிய மொத்தக் காலமாகும். ஒன்பது கிரகங்களின் தசைகளுக்குமுரிய 81 புத்திகளின் கால அளவுகளைப் பஞ்சாங்கங்களிற் காணலாம்.

சென்ன காலத்தில் நிகழுந் தசையின் இருப்பு வருடத்திலிருந்து அத்தசையின் இறுதிப் புத்தியின் காலத்தொகை முதலாக அதற்கு முன்னுள்ள புத்தி நாதர்களின் காலத்தொகைகளைக் கழிக்கக் கூடிய மட்டும் ஒவ்வொன்றாகக் கழித்து, கழிக்கப்படாது எஞ்சி நின்ற காலத்தொகை, யாருடைய புத்திகாலமாக அமைகின்றதோ அத்தொகை அக்கிரகத்தின் புத்தியில் இருப்புக் காலமாகும். ஆறாம் ஏழாம் பாடங்களில் நாங்கள் உதாரணமாக எடுத்துக்கொண்ட சென்ன சாதகத்தில், உரோகிணி நட்சத்திரத்திற் சென்ற நேரம் நாடி 37 விநாடி 18 எனவும், அந் நட்சத்திரத்தின் மொத்த நேரம் நாடி 60 விநாடி 37 எனவுங் கண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால் அந் நட்சத்திரத்தின் இருப்பு,நாடி 23 விநாடி 19 ஆகும். இந்த 23 நாடி 19 விநாடியை, விநாடியாக்க 1399 விநாடி அமையும். இதனை மேற்காட்டிய அட்டவணைப்படி உரோகிணி நட்சத்திரத்திற்குரிய சந்திர மகாதசையின் மொத்த வருடமாகிய பத்தாற் பெருக்க 13990 விநாடியாகும். உரோகிணி நட்சத்திரத்தின் பரமநாழிகை 60 விநாடி 37-க்குரிய விநாடித் தொகையாகிய 3637ஆல், மேலே கண்ட 13990 விநாடியைப் பிரிக்கவரும் ஈவு 3 வருடமாகும். சேடமாகிய 3079 ஐ 12 ஆற் பெருக்கி மீண்டும் 3637 ஆற் பிரிக்கவரும் ஈவு 10 மாதமாகும். சேடமாகிய 578 ஐ 30 ஆற் பெருக்கி மீண்டும் 3637 ஆற் பிரிக்க வரும் ஈவு 5 நாளாகும். ஆகவே நாம் எடுத்துக்கொண்ட குறிப்பின் சந்திர மகாதசை இருப்பு வருடம் 3, மாதம் 10, நாள் 5 ஆகும்.

செனனகால மகாதசை, சந்திரதசை யென்பதும், அத்தசையில் இருப்பு வருடம் 3, மாதம் 10 நாள் 5 என்பதும் பெறப்படும்.

சந்திர தசையில் இறுதிப்புத்தி, சூரிய புத்தியாகும். சூரியபுத்திக்கு 6 மாதம், அதற்குமுன்னுள்ள வெள்ளி புத்திக்கு 1 வருடம் 8 மாதம், அதற்குமுன்னுள்ள கேது புத்திக்கு 7 மாதமாகிய இத்தொகை மூன்றையும் மேலே கண்டறிந்த 2 3 வருடம் 10 மாதம் 5 நாளிற் கழித்தபின் எஞ்சி நின்ற 1 வருடம் 1 மாதம் 5 நாள் கேதுவுக்கு முன்னுள்ள புதன் புத்தியில் இருப்புக் காலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் பாடம்

## நேரம்

## I. சுதேச* நேரம்

பூமியில் ஒரு குறித்த இடத்திலிருந்து கிழக்கு மேற்காகவுள்ள தூரம் தேசாந்தர மெனவும், வடக்குத் தெற்காகவுள்ள தூரம் அட்சமெனவும் வழங்கப்படும். உலகின் பெரும்பாலான நாடுகள் தேசாந்தரங் கணிப்பதற்குக் கிறீன்விச்சை ஆரம்பத்தானமாகக் கொள்ளும்.

கிறீன்விச்சு நேரத்துடன் தேசாந்தர பாகை ஒன்றிற்கு நான்கு மினிற்று வீதம், கிறீன்விச்சுக்குக் கிழக்கேயுள்ள இடங்களுக்குக் கூட்டியும், மேற்கேயுள்ள இடங்களுக்குக் கழித்துங் கணிக்கப்படும் நேரம் அவ்வவ்விடங்களின் சுதேச நேரமாகும். அதாவது கிறீன்விச்சில் பகல் பன்னிரண்டு மணி நேரத்தில், கிழக்குத் தேசாந்தரம் முதற் பாகையிற் பிற்பகல் பன்னிரண்டு மணி நான்கு மினிற்றும், இரண்டாவது பாகையிற் பன்னிரண்டு மணி எட்டு மினிற்றுமாகச் சுதேச நேரங்களமையும் இவ்வாறு கிழக்குத் தேசாந்தரம் எண்பதாவது பாகையிலிருக்கும் யாழ்ப்பாணத்தில், பிற்பகல் ஐந்துமணி இருபது மினுற்றுச் சுதேச நேரமாக அமையும். மேற்குத் தேசாந்தரம் எண்பதாம் பாகையில் அமைந்துள்ள இடங்களின் சுதேச நேரங் காலை ஆறுமணி நாற்பது மினிற்றாகும். கிழக்குத் தேசாந்தரம் எண்பதே முக்காற் பாகையிலிருக்குங்

* Local time



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டியிற் சுதேச நேரம், மாலை ஏழுமணியாயிருக்கும் பொழுது, கிறீன்விச் நேரம் பிற்பகல் ஒருமணி முப்பத் தேழு மினிற்றாகும். கொழும்பு, கிறீன் விச்சுக்குக் கிழக்கே 79 பாகை 51 கலை தூரத்திலும், கண்டி 80 பாகை 41 கலை தூரத்திலுமிருத்தலின், கொழும் புக்குங் கண்டிக்கு மிடைத்தூரம் 50 கலையாகும். ஆதலாற் கொழும்பிற் சூரியன் உதிக்கும் நேரத்தில், கொழும்பிலிருந்து கிட்டத்தட்ட ஒருபாகை கிழக்கே யுள்ள கண்டியில் சூரியன் உதித்து நான்கு மினிற்றுச் சென்றிருக்கும். கண்டியிற் காலை ஆறு மணியாயிருக் கும் போது கொழும்பிற் காலை ஐந்துமணி ஐம்பத் தாறு மினிற்றாயிருக்கும். இவ்விதமாக உண்டாகும் அவ்வவ்விடங்களுக்குரிய நேரம் சுதேச நேரமெனப் பெயர்பெறும்.

## II. * பொது நேரம்

புகைவண்டி மார்க்கமாகக் கொழும்பிலிருந்து சென்று கண்டியிலிறங்குவோருடைய மணிக்கூட்டு நேரஞ் சுதேச நேரமாக இருப்பின் அந்த நேரத்திற்குங் கண்டியிலுள்ளாருடைய சுதேசநேரத்திற்கும் நான்கு மினிற்று வித்தியாசம் இருக்கும். இவ் வித்தியாசம் புகைவண்டிப்பகுதிக் கருமங்களுக்குப் பெரிதும் சிக்கலை யுண்டாக்கும். இவ்வாறு சிக்கல்கள் உண்டா காமல், நாட்டின் இலௌகீக வியவகாரங்கள் ஒரே சீராக நடைபெறும் வண்ணம், இலங்கை இந்திய அரசாங்கத்தார், நாடு முழுவதும் ஒரே கடிகார முறை யில், நேரமறிந்து கொள்ளுமாறு, கிறீன்விச்சு நேரத்

* Standard time



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் ஐந்துமணி முப்பது மினிற்றுக்கூட்டி வழங்க நிர்ணயித்திருக்கின்றனர். இப்படிக் கூட்டிவரும் நேரம் பொதுநேரம் எனப் பெயர்பெறும். சாதாரண வழக்கில் இப் பொதுநேரத்தைக் காட்டுங் கடிகாரங்களே உப யோகிக்கப்படுகின்றன. இதனாற் கொழும்பிலுள்ள கடிகாரங் காட்டும் நேரத்தையே கண்டியிலுள்ள கடி காரமுங் காட்டும். இப்படியாக இந்தியா இலங்கைக்கு $5\frac{1}{2}$ மணியும், பர்மாவுக்கு $6\frac{1}{2}$ மணியும், மலாயா வுக்கு $7\frac{1}{2}$ மணியும், தென்ஆபிரிக்காவுக்கு 2 மணியும் கிறீன் விச்சு நேரத்துடன் கூட்டி அவ்வத் தேசங்களின் பொது நேரமாகக் கொள்ளுகிறார்கள்.

நான்கு மினிற்றுக்கு ஒரு பாகைவீதங் கணக் கிடின், 5 மணி 30 மினிற்றுக்கு $82\frac{1}{2}$ பாகை உண்டாகும் கிறீன்விச்சிலிருந்து கிழக்குத் தேசாந்தரம் $82\frac{1}{2}$ பாகை யில், சுதேச நேரமும் பொது நேரமும் ஒன்றாகவே யிருக்கும். இஃது இந்திய இலங்கை நியதி நேர ரேகை எனப் பெயர்பெறும். பர்மாவுக்கு $97\frac{1}{2}$ பாகை நியதி நேர ரேகையாகும், பாகை ஒன்றுக்கு நான்கு மினிற்று வீதம், நியதி நேரரேகைக்குக் கிழக்கிலுள்ள ஊர் களுக்குக் கூட்டியும், மேற்கிலுள்ள ஊர்களுக்குக் கழித்துங் கொள்ள, அவ்வவ்வூர்களின் சுதேச நேரம் பெறப்படும். பொது நேரத்திற்கும் அவ்வவ்வூர்களின் சுதேச நேரத்திற்குமுள்ள வித்தியாசம் பொதுநேர அந்தரமினிற்று எனப் பெயர்பெறும்.

இலங்கை இந்தியாவின் நியதி நேர ரேகை யாகிய $82\frac{1}{2}$ பாகைக்கும் யாழ்ப்பாணத்தின் தேசாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமாகிய 80 பாகைக்குமுள்ள வித்தியாசமாகிய $2\frac{1}{2}$ பாகைக்குப் பத்துமினிற்று நேர வித்தியாச முண்டாகும். யாழ்ப்பாணம் நியதி நேர ரேகைக்கு மேற்கிலிருத் தலால், இப்பத்து மினிற்றைப் பொது நேரத்திலிருந்து கழிக்க, யாழ்ப்பாணச் சுதேச நேரம் பெறப் படும்.

## யாழ்ப்பாணத்திற் சில இடங்களின் பொதுநேர அந்தர மினிற்று

| | | |
|---|---|---|
| பழை | + 9 | மினிற்று |
| சாவகச்சேரி | + 9 | மினிற்று |
| பருத்தித்துறை | + 9 | மினிற்று |
| காங்கேயன்துறை | + 10 | மினிற்று |
| காரைநகர் | + 11 | மினிற்று |
| நெடுந்தீவு | + 11 | மினிற்று |

## III. பஞ்சாங்கமும் சுதேச, பொது நேரங்களும்

திருக்கணித பஞ்சாங்கத்தில் யாழ்ப்பாணச் சூரி யோதய உச்ச அத்தமனங்கள் பொதுநேரத்திற் குறிக் கப்பட்டிருப்பதும் * விதேச சூரியோதய உச்ச அத்த மனங்கள், அவ்வத்தேச சுதேச நேரத்திற் குறிக்கப்பட்டி ருப்பதுங் கவனிக்கப்படவேண்டிய விடயங்களாகும். பூமியின் அச்சுச் சரிவு காரணமாகச் சூரியோதய

* Foreign



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தமன நேரங்கள் அட்சந்தோறும் பேதப்படும் ஆனாற் சூரிய உச்சம் எங்கும் ஒரே நேரமாயிருக்கும். சூரிய உச்சத்தைச் சுதேச நேரத்திற் குறித்தால் எவ்விடத்திலுள்ளாருக்கும் அது உபயோகப்படும். ஆதலால், அது சுதேச நேரத்திற் குறிக்கப்பட்டிருக்கிறது. அவ்வத்தேசத்துக்குரிய பொதுநேரத்திலிது குறிக்கப்படின் ஒவ்வோரிடத்திற்கும் வித்தியாசமான நேரம் உண்டாகும். உதாரணமாகச் சித்திரை மாதம் முதலாந்தேதி சூரிய உச்ச நேரம் எல்லா இடங்களுக்கும் பன்னிரண்டு மணி ஒரு மினிற்றாகும். இந்த நேரஞ் சுதேச நேரமாகும். இதைப் பொது நேரத்திற் குறிக்கின், அவ்வத் தேசத்திற்குரிய பொது நேர அந்தரமினிற்றைக் கூட்டி அல்லது கழித்துக் குறித்தல் வேண்டும்.

**இதைப் பின்வரும் அட்டவணையிற் காண்க.**

| | சூரிய உச்சம் சுதேச நேரம் மணி மினிற் | பொதுநேர அந்தரமினிற்று | சூரிய உச்சம் பொது நேரம் மணி மினிற் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 12 - 01 | + 10 | 12 - 11 |
| பினாங்கு | 12 - 01 | + 49 | 12 - 50 |
| கொழும்பு | 12 - 01 | + 11 | 12 - 12 |
| சென்னை | 12 - 01 | + 09 | 12 - 10 |
| கும்பகோணம் | 12 - 01 | + 12 | 12 - 13 |
| காரைநகர் | 12 - 01 | + 11 | 12 - 12 |
| காசி | 12 - 01 | − 2 | 11 - 59 |

எல்லா இடங்களுக்குமுரிய சூரிய உச்சநேரத்தை ஒரே இடத்திற் குறித்து. அவ்வத் தேசத்திற்குரிய உதய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தமன நேரங்களை, அவ்வவ்விடங்களின் கீழ்க் குறிக்கும் வசதிக்காகப் பஞ்சாங்கங்களிற் சூரியஉச்ச நேரஞ் சுதேச நேரத்திற் குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வித்தியாசத்தை விளங்கிக் கொள்ளாவிடின் சாதகக் குறிப்பு எழுதுவதிற் பிழை உண்டாகும்.

மலாயாவிற் பிறந்த ஒரு பிள்ளையின் சென்ம லக் கினங் கணிக்கும்போது, பிறந்த இடத்திற்குரிய சூரி யோதய பொது நேரத்தைப் பிள்ளை பிறந்த பொது நேரத்திலிருந்து கழித்தே உதயாதி நாழிகை காண வேண்டும். சுதேச நேரத்துக்கும் பொதுநேரத்துக்கு முள்ள வித்தியாசந் தெரியாதவர்கள். பஞ்சாங்கத்திற் குறிக்கப்பட்டிருக்குஞ் சூரியோதய சுதேச நேரத்தை யும், பிள்ளை பிறந்த பொதுநேரத்தையும் வைத்து இலக்கினங் கணித்துப் பிழையான சாதகக் குறிப்பை எழுதுதல் நேரிடும். ஆதலாற் சோதிடம் படிப்போர் சுதேச நேரத்திற்கும் பொது நேரத்திற்குமுரிய வித்தியா சத்தை நன்றாக விளங்கிக்கொள்ளல் வேண்டும்.

## IV. பகற்போதில் அளந்து கண்ட அடிக்கு நாழிகை கணித்தல்

மணிக்கூட்டைக்கொண்டு நேரங் காண வசதியற்ற வர்கள் தமது நிழலினைத் தமது அடியால் அளந்து கணக்கிட்டு நேரமறிவர். சோதிட நூல்களிற் காணப் படும் விதிப்படி நிழலின் நீளத்தைக் கொண்டு கணிக்கப்படும் நேரம் மணிக்கூட்டு நேரத்திலும் அரை மணி நேரம் வரை ஏற்றத்தாழ்வு காட்டக்கூடும். ஒரே நேரத்தில், தத்தம் நிழலை அளக்கப்புகும் இருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளந்து கண்ட தொகை, தம்முட் பேதப்படுதலு முண்டு. இவ் வித்தியாசம் ஒரு அடி வரையில் ஆவது முண்டு.

பரகிதம் என்னுஞ் சோதிட நூலிற் பகற்போதில் அளந்து கண்ட அடிக்கு நாழிகை காண்பதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சுருக்கவழியைப் பின்வருமாறு கூறலாம்.

வேண்டிய தினத்தின் யாழ்ப்பாணப் *பகல் மானத்தை விநாடியாக்கி ஏழாற் பெருக்கிய தொகை துருவமாகும். இத் துருவத்தை அளந்து கண்ட அடி யிலிருந்து அத்தினத்துக்குரிய * அவச்சாயை பாதச் சாயை அடி வியடிகளைக் கழித்து, மீதத்தை வியடி யாக்கி இரண்டாற்பெருக்கி ξ840 ஐக் கூட்டிக்கண்ட தொகையாற் பிரித்துவரும் ஈவு நாடி, சேடத்தை 60 ஆற் பெருக்கி முன் தொகையாற் பிரித்து வரும் ஈவு விநாடி, இந்த நாடி விநாடிகளை முற்பகலாகில் உத யாதி சென்ற நாடி விநாடியெனவும், பிற்பகலாகில் அத்தமனமாவதற்குச் செல்லவேண்டி நின்ற நாடி விநாடி யெனவுங் கொள்க. யாழ்ப்பாணப் பகல்மானத்தில் அத்தமனமாவதற்குச் செல்லவேண்டி நின்ற நாடி விநாடி களைக் கழிக்க உதயாதி சென்ற நாடி விநாடிகளாம்.

---

* பகல்மானம் - சூரிய உதயந் தொடக்கம் அத்தமனம் வரையு முள்ள நேரம்.

* அவச்சாயை பாதச்சாயை அடி வியடிகள் 67. ஆம் பக்கம் பார்க்க

* 14 நாடி X 60 = 840 விநாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவச்சாயை பரச்சாயை அடி வியடிகள்

## வட அட்சம் 9 பாகை 40 கலையிலுள்ள யாழ்ப்பாணத்துக்கு

| மாதம் | 5 உ அடி. வியடி | 15 உ அடி. வியடி | 25 உ அடி. வியடி | மாதம் | 5 உ அடி. வியடி | 15 உ அடி. வியடி | 25 உ அடி. வியடி |
|---|---|---|---|---|---|---|---|
| சித்திரை | 0 . 37 | 1 . 01 | 1 . 23 | ஐப்பசி | 3 . 03 | 3. 31 | 3 . 58 |
| வைகாசி | 1 . 43 | 1 . 57 | 2 . 07 | கார்த்திகை | 4 . 21 | 4 . 40 | 4 . 53 |
| ஆனி | 2 . 12 | 2 . 11 | 2 . 05 | மார்கழி | 4 . 58 | 4. 56 | 4 . 47 |
| ஆடி | 1 . 52 | 1 . 36 | 1 . 17 | தை | 4 . 30 | 4 . 09 | 3. 43 |
| ஆவணி | 0 . 52 | 0 . 36 | 1 . 02 | மாசி | 3 . 18 | 2 . 49 | 2 . 19 |
| புரட்டாதி | 1 . 33 | 2 . 02 | 2 . 31 | பங்குனி | 1 . 50 | 1 . 21 | 0 . 53 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதாரணம்

யாழ்ப்பாணத்தில் மாசி மாதம் 26 ஆம் தேதி முற்பகல் $11\frac{1}{2}$ அடிக்குரிய சூரியோதயாதி நாடி விநாடி கணிக்கும் வகை :

| | நா - வி |
|---|---|
| அன்று யாழ்ப்பாணப் பகல் மானம் = | 29 - 28 |
| இதை விநாடியாக்க | 1768 ஆகும் |
| இதை ஏழாற்பெருக்கின் தொகை | 12376 ஆகும். |

இது துருவம் எனப்படும்.

மாசி மாதம் 25 ஆம் தேதி தொடக்கம் ஒரு நாளுக்குக் கிட்டத்தட்ட 3 வியடி வீதம் அவச்சாயை பாதச்சாயை குறைந்து வருவதை அட்டவணையிற் காணலாம். ஆகவே மாசி மாதம் 26 ஆம் திகதிக் குரிய *அவச்சாயை பாதச்சாயை 2 அடி 16 வியடி யாகும்.

அளந்து கண்ட 11 அடி 30 வியடியிலிருந்து மேற்கண்ட 2 அடி 16 வியடியைக் கழிக்க 9 அடி 14 வியடியாகும்.

| | | |
|---|---|---|
| 9 அடி 14 வியடி | = | 554 வியடி |
| இதை 2 ஆற் பெருக்க | | 1108 ஆகும். |
| இத்துடன் 840 ஐக் கூட்ட | | 1948 ஆகும். |

இத்தொகையால், துருவமாகிய 12376 ஐப் பிரித்து

* 2 அடி. 19 வியடி - 0 அடி. 3 வியடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த ஈவு 6. இது நாடி. சேடம் 688. இதை 60 ஆற் பெருக்க 41280 ஆகும். இதை மீட்டும் 1948 ஆற் பிரிக்க வரும் ஈவு 21. இது விநாடி. முற்பகலாதலால் இந்த 6 நாடி 21 விநாடி உதயாதி சென்ற நாடி விநாடிகளாம்.

| | | மணி | | மினிற்று |
|---|---|---|---|---|
| 6 நாடி 21 விநாடி | = | 2 | - | $32\frac{1}{2}$ |
| அன்றைய சூரிய உதயம் | = | 6 | - | 30 |
| | | 9 | - | $2\frac{1}{2}$ |

ஆகவே, இக் கணக்கின்படி $11\frac{1}{2}$ அடிக்கு 9 மணி $2\frac{1}{2}$ மினிற்று நேரமாக அமைகின்றது. ஆனால் அத் தேதியில் மணிக்கூட்டின்படி $8\frac{3}{4}$ மணிக்கு $11\frac{1}{2}$ அடி அளந்து காணப்பட்டது. இம் முறைப்படி கணிக்க, $17\frac{1}{2}$ மினிற் கூடிய நேரத்தைக் காட்டுவது காண்க.




*Fig 2.3 The above diagram depicts the actual position of Aries and the one used by followers of the Sidereal Zodiac. According to the Tropical Zodiac, however, $0^{\circ}$ Aries is always the position of the vernal equinox*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினொராம் பாடம்

# நட்சத்திர நேரமும், சுத்த இலக்கினபுடமும்

இலக்கினபுடங் கணிக்கும் முறையை ஆறாம் பாடத்திற் படித்தோம். அங்கு கூறப்பட்ட முறைப்படி கணிப்பது சரியெனினும், அம் முறையும் பூரண மானதன் றென்பது அறியவேண்டும். பிள்ளை பிறந்த நேரத்துக்குச் சமமான நட்சத்திர நேரத்தைக் கணித் தறிந்து, அந்நேரத்தை வைத்துக் கணிக்கும் இலக் கினபுடமே சுத்தமானதாகும். ஆகவே நட்சத்திரநேர மென்பதைப் பற்றிய விளக்கம் அவசியமாகும்.

பூமிச்சுழற்சிவேகம் 24 மணித்தியால மென்பத னாலும், இதனைச் சூரியனின் வேகமென வைத்துக் கணிப்பது பொருந்துமென்பதனாலும், சூரியன் ஒரு முறை கிழக்கே அடிவானத்தில் தோன்றி மீண்டும் அவ்விடத்தில் தோன்ற 24 மணி நேரஞ் செல்லு மெனலாம். ஆனால் சூரியனுடன் ஒரே நேரத்திலு திக்கு மொரு நட்சத்திரம், மறுநாட் சூரியனுதிக்க மூன்று மினிற்று ஐம்பத்தாறு செக்கனுக்கு முன் உதிக்கும்.

சூரியனது ஒருநாள் ஓட்டத்தை இருபத்து நான்கு மணி நேரமாகக் காட்டுவது சாதாரண வழக்கிலுள்ள கடிகாரம். இது மத்திம கடிகாரமென வழங்கப்படும். நட்சத்திரத்தின் ஒருநாள் ஓட்டத்தை இருபத்து நான்குமணி நேரமாகக் காட்டுவது நட்சத்திர கடிகார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென வழங்கப்படும். ஒவ்வொருநாளும், நட்சத்திர கடிகாரம் சாதாரண வழக்கிலுள்ள கடிகாரத்திலும், மூன்றுமினிற்று ஐம்பத்தாறு செக்கன் வேகமாய் ஓடும். வருடந்தோறும் *பங்குனி மாதம் இருபத்துமூன்றாந் தேதியில் சுதேச நேரம் மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு, இரு கடிகாரங்களும் ஒரே நேரத்தைக் காட்டும். இருபத்துநான்காந் தேதி சாதாரண கடிகாரம் பன்னிரண்டு மணி காட்டும் நேரத்தில் நட்சத்திர கடி காரம் பன்னிரண்டு மணி, மூன்றுமினிற்று, ஐம்பத்தாறு செக்கன் காட்டும். இருபத்தைந்தாம் தேதி மத்தியா னத்தில் நட்சத்திரக் கடிகாரம் பன்னிரண்டு மணி, ஏழு மினிற்று, ஐம்பத்திரண்டு செக்கன் காட்டும். இவ்வாறா கவே நாளுக்கு நாள், நட்சத்திர கடிகாரம் மூன்று மினிற்று ஐம்பத்தாறு செக்கன் வீதம் வேகமாய் ஓடி, மறு வருடம் பங்குனி மாதம் இருபத்து மூன்றாந்தேதி மத்தி யானம், இருகடிகாரமும் ஒரே நேரத்தைக் காட்டும். சில பஞ்சாங்கங்களில், ஒவ்வொருநாளுக்குமுரிய சுதேச மத்திம மத்தியானத்துக்குச் சமமான நட்சத்திர நேரங் குறிக்கப்பட்டிருக்கும்.

சாதாரண மணி இருபத்துநான்கு, நட்சத்திர மணி இருபத்துநான்கு மினிற்று நான்குக்குச் சமனாகும். ஆதலால், சாதாரண மணி ஒவ்வொன்றையும் நட்சத் திரமானத்தில் மாற்றப் பத்துச் செக்கன் வீதங் கூட்டல் வேண்டும்.

* March = மார்ச் மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு மணிக்குப்பின் பிறந்த ஒரு பிள்ளை யின் செனனகால நட்சத்திர நேரமறிய, நடுப்பகல் பன்னிரண்டு மணிக்குரிய அன்றைய நட்சத்திர நேரத்துடன், பன்னிரண்டு மணிக்குப் பின் சென்ற ஒவ்வொரு மணி நேரத்துக்கும் பத்துச் செக்கன் வீதம் அதிகரித்தலாலுண்டாகும் மணி மினிற்றுக்களைக் கூட்டுதல் வேண்டும். பன்னிரண்டு மணிக்கு முன்ன தாயின், பன்னிரண்டு மணிக்குஞ் செனனகாலச் சுதேச மணிக்குமுள்ள வித்தியாசத்தை, மேற்காட்டியவாறு நட்சத்திர நேர மணி மினிற்றுக்களாக்கிக் கழித்துக் கொள்க.

நட்சத்திர மத்தியான நேரம் எந்த அட்சத்திலும் ஒன்றாக இருக்கும். இதனால் பத்தாம் பாவ மத்திய புடம் எங்கும் ஒன்றாக இருக்கும். ஆனால் அட்ச மாறுபட்டுக்கியைய இலக்கின மாதிய பாவங்களின் புடம் மாறுபடும். இவ்வாறு அட்ச பேதத்துக்கியைய, * இலக்கினபுட வாய்பாட்டுப் புத்தகங்களைக் கொண்டு, இலக்கினபுடத்தைக் கணித்துக்கொள்க. இவ்வாறு கணக்கிட்டறிவதே சுத்த இலக்கினபுட மாகும்.

இதுவரை நாம் எடுத்துக்காட்டிய சாதகக் குறிப்பு, யாழ்ப்பாணத்திற் பிறந்த பிள்ளையின் குறிப் பாகும். பிறவிடங்களிற் பிறந்த பிள்ளைகளுக்குக் குறிப் பெழுத வேண்டின், அவ்விடங்களை மத்தியத்தான மாய்க் கொண்ட பஞ்சாங்கங்களின் றாயின், தேசாந் தர

* Tables of Ascendants by Lahiri



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்ஸ்காரஞ் செய்தே குறிப்புக் கணித்தல் வேண்டும். சம்ஸ்காரமாவது, அட்சமாதிய மாறுபாடுகளுக்கியை யச் சூரியோதயாத்த மன மாதிகளை மாற்றிக் கணித்தல்.

மலாயாவிற் பிறந்த ஒரு பிள்ளைக்குக் குறிப் பெழுதுவோர் பலர், மலாயா நேரத்திலிருந்து இரண்டு மணித்தியாலத்தைக் கழித்து, அந்நேரத்துக்குரிய யாழ்ப்பாணப் பஞ்சாங்க விவரங்களைக் கொண்டு, அக்குறிப்பை எழுதுவர். இப்படி யெழுதுவது பிழை யென்பதை ஈண்டு குறிப்பிட விரும்புகின்றோம். அப்பிள்ளை மலாயாவில் எந்த இடத்திற் பிறந்ததோ அந்த இடத்திற் சூரியோதயமும், அவ்விடத்துக்குரிய இராசிமானம் உதயாற்பர மாதியனவும் வேறாதலால், அவற்றைக் கணித்தறிந்து கணக்கிடலே சரியான முறையாகும்.




A = OBLIQUITY OF ECLIPTIC (23° 27')
B = MOON'S MAXIMUM DECLINATION
C = MOON'S LATITUDE (5°08')

**Fig 3.1 Diagram of how the Moon's Nodes are formed (reproduced from The Astrologer's Astronomical Handbook by Jeff Mayo).**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரண்டாம் பாடம்

# உதாரண விளக்கம்

### இலக்கினம் – I - மத்திமபுடம்

விகாரி வருஷம் சித்திரை மாதம் 2 உ (16.4.59) புதன்கிழமை பின்னிரவு, 4 மணி 34 மினிற்றில், $9^0$ 40' உத்தர அட்சமும், $80^0$ 0' கிழக்கு இரேகாம்சமுங் கொண்ட யாழ்ப்பாணத்திற் பிறந்த ஒரு பிள்ளையின் குறிப்புக் கணிக்கும் வகையைக் கீழே காண்க :

1. பஞ்சாங்கத்தில் இத்தேதிக்குக் குறிக்கப் பட்டிருக்குஞ் சூரியோதயம் 6 மணி 4 மினிற்று.
2. இந்த 6 மணி 4 மினிற்றிலிருந்து, பிள்ளை பிறந்த நேரம் வரையும் 22 மணி 30 மினிற்றுச் சென்றிருக்கிறது.
3. 22 மணி 30 மினிற்று 56 நாடி 15 விநாடிக்குச் சமமாகும். இதுவே உதயாதி செனனாந்தஞ் சென்ற நாடி விநாடியாம்.
4. அன்றைய உதயாற்பரம் நாடி 4 விநாடி 24 என்பது, கீழ்க்காணும் அட்டவணையில், மேட இலக்கினமென்ற வரிசையிற் குறிக்கப்பட்டி ருப்பது காண்க. இதனை உதயாதி செனனாந் தஞ் சென்ற நாடி விநாடியிலிருந்து கழிக்க வருவது, நாடி 51 விநாடி 51 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மேலே கண்ட நாடி 51 விநாடி 51, மேட ராசி முடிவுக்குமேல், பிள்ளை பிறந்த நேரம் வரை சென்ற நேரமாகும்.

6. மேட முடிவுக்குமேல் இலக்கினம் என்று குறிக் கப்பட்ட அட்டவணையில், கும்பத்தின் துருவம் நாடி 51 விநாடி 0 எனக் குறிப்பிட்டி ருப்பது காண்க. மேடமுடிவுக்குமேற் சென்ற நாடி 51 விநாடி 51 இல் இருந்து இத் துருவ மாகிய நாடி 51 விநாடி 0 ஐக் கழிக்க வரும் நாடி 0 விநாடி 51 மீனத்திற் சென்ற நேர மாகும்.

7. மீன ராசிமானத்தையும், அதிற் சென்ற நேரத் தையுங் கொண்டு, * விகித சமவிதிப்படி, இலக்கினபுடங் கணிக்க வருவது $5^{0}\ 58'\ 36''$ ஆகும்.

| | | நாடி | விநாடி |
|---|---|---|---|
| மீனராசிமானம் | = | 4 | 16 |
| | = | 256 | விநாடி |
| மீனராசியிற் சென்ற நேரம் | = | 51 | " |
| மீனராசிக்குரிய மொத்தப் பாகை | = | 30 | |

$$\therefore \text{மீனராசியிற் சென்றது} = \frac{30 \times 51}{256}$$

| | | பாகை | கலை | விகலை |
|---|---|---|---|---|
| | = | 5 | 58 | 36 |

| | இராசி | பாகை | கலை | விகலை |
|---|---|---|---|---|
| இலக்கினபுடம் | 11 | 5 | 58 | 36 |

எனக் குறிக்கப்படல் வேண்டும்.

* Proportion



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதாரண விளக்கங்களுக்கு

### 33 விகாரி வருஷம் சித்திரை மாதம்

| இங். உ | தமிழ் உ | வாரம் | திதி உதயாதி நா. வி. | பொது நேரம் ம. நி. | நட்சத்திரம் உதயாதி நா. வி. | பொது நேரம் ம. நி. |
|---|---|---|---|---|---|---|
| 14 | க | செவ். | சட்டி 42 54 | 11 13 | மிருகசீரிடம் 12 47 | 11 11 |
| 15 | உ | புத. | சத்தமி 46 23 | 12 37 | திருவாதிரை 18 18 | 1 23 |
| 16 | ங | வியா. | அட்டமி 48 10 | 1 19 | புனர்பூசம் 22 20 | 3 0 |

### இராசி நிலை

| | | | |
|---|---|---|---|
| புதன். கேது | இரவி | சுக். | குச |
| | உ. நா. வி. மாறல்<br>21 45 28 மிதுன<br>சுக்.<br>25 26 49 மேட<br>புத. | | |
| | | | |
| சனி | குரு | | இராகு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டிய பஞ்சாங்கப் பகுதி

## (1959 சித்திரை – வைகாசி)

| யோகம் உதயாதி நா. வி. | கரணம் உதயாதி நா. வி. | அகஸ் நா. வி. | மேட இலக்கினம் நா. வி. | அமிர்தாதி யோகம் நா. வி. |
|---|---|---|---|---|
| சோபனம் 11 32 | சவுலவம் 10 7 | 30 31 | 4 33 | சித்தம் 12 47 |
| அதிகண்டம் 1 10 | கரசம் 14 51 | 30 32 | 4 24 | சித்தம் |
| சுகர்மம் 11 52 | பத்திரை 17 31 | 30 34 | 4 15 | அமிர்தசித்தம் |

## மேட முடிவுக்கு மேல் இலக்கினம்

| | நா. வி. | | நா. வி. |
|---|---|---|---|
| மேடம் | 59 - 50 | துலாம் | 31 - 02 |
| இடபம் | 5 - 06 | விருச்சிகம் | 36 - 28 |
| மிதுனம் | 10 - 34 | தனுசு | 41 - 48 |
| கர்க்கடகம் | 15 - 52 | மகரம் | 46 - 38 |
| சிங்கம் | 20 - 54 | கும்பம் | 51 - 00 |
| கன்னி | 25 - 52 | மீனம் | 55 - 16 |

யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாங்கப்பகுதி - தொடர்ச்சி

## கிரகபாதசார அட்டவணை

| | உ | நா | வி | நட் | பாதம் | அம்சம் |
|---|---|---|---|---|---|---|
| **சூரிய பாதசாரம்** | | | | | | |
| சித்திரை | 4 | 20 | 43 | அசுவினி | 2 | இடபம் |
| **புத பாதசாரம்** | | | | | | |
| சித்திரை | 4 | 4 | 4 | உத்தரட்டாதி | 3 | துலாம் |
| **குரு பாதசாரம்** | | | | | | |
| சித்திரை | வருடாதி | | வக்கிரம் | | | |
| " | 11 | 50 | 58 | அனுடம் | 1 | சிங்கம் |
| **இராகு பாதசாரம்** | | | | | | |
| வைகாசி | 20 | 8 | 45 | அத்தம் | 2 | இடபம் |

| | உ | நா | வி | நட் | பாதம் | அம்சம் |
|---|---|---|---|---|---|---|
| **குச பாதசாரம்** | | | | | | |
| சித்திரை | 3 | 11 | 30 | திருவாதிரை | 2 | மகரம் |
| **சுக்கிர பாதசாரம்** | | | | | | |
| சித்திரை | 1 | 48 | 0 | கார்த்திகை | 4 | மீனம் |
| **சனி பாதசாரம்** | | | | | | |
| சித்திரை | 3 | வக்கிராரம்பம் | | | | |
| " | 27 | 25 | 0 | மூலம் | 4 | கடகம் |
| **கேது பாதசாரம்** | | | | | | |
| வைகாசி | 20 | 8 | 45 | உத்தரட்டாதி | 7 | விருச்சிகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கினம் II – சுத்தபுடம்

நட்சத்திர நேரத்தைக் கொண்டு இலக்கினபுடங் காண்பதே மிகச் சுத்தமான கணக்காகுமாதலால், அம்முறையுங் கீழே காட்டப்பட்டிருக்கின்றது. சோதிடங் கற்க ஆரம்பிப்போர், முன்னர்க் காட்டிய முறையிற் பூரண தேர்ச்சியடைந்த பின்பே இம்முறையை விளங்கத் தெண்டித்தல் நல்லது.

I. * *16-4-59 க்குரிய மத்தியான நட்சத்திர நேரம் 1 மணி 34 மினிற்று 38 செக்கனாகும்.*

II. *சென்ன சுதேச நேரமாகிய காலை 4 மணி 24 மினிற்றுத் தொடக்கம், மத்தியானம் 12 மணி 0 மினிற்று வரைக்குஞ் சென்ற நேரம் 7 மணி 36 மினிற்றாகும். ஆகவே மத்தியானத்துக்கு 7 மணி 36 மினிற்றுக்குமுன் செனனம் அமைந்ததாகும்.*

| | சாதாரண | நேரம் | | | நட்சத்திர நேரம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மணி | மினிற் | செக் | | மணி | மினிற் | செக் |
| | *1* | *0* | *0* | = | *1* | *0* | *10* |
| | *7* | *0* | *0* | = | *7* | *1* | *10* |
| | | *36* | *0* | = | | *36* | *6* |
| ∴ | *7* | *36* | *0* | = | *7* | *37* | *16* |

III. *இந்நேரத்தை முன் கண்ட மத்தியான நேரமாகிய 1 மணி 34 மினிற்று 38 செக்கனிற் கழிக்க வரும் 17 மணி 57 மினிற்று 22 செக்கன் செனன கால நட்சத்திர நேரமாகும்.*

---

* இலாகிரியுடைய பஞ்சாங்கம் 12 ஆம் பக்கத்திற் காண்க. Lahiri



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திர கடிகார வட்டம் 24 மணித்தியாலங் கொண்டதாயிருத்தல் பற்றி, கழிக்கப்பட வேண்டிய நேரங் கழிக்க வேண்டிய நேரத்திலுங் குறைந்திருத்தலின், கழிக்கப் பட வேண்டிய நேரத்துடன் ஒரு நாளுக் குரிய 24 மணி நேரங் கூட்டிக் கழிக்க.

IV. மேலே கண்ட செனனகால நட்சத்திர நேரத் துக்குரிய இலக்கினபுடம் இலாகிரியின் இலக்கின வாய்பாட்டுப் புத்தகத்தில் இராசி 11 பாகை 5 கலை 55 எனக் காணலாம். இம்முறைப்படி காணும் இலக்கினபுடத்திற் கும், முன்னர் நாம் கணக்கிட்டறிந்த புடத் திற்குஞ் சிறிது வித்தியாசமிருக்கின்றது. இப்படியுண்டாகும் வித்தியாசஞ் சில சமயம் முக்காற் பாகைவரையிருக்கும். நட்சத்திர நேரங்கண்டு அம்முறைப்படி இலக்கினங் கணிப்பதே சுத்தமான புடத்தைக் காட்டும்.

## நட்சத்திரம்

குறிப்பிட்ட சித்திரை மாதம் இரண்டாந் தேதி திருவாதிரை அந்தம் 18 நாடி 18 விநாடி ஆதலை அட்டவணையிற் காண்க. செனனநேரம் 56 நாடி 15 விநாடியாகும். செனன நேரத்திலிருந்து திருவாதிரை அந்தத்தைக் கழிக்க உண்டாகும் 37 நாடி 57 விநாடி, திருவாதிரைக்கு அடுத்த நட்சத்திரமாகிய புனர் பூசத்தில், பிள்ளை பிறந்த நேரம் வரை சென்ற காலமாகும். ஆகவே சென்ம நட்சத்திரம் புனர்பூச மென்பதும், அதிற் சென்ற நாடி 37 விநாடி என்பதும் பெறப்படும்.

---

* Tables of Ascendants by Lahiri Page 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்சத்திரபாதம்

புனர்பூச ஆரம்பம், திருவாதிரை அந்தமாகிய 18 நாடி 18 விநாடியாகும். இதுமுதல், புனர்பூச அந்த மாகிய மறுநாள் 22 நாடி 20 விநாடி வரையுள்ள * நாடி 64 விநாடி 2 புனர்பூசத்தின் பரமநாழிகையாகும். இப் பரமநாழிகையில் நான்கிலொரு பாகம், ஒரு பாதத்திற் குரிய நேரமாகுமாதலின், நாடி 16 விநாடி $\frac{1}{2}$ புனர் பூசத்தின் பாத நாழிகையாயமையும், புனர்பூசத்திற் சென்ற நேரமாகிய நாடி 37 விநாடி 57 இல் முதல் இரண்டு பாதங்களுக்குமுரிய நாடி 32 விநாடி 1 ஐக் கழிக்கவரும் நாடி 5 விநாடி 56 புனர்பூசம் மூன்றாம் பாதத்திற் சென்ற நாடி விநாடியாம்.

புனர்புசூம் மூன்றாம் பாதம் மிதுனராசிக்குரிய தாகும். சென்ம நட்சத்திரமென்பது சந்திரன் நின்ற நட்சத்திரமாதலின், சந்திரன் மிதுன ராசியிற் குறிக்கப் படல் வேண்டும்.

இலக்கினத்தையும் சந்திரனையும் இராசி சக்கரத் திற் குறிக்க அவை கீழ்க்காணுமாறமையும்.




* நாடி 60. விநாடி 00 - நாடி 18 விநாடி 18 + நாடி 22 விநாடி 20.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசி நிலை

இலக்கினத்தையுஞ் சந்திரனையுங் குறித்த இராசி சக்கரத்தில், ஏனைய கிரகங்களையும் 76 ஆம் பக்கத் திற் காட்டிய கிரகசார சக்கரத்தின்படி குறிப்பின், அவை கீழ்க்காட்டுமாறமையும் :

| | | | |
|---|---|---|---|
| ல. / கேது புதன் | சூரி | சுக்கி. | சந். செவ். |
| | | | |
| | இராசி நிலை | | |
| சனி | குரு | | இராகு |

21 ஆம் தேதி 45 நாடி 28 விநாடிக்கு முன்னுள்ள எந்த நேரத்துக்கும் அட்டவணையிற் காணுங் கிரக நிலை பொருந்தும். சக்கரத்தின் உள்வெளியில் 21 உ 45 நாடி 28 விநாடியில், மிதுன சுக்கிரனெனக் குறிக் கப்பட்டிருப்பதால், இந்தக் காலம் முதலாகவுள்ள காலங்களுக்குச் சுக்கிரனை மிதுனத்திலும், 25 உ 26 நாடி 49 விநாடி முதலாகவுள்ள காலங்களுக்குப் புதனை மேடத்திலுங் குறிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கின நவாம்சம்

$3^0$ $20'$ முதல் $6^0$ $40'$ வரையும் இரண்டாம் நவாம்சமாதலின், $5^0$ $55'$ இல் உள்ள இலக்கினத்தின் நவாம்சம், இரண்டாம் நவாம்சத்தி லமைகின்றதென்பது வெளிப்படும். மீனத்தின் இரண்டாம் நவாம்சம் சிங்கமாதலின், இலக்கின நவாம்சத்தைச் சிங்கத்திலிடுக.

## சந்திர நவாம்சம்

சந்திரன் நிற்கும் நட்சத்திரம் புனர்பூசம் மூன்றாம் பாதமாதலின், இராசிநிலையிற் சந்திரனை மிதுனத்திற் குறிப்பிட்டோம். புனர்பூசம் மூன்றாம் பாதம் மிதுனத்தின் ஒன்பதாம் நவாம்சமாகும். இதற்குரிய நவாம்ச ராசி மிதுனமாகும். ஆகவே சந்திரனை நவாம்ச சக்கரத்தில் மிதுனத்திலிடுக.

## நவாம்ச நிலை

இனி ஏனைய கிரகங்களின் நவாம்சநிலை குறிப்பதற்கு 78 ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையை உபயோகிக்க. அவ்வாறு குறிக்குமிடத்து, வக்கிரக் கிரகங்களும், இராகு கேதுக்களும், வலமிருந்து இடமாக ஓடுபவையாதலின், பஞ்சாங்கத்தில் இராசி நவாம்ச மாற்றங்கள், வலமிருந்து இடமாகக் குறிக்கப்பட்டிருப்பது கருதி அவற்றின் நவாம்சநிலை குறிக்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாதி வக்கிரகதியிலோடுங் குரு; சித்திரை மாதம் 11 ஆம் தேதி 50 நாடி 58 விநாடி தொடக்கம், சிங்க நவாம்சத்தி லிடப்படவேண்டுமென்பதை, அட்ட வணை காட்டும். இத்தேதிக்கு முன் இந்தச் சிங்க ராசிக்கு இடப்புறத்திலுள்ள கடகராசியிற் குரு குறிக் கப்படவேண்டும். ஆகவே 2 ஆம் தேதி பிறந்த பிள்ளை யின் குறிப்பிலுள்ள நவாம்ச சக்கரத்தில், குரு கன்னி ராசியிற் குறிக்கப்படவேண்டும். இதேபோல இராகுவின் நவாம்சம், இடபராசிக்கு வலப்புறத்தி லுள்ள மிதுனத்தி லிடப்பட வேண்டும்.

இவற்றைக்கருதி, அட்டவணைப்படி கிரகங்களை நவாம்ச சக்கரத்திலமைப்பின் அவை கீழ்க்காட்டு மாறமையும்.

| | | | |
|---|---|---|---|
| | சூரி<br>சுக் | | சந்திரன்<br>இராகு |
| | நவாம்ச நிலை | | |
| | | | ல / சனி |
| செவ்வாய்<br>கேது | | | புத<br>குரு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாதசாபுத்தி

### தசை

எடுத்துக்கொண்ட சாதகத்தின் சென்ம நட்சத்திரம் புனர்பூசமாகும். அதற்குரிய தசை குருதசையாகும். குருதசையின் மொத்த வருடம் 16.

| | |
|---|---|
| புனர்பூசத்திற்குப் பரமநாடி | 64 - 02 |
| அதிற் சென்ற நாடி | 37 - 57 |

$$\frac{\text{தசாவருடம்}}{\text{பரமநாடி}} \times \text{சென்ற நாடி} = \text{தசையிற் சென்ற வருடம்}$$

$$\frac{16 \times 2277 \text{ விநாடி}}{3842}$$

| | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| = | 9 | 5 | 24 |
| குருதசையில் சென்றது | 9 | 5 | 24 |
| " நின்றது | 6 | 6 | 6 |

### புத்தி

குருதசைக்குரிய 16 வருடங்களையும், அத் தசைக் குரிய புத்திகளுக்குப் பிரித்துக் கணக்கிட்டிருப்பது பஞ்சாங்கங்களிற் காணலாம்.

ஒன்பது கிரகங்களுக்குமுரிய மொத்தத் தசா வருடமாகிய 120 வருடத்தால், தசை நடக்கும் அக் கிரகத்தின் தசாவருடத்தைப் பிரித்து, எந்தக் கிரகத் தின் புத்திவேண்டுமோ, அந்தக் கிரகத்தின் தசா வருடத்தாற் பெருக்க, அக்கிரகத்தின் புத்தியின் கால அளவு வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குரு தசையில் சுக்கிரபுத்தி காணவேண்டின்:**

$\frac{16}{120} \times 20 = \frac{32}{12}$ வருடம் = 32 மாசம்

மேற்காட்டிய கணக்கை மனக்கணக்கு முறையிற் செய்யின் - தசாநாதனின் தசாவருடத்தைப் புத்தி நாதனின் தசாவருடத்தாற் பெருக்கி வருவதனைப் பத்தாற் பிரிக்க வருவது, அக்கிரகத்தின் புத்தி காலம் எத்தனை மாதமென்பதனைக் காட்டும்.

$\frac{16}{120} \times 20$ வருடம் - குருதசை சுக்கிரபுத்தி

$= \frac{16}{12 \times 10} \times 20 \times 12$ மாதம்

$= \frac{16 \times 20}{10}$ மாதம்

= 32.0 மாதம்

குருதசை சூரியபுத்தி = $\frac{16 \times 6}{10}$ = 9. 6 மாதங்களாகும்.

= 9 மாதம் 18 நாள்

குருதசையில் 9 கிரகங்களுக்குமுரிய புத்தியை மேற்காட்டியவாறு கணக்கிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதசை 16 வருடம்

| | | | | | | | வருடம் மாதம் நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| குரு புத்தி | $\frac{16 \times 16}{10}$ | = | $\frac{256}{10}$ | மாதம் | = | 25. 6 மாதம் | = 2 - 1 - 18 |
| சனி " | $\frac{16 \times 19}{10}$ | = | $\frac{304}{10}$ | " | = | 30. 4 " | = 2 - 6 - 12 |
| புதன் | $\frac{16 \times 17}{10}$ | = | $\frac{272}{10}$ | " | = | 27 . 2 " | = 2 - 3 - 6 |
| கேது " | $\frac{16 \times 7}{10}$ | = | $\frac{112}{10}$ | " | = | 11 . 2 " | = 0 - 11 - 6 |
| சுக்கிரன் " | $\frac{16 \times 20}{10}$ | = | $\frac{320}{10}$ | " | = | 32 . 0 " | = 2 - 8 - 0 |
| சூரியன் " | $\frac{16 \times 6}{10}$ | = | $\frac{96}{10}$ | " | = | 9 . 6 " | = 0 - 9 - 18 |
| சந்திரன் " | $\frac{16 \times 10}{10}$ | = | $\frac{160}{10}$ | " | = | 16 . 0 " | = 1 - 4 - 0 |
| செவ்வாய் " | $\frac{16 \times 7}{10}$ | = | $\frac{112}{10}$ | " | = | 11 . 2 " | = 0 - 11 - 6 |
| ராகு " | $\frac{16 \times 18}{10}$ | = | $\frac{288}{10}$ | " | = | 28 . 8 " | = 2 - 4 - 24 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கண்ட குருதசையிற் சென்றது வருஷம் 9 மாதம் 5 நாள் 24. குருதசையிலுள்ள புத்திகளைக் கிரமமாக, ஒன்றோடொன்று கூட்டிக் காணில் குரு. சனி. புதன், கேது, சுக்கிரன் ஆகிய இவ்வைந்து கிரகங்களின் புத்திகால மொத்தம் வருஷம் 10 மாதம் 6 நாள் 12 ஆகும். இதிலிருந்து குருதசையிற் சென்ற காலமாகிய வருஷம் 9 மாதம் 5 நாள் 24 ஐக் கழிக்க வரும் வருஷம் 1 மாதம் 0 நாள் 12 சுக்கிரபுத்தியில் இன்னுஞ் செல்ல வேண்டிய காலமாகும்.

இதுவரை நாம் கணக்கிட்டறிந்த விவரங்களை ஓரிடத்திற் சேர்த்தால் அவை அடுத்த பக்கத்திற் காணுமாறமையும்.

Modern science deels with the sensory, perceivable and measurable world. Astrology deals more with the astral world than the physical, with the energy behind form rather than the forms themselves and with the energy of the mind more so than the energy of matter. It tells us that the visible is the outcome of invisible forces, that the forms of things follow impulses in the mind. As such, it is not contrary to modern science, but is a subtler form of science which can be added to it. To appreciate it we cannot just take an outer view of things. **- David Frawley**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தீர்க்காயுஷ்ய மஸ்து

# ஜெனனக் குறிப்பு

**பெயர்** : *கிருபாமணி*

**இடம்** : *அளவெட்டி*

**காலம்** : *விகாரி வருஷம் சித்திரை மாதம் 2 உ புதன்கிழமை பின்னிரவு 4 மணி 36 மினிற்று (16.4.59)*

**சென்ம நட்சத்திரம்** : *புனர்பூசம் 3 ஆம் பாதம்*

**மகாதசை** : *குரு மகாதசை இருப்பு வருஷம் 6 மாதம் 6 நாள் உ 6*

**இலக்கினபுடம்** : *இராசி 11 பாகை 5 கலை 55*









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமாய்க் கணிக்கப்பட்ட ஒரு குறிப்புக்குப் பொதுப்பலன் காண்பதற்கு இன்றியமையாத பகுதிகளை, சோதிட வாசகம் இரண்டாம் புத்தகத்தில், வெளியிடலாமென்னும் எமது விருப்பம் பூர்த்தியாகத் தெய்வாநுகூலத்தை எதிர்பார்ப்போம்.

**சோதிட வாசகம் முதலாம் புத்தகம்**
**முற்றும்.**

1300 BC - AD 300

The period extending from 1300 BC until AD 300 was dominated by the Vedanga Jyotish, a separate body of work and an adjunct to the written laws of Vedic worship. In addition to containing the calendric and astronomical principles that were formulated and set down during the previous Vedic Age, the *Vedanga Jyotish* also describes life in India at that time. (A secondary function of most ancient religious texts has always been to illustrate daily life in a particular culture ; the Bible is a good example of this.)

The Vedanga Jyotish is referred to as one of the six limbs of the Vedas, with 'Vedanga' indicating anything relating to the Vedas and "Jyotish" meaning astronomy. Today, Jyotish, as it is taught in the universities in India, has come to include both the study of astronomical and astrological principles. In this time - period, however, it consisted solely of the precise mathematical rules affecting planetary movements, much of which was influenced by the discoveries of the Babylonians and the Greeks.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம்

## பஞ்சாங்கம்

பஞ்சாங்கமென்பது ஐந்து அங்கங்களெனப் பொருள்படும். இச்சொல், ஆகுபெயராக, இவ்வங்கங் களையுணர்த்தும் பிரசுரத்தைக் குறிக்கும், ஐந்து அங் கங்களாவன: வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கர ணம் என்பனவாம். பஞ்சாங்கவாயிலாக இவ்வைந்தின தும், இவற்றோடு தொடர்புள்ள பிறவற்றினதுங் கால எல்லைகளை அறியலாம்.

பஞ்சாங்கத்தின் பொது உபயோகம், எவர்க்கும் ஓரளவிற்கேனுந் தெரியவேண்டுமெனக் கருதிச் சோதிட வாசகத்துக்கு அநுபந்தமாக வெளியிடப்படும் வினா விடைமூலம், பஞ்சாங்க விடயங்களிற் சில எடுத்துக் காட்டப்படும்.

1. சதுர்யுகங்களென்றாலென்ன? அவை யாவை? சதுர்யுகங்களென்றால் நான்கு யுகங்கள். அவை யாவன: கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன.

2. மேற்கூறிய யுகங்களொவ்வொன்றிற்குமுரிய வரு டத் தொகைகளைக் கூறுக.

   I. கலியுகத்தில் நான்கு லட்சத்து முப்பத்தீரா யிரம் வருடம், (432,000 - நான்கு மூன்று, இரண்டுடன் மூன்று சுன், என மனதிற் பதித்துக்கொள்ளலாம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. துவாபரயுகத்தில் எட்டுலட்சத்து அறுபத்து நாலாயிரம் வருடம். (கலியுகத்திலுள்ள தொகையில் இரண்டு பங்கு 864,000 வருடங்கள்)

III. திரேதாயுகத்தில் பன்னிரண்டு லட்சத்துத் தொண்ணூற்றாறாயிரம். வருடம் (கலியுகத்திலுள்ள தொகையில் மூன்று பங்கு)

IV. கிருதயுகத்தில் பதினேழுலட்சத்து இருபத்தெண்ணாயிரம், வருடம் (கலியுகத்திலுள்ள தொகையில் நான்கு பங்கு)

3. வருடங்களெத்தனை?

பிரபவ வருடந் தொடங்கி அட்சயவருட மீறாகவுள்ள வருடங்கள் 60. இவற்றின் பெயர்களைப் பஞ்சாங்கங்களிற் கண்டுகொள்க.

4. அயனங்களெத்தனை? அவற்றின் காலவெல்லைகளைக் கூறுக:

உத்தராயணம், தட்சணாயனமென அயனங்களிரண்டாகும்.

தை மாதம் முதலாந்தேதி தொடங்கி ஆனி மாசம் முடியும்வரையுள்ள காலம் உத்தராயணம் எனப்படும்.

ஆடி மாதம் முதலாந்தேதி தொடங்கி மார்கழி மாதம் முடியும் வரையுள்ள காலம் தட்சணாயனம் எனப்படும். உத்தரம் - வடக்கு, தட்சணம் - தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயனம் - போக்கு. சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்வது போலத் தோற்றுங் காலம் உத்தராயணம் சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்வதுபோலத் தோற்றுங்காலந் தட்சணாயனம்.

5. *இருதுக்கள் எத்தனை? அவை யாவை?*

*இருதுக்கள் ஆறாகும். சித்திரை முதல் இவ்விரண்டு மாதங்கள் முறையே வசந்தருது (இளவேனில்) க்ரீஷ்மருது (முதுவேனில்) வர்ஷருது (கார்), சரத்ருது (கூதிர்) ஹேமந்தருது (முன்பனி), சிசிரருது (பின்பனி) என்னும் பெயர்களைப் பெறும்.*

6. *மாதங்களெத்தனை? அவை எத்தனை வகைப் படும்?*

*சித்திரை முதற் பங்குனியீறாகவுள்ள மாதங்கள் பன்னிரண்டாகும். இம் மாதங்கள் சௌரமாதங்களெனப்படும். அமாவாசையை அடுத்துவரும் பிரதமை முதல் அடுத்த அமாவாசை வரையுள்ள காலம் ஒரு சாந்திரமாதமாகும். இச் சாந்திர மாதங்கள் சைத்திரம் முதற் பாலகுனமீறாகவுள்ள பன்னிரண்டுமாம்.இம் மாதங்களின் பெயரைப் பஞ்சாங்கங்களிற் காணலாம்.*

7. *பக்கங்கள் (பக்ஷம்) எத்தனை? அவை யாவை? பக்கங்கள் இரண்டு.*

*அமாவாசையை அடுத்துவரும் பிரதமை முதலாகப் பூரணையீறாகவுள்ள காலம் பூர்வபக்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சுக்கிலபக்கம் எனவும். பூரணையை அடுத்துவரும் பிரதமை முதல் அமாவாசையீறாகவுள்ள காலம் அபரபக்கம் அல்லது கிருஷ்ண பக்கமெனவும் வழங்கப்படும்.

8. வாரங்கள் எத்தனை?

தமிழ், ஆங்கிலம், துருக்க வாரமுந் தேதியுந் தொடங்கி முடியும் நேரத்தைக் கூறுக.

வாரங்கள் ஏழு

தமிழ்த் தேதியும் வாரமும் அன்று சூரியோதயந் தொடக்கம் மறுநாட் சூரியோதயம் வரையுள்ள நேரத்தையும், ஆங்கிலத்தேதியும் வாரமும் தமிழ்த் தேதியின் முதனாளிரவு பன்னிரண்டுமணி தொடக்கம் அன்றிரவு பன்னிரண்டு மணிவரையுள்ள நேரத்தையும், துருக்கத்தேதியும் வாரமும் தமிழ்த்தேதியின் முதனாட் சூரிய அத்தமன முதல் அன்று சூரிய அத்தமனம் வரையுள்ள நேரத்தையுங் குறிக்கும்.

9. சுப அசுப வாரங்களெவை?

அசுபவாரங்களிற் செய்யக்கூடிய கருமங் களுளவா?

வாரங்கள்

1. * ஞாயிறு
2. திங்கள்
3. * செவ்வாய்
4. புதன்
5. வியாழன்
6. வெள்ளி
7. * சனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இவ்வடையாளமிடப்பட்டுள்ள வாரங்கள் அசுப வாரங்களாம். ஏனைய வாரங்கள் சுப வாரங்களாம். அசுபவாரங்களிற் சுபகருமங்கள் தொடங்கலாகாது. ஆயின் ஞாயிற்றுக் கிழமை மருந்துண்ணவும், செவ்வாய்க் கிழமை வழக்குத் தொடரவும். போருக்குச் செல்லவும், சனிக்கிழமை தவஞ்செய்யவும் நல்லன.

10. திதிகளெத்தனை? அவைகள் யாவை? அசுப திதிகள் எவை?

திதிகள் 15

அவையாவன:

1. பிரதமை
2. துவிதியை
3. திரிதியை
4. *சதுர்த்தி
5. பஞ்சமி
6. ஷஷ்டி
7. ஸப்தமி
8. *அட்டமி
9. *நவமி
10. தசமி
11. ஏகாதசி
12. துவாதசி
13. திரியோதசி
14. *சதுர்த்தசி
15. பூரணை அல்லது *அமாவாசை

* இவ்வடையாளமிடப்பட்டுள்ள திதிகள் பொதுவாக அசுப திதிகளாகும். திதிகளுள்ளுஞ் சில கருமங்களுக்கு விலக்கப்பட்டவை, வேறு சில கருமங்கள் செய்வதற்கு நல்லனவாம் இவ் வித்தியாசங்களைக் கால கதியில் விவரமாகக் கற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. நட்சத்திரங்களெத்தனை? அவை யாவை? பொதுவாக அசுப நட்சத்திரங்களாயுள்ளனவற்றைக் குறிப்பிடுக.

நட்சத்திரங்கள் 27.

அவையாவன:

| | | |
|---|---|---|
| 1. அசுவினி | 10. *மகம் | 19. மூலம் |
| 2. பரணி | 11. *பூரம் | 20. *பூராடம் |
| 3. *கார்த்திகை | 12. உத்தரம் | 21. உத்தராடம் |
| 4. உரோகிணி | 13. அத்தம் | 22. திருவோணம் |
| 5. மிருகசீரிடம் | 14. *சித்திரை | 23. அவிட்டம் |
| 6. திருவாதிரை | 15. *சுவாதி | 24. சதயம் |
| 7. புனர்பூசம் | 16. *விசாகம் | 25. *பூரட்டாதி |
| 8. பூசம் | 17. அனுஷம் | 26. உத்தரட்டாதி |
| 9. *ஆயிலியம் | 18. *கேட்டை | 27. இரேவதி |

*இவ்வடையாளமிடப்பட்டுள்ள நட்சத்திரங்கள் பொதுவாக அசுப நட்சத்திரங்களாயினும், மக நட்சத்திரம் விவாகஞ் செய்யவும், ஏனைய நட்சத்திரங்கள் வேறுசில கருமங்கள் செய்யவும் நல்லன வென்பது தெரிந்திருத்தல் வேண்டும்.

12. யோகங்கள் எத்தனை? அவை யாவை?

இந்த யோகங்களுள் எவை அசுபயோகங்களாகும்?

யோகங்கள் 27.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையாவன:

| | | |
|---|---|---|
| 1. *விஷ்கம்பம் | 10. *கண்டம் | *19. பரிகம் |
| 2. பிரீதி | 11. விருத்தி | 20. சிவம் |
| 3. ஆயுஷ்மான் | 12. துருவம் | 21. சித்தம் |
| 4. சௌபாக்கியம் | 13. *வியாகாதம் | 22. சாத்யம் |
| 5. சோபனம் | 14. ஹர்ஷணம் | 23. சுபம் |
| 6. *அதிகண்டம் | 15. *வஜ்ரம் | 24. சுப்ரம் |
| 7. சுகர்மம் | 16. ஸித்தி | 25.பிராம்யம் |
| 8. திருதி | 17. *வியதீபாதம் | 26. மாகேந்திரம் |
| 9. *சூலம் | 18. வரீயான் | 27.*வைதிருதி |

*அவ்வடையாளமிடப்பட்டுள்ள யோகங்கள் குறித்த சில நட்சத்திரங்களோடு கூடினால் மாத்திரம் அசுபயோகங்களாகும். அந் நட்சத்திரங்களை அவ்வவ் வியோகத்துக்கு நேராகக் கீழே காண்க.

| யோகம் | நட்சத்திரம் |
|---|---|
| விஷ்கம்பம் | அசுவினி |
| அதிகண்டம் | அனுஷம் |
| சூலம் | மிருகசீரிடம் |
| கண்டம் | மூலம் |
| வியாகாதம் | புனர்பூசம் |
| வஜ்ரம் | பூசம் |
| வியதீபாதம் | திருவாதிரை |
| பரிகம் | மகம் |
| வைதிருதி | சித்திரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மேலே குறிப்பிடப்பட்ட யோகங்களைத் தவிர வேறு யோகங்களுமுளவா? உளவாயின் அவை யாவை?

மேலே குறிப்பிடப்பட்ட 27 யோகங்களும் நித்திய நாம யோகங்களாகும். இவற்றைவிட அமிர்தாதி யோகங்கள் வேறுள.

அவையாவன:-

அமிர்தயோகம், சித்தயோகம், அமிர்தசித்த யோகம், * மரணயோகம், * பிரபலா நிஷ்ட யோகம் * நாசயோகம் என்பனவாம்.

* இவ்வடையாளமிடப்பட்டுள்ள யோகங்கள் நற்கருமங்களுக்காகாவாம். அமிர்தாதி யோகங்கள் வார நட்சத்திர சேர்க்கைபற்றி யுண்டாவன. ஆதலால் இவை வார யோகமெனப் பெயர்பெறும்.உதாரணமாக அசுவினி நட்சத்திரமும் புதன்கிழமையுஞ் சேர்தல் மரண யோகமாகும். அசுவினி நட்சத்திரமும் திங்கட்கிழமையுஞ் சேர்தல் சித்தயோகமாகும். அசுவினி நட்சத்திரமும் வியாழக்கிழமையுஞ் சேர்தல் அமிர்தசித்தயோகமாகும். வார திதி சேர்க்கைபற்றி யுண்டாவது நாசயோகமாகும். உதாரணமாகச் செவ்வாய்க்கிழமையுஞ் சப்தமியுஞ் சேர்வது நாசயோகமாகும்.

14. காரணங்களெத்தனை? அவை யாவை?

கரணங்கள் 11.

அவையாவன:

| | |
|---|---|
| 1. பவம் | 7. பத்திரை |
| 2. பாலவம் | 8. * சகுனம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கௌலவம்
4. தைதுலம்
5. கரஜம்
6. வணிஜம்
9. *சதுஷ்பாதம்
10. *நாகவம்
11. *கிம்ஸ்துக்நம்

*இவ்வடையாளமிடப்பட்டுள்ள கரணங்கள் அசுபகரணங்கள். அவை நற்கருமங்களுக்காகா.

15. திதியாதியுறுப்புக்களுக்குப் பக்கத்திற் பஞ்சாங்கங்களிற் குறிக்கப்பட்டிருக்கும் நேரம் எதைக் குறிக்கும்?

அங்கு குறிக்கப்பட்டிருக்கும் நேரம் அவை முடிகின்ற நேரத்தையே குறிக்கும். அவை தொடங்கும் நேரம் அவற்றிற்கு முன்னுள்ள திதியாதியவை முடியும் நேரமேயாகும்.

16. விகாரி வருஷம் சித்திரை மாதம் முதலாம் இரண்டாந் தேதிகளின் வாராதி விவரங்களைக் கீழே காண்க.

அவ்விவரங்களைக்கொண்டு அத்தேதிகளில் நற்கருமங்கள் செய்யலாமாவென்பதை நிச்சயிக்க.

விகாரி வருடஞ் சித்திரை மாதம் முதலாந் தேதியிற் சுபகருமங்கள் செய்யலாமாவென்பதை வாரம் ஆகியவற்றின் சுபாசுபங்களைக் கொண்டு ஆராய்வாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வாரம் | செவ்வாய் | அசுபவாரம் |
| 2. | திதி | சட்டி | சுபதிதி |
| | | நா. வி | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 3. | நட்சத்திரம் | 12. 47 வரை மிருகசீரிடம் சுபநட்சத் திரம் அதன்மேல் திருவாதிரை அசுப நட்சத்திரம் |
| 4. | யோகம் | 11. 30 வரை சோபனம் சுபயோகம் அதன்மேல் அதிகண்டம் அசுப யோகம் |
| 5. | கரணம் | 10.47 வரை கௌலவம் சுபகரணம் அதன்மேல் கரஜம் சுபகரணம் |
| 6. | அமிர்தாதி யோகம் | 12.47 வரை சித்தம் சுபயோகம் அதன்மேல் மரணயோகம் அசுப யோகம் |

விகாரி வருடஞ் சித்திரை மாதச் சுபமுகூர்த்தங் களைப் பஞ்சாங்கத்திற் பார்க்கும்பொழுது, முதலாந் தேதியில் ஒருமுகூர்த்தமுங் குறிக்கப்படாதிருக்கக் காணலாம். அதற்குரிய காரணத்தை மேலேயுள்ள அட்டவணை வெளிப்படையாகக் காட்டுகின்றது. ஆறு அங்கங்களில் முற்பகல் இரண்டு அசுபமானவை யாயும், பிற்பகலில் நான்கு அசுபமானவையாயு மிருத்தலே அதன் காரணமாகும்.

செவ்வாய்க்கிழமை வழக்குத் தொடர்வதற்கு நல்ல வாரமாதலாலும், அன்று 11 நாடி 30 விநாடி வரை ஏனைய ஐந்து அங்கங்களுஞ் சுபமானவை யாயிருத்தலாலும், வழக்குத் தொடர்வதற்கு முதலாந்தேதி காலை 11 நாடி 30 விநாடிவரை சுபகாலமாகுமென்பதை அறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகாரி வருடம் சித்திரை மாதம் - பஞ்சாங்க விவரம்

| தேதி | வாரம் | திதி உதயாதி | நட்சத்திரம் உதயாதி | யோகம் உதயாதி | கரணம் உதயாதி | அமிர்தாதி யோகம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | செவ்வாய் | நா. வி<br>சட்டி 42.54 | நா.வி<br>மிருகசீரிடம்<br>12.47 | நா.வி<br>சோபனம்<br>11.30 | நா.வி<br>கௌலவம்<br>10.7 | நா.வி<br>சித்தம்<br>12.47 அதன்மேல்<br>மரணயோகம் |
| 2 | புதன் | சப்தமி 46.23 | திருவாதிரை<br>18.18 | அதிகண்டம்<br>11.16 | கரஜம்<br>14.54 | சித்தம்<br>நாள்முழுவதும் |
| 3 | வியாழன் | அட்டமி 48.10 | புனர்பூசம்<br>22.20 | சுகர்மம்<br>11.52 | பத்திரை<br>17.31 | அமிர்தசித்தம் " " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை மாதம் இரண்டாந்தேதியை முன்போல ஆராய்வாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வாரம் | புதன் | சுபவாரம் |
| 2. | திதி | சப்தமி | சுபதிதி |
| | | நா. வி | |
| 3. | நட்சத்திரம் | 18.18 | வரை திருவாதிரை அசுப நட்சத்திரம் அதன்மேல் புனர் பூசம் சுபநட்சத்திரம் |
| 4. | யோகம் | 11.16 | வரை அதிகண்டம் அசுப யோகம் அதன்மேல் சுகர் மம் சுபயோகம் |
| 5. | கரணம் | 14.54 | வரை கரஜம் சுபகரணம் அதன் மேல் பத்திரை சுபகரணம் |
| 6. | அமிர்தயோகம் | சித்தம் | சுபயோகம் |

பஞ்சாங்கத்தில் கைவிசேஷம் முதலிய கருமங் களுக்கு இரண்டாந்தேதி பிற்பகலில் முகூர்த்தங் குறிக் கப்பட்டிருக்கின்றது. குறிக்கப்பட்ட முகூர்த்த நேரங் களில், மேற்காணும் ஆறு அங்கங்களுஞ் சுபமான வையா யமைவது காண்க.

17. மேலே குறிக்கப்பட்டிருப்பனவற்றை விட, நற்கரு மஞ் செய்யும்பொழுது கருத்திற் கொள்ள வேண் டிய சுபாசுப விடயங்கள் வேறுமுளவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம். வேறு விடயங்கள் பலவுள, பிரதானமாகக் கவனிக்க வேண்டியவற்றுள் இராகுகாலம், கால வோரை ஆகிய இரண்டையும் பஞ்சாங்கங்களிற் காணலாம். இராகு காலத்தையும், சனி, செவ்வாய், சூரியன் ஆகிய மூன்று கிரகங்களின் ஓரைகளையுந் தவிர்த்து நற்கருமங்களை ஆரம்பித்தல் நன்றென்பதை அறிக.

டேவிட் ∴ப்றோலி 16 ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்து வேதம், சோதிடம், வைத்தியம் கற்றார். நியூமெக்சிக்கோ (அமெரிக்கா) வில் ஆசிரமம் அமைத்து இந்திய மருத்துவம், சோதிடம் கற்பித்து பல்லாயிரம் மாணவரை ஆக்கித்தந்துள்ளார். அவர் வேதகாலக் கணிப்பு பற்றிக்கூறுவது. "இந்து காலக்கனிப்பு (Calendar) கி.மு. 3102 இல் தொடங்குகிறது. 60 ஆண்டுகள் மாறிமாறிவரும். இந்திய புராதன வானவியலர் ஆரிய பட்டர் தமது ஆரியபட்டீயம் என்ற நூலில் தமக்கு ஒரு வயதில் 60 ஆண்டுவட்டம் 60 ஆம் சுழற்சியை முடித்தது என்கிறார். (60 x 60 = 3600) இது கி.பி 500 ஆண்டைக் குறிக்கும். அவரலடய வானக் கணிதம் இக் காலத்துக்குரியது. இவ்வெண்ணிக்கையை விடாது தொடர்ந்து இந்தியர் கணித்து வந்தனர். அவைவெறும் கற்பனைக் கதை அன்று. திலகர் தம ஒறையன் "வேதங்களின் தொன்மை" என்ற நூலில் இந்தியக் காலக் கணிப்பை நிருபித்துள்ளார். கணிதத்தைச் சரி என்று ஏற்றுக்கொண்ட மேனாட்டார், அவ்வளவு காலத்துக்குமுன் இந்தியா இவ்வளவு தூரம் கணித ஆற்றல் பெற்றிருக்க முடியாது எனக் கூறினார். துவாரகை அழிவு தொல் பொருளாராய்ச்சியில் நிரூபிக் கப்பட்டுவிட்டதால், இந்திய வரலாற்றை – ஏன் உலக வரலாற்றையே 1000 வருடம் முன்னேதள்ள வேண்டும் என்கிறார் டேவிட் ∴ப்றோலி. David Frawley American institute of Vedic Studies p.o box 8357, Santafe, New Mexico, 87504 - 8357
1990 இல் வெளிவந்த புத்தகம் "The Astrology of Seers."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


- வானவியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1973
- வானியலும் சோதிடமும் இராம தியாகராசன் சென்னை, 1994
- தமிழ்ச் சோதிட நூல்களில் சாதகக் கணிப்பின் அடிப் படைகள் தனிப்பார்வை சாதக அலங்காரம் கே. D. ஆய் வேடு, 1984 ;
- பஞ்சாங்கம் ஏன்? எதற்கு? எப்படி? மு. ஶ்ரீனிவாசன்
- நீங்களும் ஜோதிடராகலாம் – கோ. மாரிமுத்து 1996,
- இலக்கியத்தில் சோதிடம் – முனைவர், தி. மகாலட்சுமி உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை 1996
- ஜாதகபாஸ்கரன் – வி. சபாதிஐயர் கொக்குவில் (4ஆம் பதிப்பு 955)
- ஜாதக அலங்காரம் மூலமும் விரிவுரையும் Dr. C. மகாலட்சுமி நர்மதாபதிப்பு (110 சுலோகம்)
- ஜாதக அலங்காரம் வடமொழி ஆங்கிலப்பதிப்பு – சுப்பிரமணிய சாஸ்திரி 1944.
- சாதக அலங்காரம் – தஞ்சைசரபோஜி நூலகம் (2004)
- நட்சத்திரசிந்தாமணி – Dr. சுந்தரவதாச்சாரியார் (2002)
- சோதிடம் கற்போம் சி. சிதம்பரநாதக்குருக்கள் – 2008


கடலங்குடி நடேசசாஸ்திரியாரின் பல சோதிட நூல்கள் அவரது மகளால் மீள்பதிப்பு செய்யப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவருக்கு ஏற்ற கட்டுரைகள்

*01. அருணோதயம் 2000*

"பொன் பூச்சொரியும் பொன்னொச்சி மரம்"

அளவெட்டி அருணோதயக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் (கனடா) வெளியீடு 2000.

பக்கங்கள் (130 - 134) நியதி தப்பாது சோதிடர் பொய்க்கலாம் – ச. பரநிருபசிங்கம்

*02. நல்லூரான் அருமருந்து*

சுன்னையூர் திருமதி சின்னப்பிள்ளை பொன்னுத்துரை அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு 2010. பக்கங்கள் 197 – 217)

"சோதிடவியல் ஓர் அறிமுகம்"

– பொ. சந்திரசேகரம் –

*03. கிரகதோஷம்*

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

'நல்லைக்குமரன். மலர் 2010'

*04. From the River of Heaven, David Frawley, 1997 (PP 49-61) The Science of Astrology*

*05. Gods, Sages and Vedic Kings. - 1995*

*i. Vedic cosmolog (pp 305 - 316)*

*ii. The yoga theory of Yukteswer pp/338 -340*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவெட்டித் தனிமுறைக் கோட்பாடு
## Alaveddi School of Thought



இரத்தினசபாபதி உபாத்தியாயர் பன்னாலை (தெல்லிப்பழை)யில் பிறந்து,கொல்லங்கலட்டியில் வசித்தவர். லண்டன் பல்கலைக்கழகப் புகுமுக (Matriculation) பரீட்சை சித்தி எய்தி, மல்லாகம் ஆங்கில பாடசாலையில் 1916 இல் படிப்பித்தவர். பின் மகாஜனக் கல்லூரியிலும் கற்பித்தார். பிறப்பிலே அமைந்த அதிவிவேகமும், இறையன்பும், அவருக்கு வேதாங்க சோதிடத்தில் மிக்க திறமையை அளித்தன. தம்முடன் நெருங்கிப் பழகிய பொ. கைலாசபதி, மு. சின்னப்பு, த. கணபதிப்பிள்ளை போன்றோருக்கும் சோதிடத்தில் ஆர்வம் பெறச் செய்தார். அளவெட்டித் தனிமுறைக் கோட்பாடு (School of Thought) என்று சொல்லக்கூடிய ஒரு மரபை ஏற்பத்திய மூலகர்த்தா.



மு. சின்னப்பு (1901 - நவம்பர் 1975) பயிற்றப்பட்ட ஆசிரியர். புவியியலில் திறமை பெற்றவர். இரத்தினசபாபதியவர்களிடம் சித்தியார் படிக்கப்போய், சமயம், சோதிடம் என ஆழ்ந்த அறிவைப் பெற்றார். ஆறங்கத்துள் ஒன்றான சோதிடத்தை, மூடர்களை ஏமாற்றும் வித்தையாகச் சிலர் நடைமுறைப்படுத்துவதைக் கண்டு மனம் நொந்தார். ஊருக்கு உபகாரமாகச் சாதகம் எழு தத் தொடங்கி, உதவியாளர்களை வைத்து பயிற்று விக்கும் நிலை வந்தது. நாடு முழுவதும், வெளிநாட்டிலும் புகழ் பரவியது. குடத்துள் விளக்காக இருந்தவர் சோதிட உலகம் போற்றும் பெரியவர் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



த. சின்னத்தம்பி (கணபதிப்பிள்ளை) அளவெட்டி ஆங்கில பாடசாலையை நாடறிந்த நடுநிலைப்பள்ளி ஆக்கியவர். 1918 -1939இல் அதிபராயிருந்து ஆங்கிலமும், விஞ்ஞானமும் கற்பித்தவர். அருணோதயக் கல்லூரியின் பொற்காலத்தைப் படைத்தவர். கொழும்பு ஆசிரிய கலாசாலையின் நன்மாணாக்கர். யோகர் சுவாமிகளுடன் இந்திய யாத்திரிகைகளுக்குச் சென்றவர். ஓராண்டு மணவாழ்க்கையால் ஒரு மகனைப் பெற்றார். மனைவியை இழந்து, பிரமசாரி போல் வாழ்ந்தார். இரத்தினசபாபதி உபாத்தியாயரிடம் பழகி, சமய சோதிட அறிவு மிகப் பெற்றார். அவரது அறிவைப் பகிர்ந்துகொண்ட சின்னப்பு அவர் பெயரை சோதிட வாசகத்தில் சேர்த்தார். மிக நெருங்கிப் பழகியவர்களுக்கு மட்டும் சாதகம் பார்த்து, வழிகாட்டுவார்.



இராமலிங்கம் கந்தையா (1921 - 2008) நெடுந்தீவில் பிறந்து, கரம்பனில் வசித்து, இரு ஆசிரியப் பயிற்சிகள் பெற்றவர். தந்தையார் நல்ல சோதிடராயிருந்தும் அவரிடம் படிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என வருந்தி, சின்னப்பு ஆசிரியரிடம் சீடனாகி, அக்கலையை ஆழமாகக் கற்றார். அவரது சுருக்கு வழிகள், நுட்பங்களெல்லாம் அறிந்து, அவர் ஆசியுடன் தனியே சோதிடக் கலையை வளர்த்தார். இடம்பெயர்ந்தாலும் எங்கும் தம் நூல்களைக் கொண்டு சென்றார். திருக்கணித பஞ்சாங்கம், கல்கத்தா லாஹிரி பஞ்சாங்கம் முதலியவற்றைப் பயன்படுத்தினார். சிதம்பரநாதக் குருக்களின் அன்புக்குப் பாத்திரமானார். உடையார்கட்டு அவர் இறுதிநாட்களைக் கழித்த இடமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மல்லாகத்தில் இரத்தினசபாபதி ஆசிரியரை 3 ஆம் வகுப்பில் சந்தித்தார் 6 ஆம் வகுப்பில் மற்றிக்குலேஷன் கணிதம் முழுதும் அவரிடம் படித்து இளம் வயதில் லண்டன் பரீட்சை எழுதினார். B. Sc பட்டம் பெற்று சைவாசிரிய கலாசாலை உப அதிபரானார். தமது அறிவு, அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள தமது உபாத்தியாயரை அண்டினார். குருபக்தியுடன் பழகினார். சோதிடம் கைவர, புத்தி விருத்தியில் அமிர்ததளம் வரை நோக்கு எட்டிய படியால் அதில் நேர்க்காட்சி யறிவு பெற்றார். தம்சாதகத்தை அகக்கண்ணால் நோக்கி, விளக்குவது கேட்போருக்கு வியப்பாயிருக்கும். வாகடத் தமிழ் - சோதிட, வைத்திய நூல்கள் - இலக்கணமின்றிப் பாடப்படுவதற்குக் காரணம் தர்மம் அறிந்த சித்தர் கீழே உள்ள மனிதர் நல்வாழ்வுக்கு உதவ, அவருக்கு விளங்கிய மொழியில் எழுதினர். நூல் நடைகொண்டு அவை தற்கால நூல்கள் என இகழக் கூடாது என்பார். தர்மம் நோக்கித் தம்மை நாடிய சிலருக்குமட்டும் சாதகம் பார்த்துச் சொன்னார்.



ஆ. பொ. பொன்னுத்துரை அளவெட்டியிற் பிறந்தவர் (1943 - ) சின்னப்பு ஆசிரியரிடம் ஆடி, 1961இல் உதவியாளராய்ச் சேர்ந்து, அணுக்கன் தொண்டராய் அவர் இறையடி சேரும் வரை கூட இருந்தார். அவர் நூல்கள், சோதிடக்கல்வி அனைத்துக்கும் வாரிசானர். இரத்தின சபாபதி ஆசிரியர் 17 ஆண்டுகள் வாழ்ந்த புனித குடிசையில் தொடர்ந்து இருந்து சோதிடப்பணி செய்தார். அவ் வீட்டை சின்னப்புவின் உறவினருக்குக் கொடுத்துவிட்டு, அயலில் தாம் வீடு கட்டி, 1995 இடப் பெயர்வுவரை தொடர்ந்து சேவை செய்தார். பல ஊர்களில் நூல்களுடன் சென்று, சில வற்றை இழந்தும், தன் கலையைத் தொடர்ந்து கற்று வருகிறார். சங்கரப் பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையில் வசிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச உத்தர அக்ஷாம்சத்திற் கேற்ற (நிரயன) மேஷாதி இராசிமான நாடி விநாடிகள்

| அ க்ஷ | மேட நா. வி | இட நா. வி | மிது நா. வி | கட நா. வி | சிங் நா. வி | கன் நா. வி | துலா நா. வி | விரு நா. வி | தனு நா. வி | மக நா. வி | கும் நா. வி | மீன நா. வி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31 | 3.51 | 4.44 | 5.37 | 5.46 | 5.58 | 5.48 | 5.53 | 5.51 | 5.10 | 4.13 | 3.33 | 3.26 |
| 32 | 3.48 | 4.41 | 5.38 | 5.58 | 5.53 | 5.50 | 5.56 | 5.51 | 5.10 | 4.12 | 3.29 | 3.24 |
| 33 | 3.45 | 4.40 | 5.38 | 6.00 | 5.55 | 5.53 | 6.00 | 5.53 | 5.09 | 4.10 | 3.28 | 3.19 |
| 34 | 3.42 | 4.39 | 5.39 | 6.01 | 5.59 | 5.54 | 6.04 | 5.55 | 5.09 | 3.59 | 3.32 | 3.17 |
| 35 | 3.40 | 4.39 | 5.38 | 6.06 | 6.01 | 5.59 | 6.04 | 5.56 | 5.09 | 4.02 | 3.22 | 3.14 |
| 36 | 3.37 | 4.36 | 5.40 | 6.07 | 6.04 | 6.03 | 6.07 | 5.57 | 5.09 | 4.01 | 3.19 | 3.10 |
| 37 | 3.34 | 4.34 | 5.39 | 6.10 | 6.08 | 6.04 | 6.10 | 5.59 | 5.08 | 4.00 | 3.16 | 3.08 |
| 38 | 3.31 | 4.33 | 5.41 | 6.13 | 6.11 | 6.09 | 6.12 | 6.01 | 5.06 | 3.57 | 3.12 | 3.04 |
| 39 | 3.29 | 4.30 | 4.42 | 6.15 | 6.14 | 6.12 | 6.16 | 6.03 | 5.05 | 3.54 | 3.09 | 3.01 |
| 40 | 3.25 | 4.29 | 5.41 | 6.18 | 6.18 | 6.15 | 6.20 | 6.04 | 5.05 | 3.51 | 3.06 | 2.58 |
| 41 | 3.22 | 4.28 | 5.42 | 6.21 | 6.20 | 6.19 | 6.23 | 6.07 | 5.04 | 3.49 | 3.02 | 2.53 |
| 42 | 3.18 | 4.26 | 5.44 | 6.23 | 6.25 | 6.23 | 6.26 | 6.08 | 5.04 | 3.44 | 2.59 | 2.50 |
| 43 | 3.17 | 4.23 | 5.44 | 6.26 | 6.29 | 6.26 | 6.30 | 6.11 | 5.03 | 3.42 | 2.55 | 2.44 |
| 44 | 3.12 | 4.21 | 5.45 | 6.30 | 6.32 | 6.29 | 6.33 | 6.13 | 5.02 | 3.39 | 2.51 | 2.43 |
| 45 | 3.07 | 4.19 | 5.46 | 6.33 | 6.36 | 6.35 | 6.37 | 6.16 | 5.00 | 3.36 | 2.52 | 2.33 |
| 46 | 3.03 | 4.16 | 5.47 | 6.36 | 6.41 | 6.39 | 6.42 | 6.16 | 5.01 | 3.32 | 2.48 | 2.29 |
| 47 | 3.01 | 4.14 | 5.49 | 6.40 | 6.45 | 6.43 | 6.46 | 6.20 | 4.59 | 3.28 | 2.38 | 2.27 |
| 48 | 2.55 | 4.11 | 5.49 | 6.44 | 6.50 | 6.47 | 6.51 | 6.22 | 4.58 | 3.24 | 2.34 | 2.25 |
| 49 | 2.50 | 4.08 | 5.51 | 6.48 | 6.54 | 6.52 | 6.54 | 6.26 | 4.57 | 3.20 | 2.30 | 2.20 |
| 50 | 2.46 | 4.04 | 5.53 | 6.52 | 6.59 | 6.57 | 6.59 | 6.30 | 4.55 | 3.16 | 2.24 | 2.15 |
| 51 | 2.40 | 4.01 | 5.54 | 6.57 | 7.04 | 7.02 | 7.04 | 6.34 | 4.54 | 3.11 | 2.19 | 2.10 |
| 52 | 2.35 | 3.57 | 5.54 | 7.03 | 7.08 | 7.09 | 7.09 | 6.37 | 4.53 | 3.06 | 2.14 | 2.05 |
| 53 | 2.29 | 3.53 | 5.56 | 7.08 | 7.15 | 7.13 | 7.16 | 6.40 | 4.52 | 3.00 | 2.08 | 2.00 |
| 54 | 2.22 | 3.49 | 5.57 | 7.13 | 7.21 | 7.18 | 7.25 | 6.45 | 4.49 | 2.55 | 2.02 | 1.54 |
| 56 | 2.04 | 3.44 | 6.02 | 7.26 | 7.35 | 7.31 | 7.36 | 6.56 | 4.44 | 2.43 | 1.49 | 1.40 |
| 58 | 1.54 | 3.27 | 6.08 | 7.42 | 7.48 | 7.46 | 7.49 | 7.09 | 4.33 | 2.33 | 1.34 | 1.27 |
| 60 | 1.36 | 3.11 | 6.15 | 7.59 | 8.06 | 8.01 | 8.06 | 7.23 | 4.28 | 2.12 | 1.22 | 1.11 |

*உத்தர அக்ஷாம்சத்தின் 7 ஆம் இராசியைத் தக்ஷிண அக்ஷாம்சத்திற்குக் கொள்க.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச உத்தர அக்ஷாம்சத்திற் கேற்ற (நிரயன) மேஷாதி இராசிமான நாடி விநாடிகள்

| அ கூஷ | மேட நா. வி | இட நா. வி | மிது நா. வி | கட நா. வி | சிங் நா. வி | கன் நா. வி | துலா நா. வி | விரு நா. வி | தனு நா. வி | மக நா. வி | கும் நா. வி | மீன நா. வி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 4.52 | 5.16 | 5.24 | 5.04 | 4.42 | 4.37 | 4.52 | 5.10 | 5.24 | 5.04 | 4.42 | 4.07 |
| 1 | 4.50 | 5.15 | 5.24 | 5.06 | 4.44 | 4.39 | 4.54 | 5.17 | 5.24 | 5.02 | 4.40 | 4.35 |
| 2 | 4.48 | 5.14 | 5.25 | 5.07 | 4.46 | 4.41 | 4.56 | 5.18 | 5.23 | 5.01 | 4.38 | 4.33 |
| 3 | 4.47 | 5.13 | 5.25 | 5.08 | 4.48 | 4.43 | 4.57 | 5.19 | 5.23 | 5.00 | 4.36 | 4.31 |
| 4 | 4.45 | 5.12 | 5.25 | 5.10 | 4.50 | 4.45 | 4.59 | 5.20 | 5.23 | 4.58 | 4.34 | 4.29 |
| 5 | 4.43 | 5.11 | 5.26 | 5.11 | 4.52 | 4.47 | 5.01 | 5.21 | 5.22 | 4.57 | 4.32 | 4.27 |
| 6 | 4.41 | 5.10 | 5.26 | 5.12 | 4.54 | 4.49 | 5.03 | 5.22 | 5.22 | 4.56 | 4.30 | 4.25 |
| 7 | 4.39 | 5.09 | 5.26 | 5.14 | 4.56 | 4.51 | 5.05 | 5.23 | 5.22 | 4.54 | 4.28 | 4.23 |
| 8 | 4.37 | 5.08 | 5.27 | 5.16 | 4.58 | 4.53 | 5.07 | 5.24 | 5.21 | 4.52 | 4.26 | 4.21 |
| 9 | 4.36 | 5.07 | 5.27 | 5.17 | 5.00 | 4.55 | 5.08 | 5.25 | 5.21 | 4.51 | 4.24 | 4.19 |
| 10 | 4.34 | 5.06 | 5.28 | 5.18 | 5.02 | 4.58 | 5.10 | 5.26 | 5.20 | 4.50 | 4.22 | 4.16 |
| 11 | 4.32 | 5.05 | 5.28 | 5.20 | 5.04 | 5.00 | 5.12 | 5.27 | 5.20 | 4.48 | 4.20 | 4.14 |
| 12 | 4.30 | 5.04 | 5.28 | 5.21 | 5.06 | 5.02 | 5.14 | 5.28 | 5.20 | 4.47 | 4.18 | 4.12 |
| 13 | 4.28 | 5.03 | 5.29 | 5.22 | 5.08 | 5.04 | 5.16 | 5.29 | 5.19 | 4.46 | 4.16 | 4.10 |
| 14 | 4.26 | 5.02 | 5.29 | 5.23 | 5.10 | 5.06 | 5.18 | 5.30 | 5.19 | 4.45 | 4.14 | 4.08 |
| 15 | 4.24 | 5.01 | 5.29 | 5.24 | 5.12 | 5.08 | 5.20 | 5.31 | 5.19 | 4.44 | 4.12 | 4.06 |
| 16 | 4.23 | 5.00 | 5.30 | 5.26 | 5.15 | 5.10 | 5.21 | 5.32 | 5.18 | 4.42 | 4.09 | 4.04 |
| 17 | 4.21 | 4.59 | 5.30 | 5.27 | 5.17 | 5.13 | 5.23 | 5.33 | 5.18 | 4.41 | 4.07 | 4.01 |
| 18 | 4.19 | 4.58 | 5.31 | 5.29 | 5.19 | 5.15 | 5.25 | 5.34 | 5.17 | 4.39 | 4.05 | 3.59 |
| 19 | 4.17 | 4.56 | 5.31 | 5.31 | 5.21 | 5.17 | 5.27 | 5.36 | 5.17 | 4.37 | 4.03 | 3.57 |
| 20 | 4.15 | 4.55 | 5.32 | 5.33 | 5.23 | 5.20 | 5.29 | 5.37 | 5.16 | 4.35 | 4.01 | 3.54 |
| 21 | 4.13 | 4.54 | 5.32 | 5.36 | 5.26 | 5.22 | 5.31 | 5.38 | 5.16 | 4.32 | 3.58 | 3.52 |
| 22 | 4.11 | 4.53 | 5.32 | 5.38 | 5.28 | 5.24 | 5.33 | 5.39 | 5.16 | 4.30 | 3.56 | 3.50 |
| 23 | 4.08 | 4.52 | 5.33 | 5.39 | 5.31 | 5.26 | 5.36 | 5.40 | 5.15 | 4.29 | 3.53 | 3.48 |
| 24 | 4.06 | 4.51 | 5.33 | 5.40 | 5.34 | 5.29 | 5.38 | 5.41 | 5.15 | 4.28 | 3.50 | 3.45 |
| 25 | 4.04 | 4.49 | 5.33 | 5.42 | 5.37 | 5.32 | 5.40 | 5.43 | 5.15 | 4.26 | 3.47 | 3.42 |
| 26 | 4.02 | 4.48 | 5.34 | 5.44 | 5.39 | 5.34 | 5.42 | 5.44 | 5.14 | 4.24 | 3.45 | 3.40 |
| 27 | 4.00 | 4.47 | 5.34 | 5.46 | 5.41 | 5.36 | 5.44 | 5.45 | 5.14 | 4.22 | 3.43 | 3.38 |
| 28 | 3.57 | 4.46 | 5.34 | 5.48 | 5.43 | 5.39 | 5.47 | 5.46 | 5.14 | 4.20 | 3.41 | 3.35 |
| 29 | 3.55 | 4.45 | 5.35 | 5.50 | 5.45 | 5.41 | 5.49 | 5.47 | 5.13 | 4.18 | 3.39 | 3.33 |
| 30 | 3.54 | 4.43 | 5.35 | 5.52 | 5.47 | 5.44 | 5.50 | 5.49 | 5.13 | 4.16 | 3.37 | 3.30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர்



பொ.சந்திரசேகரம் சுன்னாகத்தில் பிறந்து ஸ்கந்த வரோதயக் கல்லூரியில் பயின்று யாழ் பல்கலைக் கழகத்தில் இந்துநாகரிகத்துறையில் பட்டப் படிப்பை முடித்தார்.

அங்கேயே விரிவுரையாளராகி சைவசித்தாந்தத்தில் முது கலைமாணிப்பட்டமும் பெற்று முதுதத்துவமாணி ஆய்வினை மேற் கொண்டுள்ளார்.

சில சைவமகாநாடுகளில் ஆய்வுரைகள் ஆற்றியுள்ளார். க.பொ.த (உ/த) பரீட்சைக்குரிய இந்துநாகரிகத்துறையில் பாடத் திட்டத்தில் சோதிடமும் வானவியலும் என்ற புதிய அம்சம் சேர்த்துக் கொள்ளப்பட்டபோது இவரே ஆசிரியர்களுக்கு அதனை அறிமுகம் செய்ய அழைக்கப்பட்டார். இந்த வகையில் இத்துறையில் ஆர்வம் கொண்டுள்ளார்.

ஆ.சபாரத்தினம்

பாரதி பதிப்பகம், 430 , காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம். 021 222 3081

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org